
# கொடுமைகள் தாமே அழிவதில்லை



செ. கணேசலிங்கன்

குமரன் புத்தக இல்லம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
Jaffna Central College Library
12049

JAFFNA CENTRAL COLLEGE
LIBRARY

| A/C. No | CLASS. No |
| --- | --- |
| 12049 | |


கொடுமைகள் தாமே அழிவதில்லை

# கொடுமைகள் தாமே அழிவதில்லை

## சிறுகதைகள்

செ.கணேசலிங்கன்

குமரன் புத்தக இல்லம்

கொழும்பு – சென்னை

2014

**கொடுமைகள் தாமே அழிவதில்லை**
**செ.கணேசலிங்கன் எழுதியது**

முதற்பதிப்பு : 1974

**மீளச்சு : 2014**

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-06, தொ.பே. 011 2364550,
மி. அஞ்சல்: kumbhlk @gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 06

**Kodumaikal Thame Alivathilai** (Short Stories)
by: Se.Ganeshalingan

First Edition : 1974

Reprint : 2014

*Published by* Kumaran Book House
39, 36th Lane, Colombo - 06, Tel. - 011 2364550, E-mail: kumbhlk@gmail.com
3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

*Printed by* Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo - 06, Tel. - 011 2364550, E-mail: kumbhlk@gmai.com

**வெளியீட்டு எண் : 313**

ISBN 978 - 955 - 659 - 123 - 1

தொழிலாள விவசாயிகளுக்கும்
புரட்சிகர கலை இலக்கியம் படைப்பதில்
ஆர்வமுள்ள அனைவருக்கும் காணிக்கை

# முன் குறிப்பு

இச் சிறு கதைகள் 'குமரன்' மாத இதழ்களில் வெளி வந்தவை, யாவும் 1974இல் எழுதப்பட்டவை. படைக்கப் பட்ட மாதங்களை உள்ளடக்கப் பகுதியில் காணலாம்.

இவற்றில், 12 சிறுகதைகளை கொழும்பு அடிப்படை ஆய்வு நிலையத்தவர் (Centre for Radical Studies) சிங்களத் தில் மொழிபெயர்த்துள்ளனர். 'புதிய சுலோகங்கள்' என்ற தலைப்பில் இந்நூலும் இம் மாதமே வெளிவந்துள்ளது என்பதையும் மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கதைகள் குறைந்த வார்த்தைகள் கொண்டவை, அடிப் படை சித்தாந்தத்தைத் தாங்கியவை, 1974இன் பொருளாதார, அரசியல், சமூக மாற்றங்களைப் பிரதிபலிப்பவை என்றும் வழமையான சிங்கள இலக்கியத்தின் 'அம்பலப்படுத்தும்' போக்கு மட்டும் அல்லாது சரியான அறிவும், கலைத் தன்மை யும், செயலூக்கமும் கொண்டு சிறுகதைக்கு புது இலக்கண மாக விளங்குகின்றன என்றும் அந்நூலின் முன்னுரையில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் கதைகள் தரும் சித்தாந்தக் குறிப்புகளை பொருளடக்கப் பகுதியிலேயே குறிப்பிட் டுள்ளனர். (அவற்றைப் பின் பகுதியில் வெளியிட்டுள்ளோம்).

இக்கதைகளை தொழிலாளர், விவசாயிகள், புரட்சிகர கலை இலக்கிய ஆக்கத்தில் ஆர்வமுள்ளவர் முன் படைப்பதில் பெருமைப்படுகிறேன்.

கொழும்பு
28.10.74

**செ. கணேசலிங்கன்**

## உள்ளே........


| | | |
|---|---|---|
| *01.* | கொடுமைகள் தாமே அழிவதில்லை | *1* |
| *02.* | பாணும் கேக்கும் | *8* |
| *03.* | கவர்ச்சியும் காதலும் | *14* |
| *04.* | ஊமைகள் | *19* |
| *05.* | நகர் வலம் | *26* |
| *06.* | சட்டங்கள் எங்களுக்கே | *31* |
| *07.* | புதிய சுலோகங்கள் | *39* |
| *08.* | பூசாரிகள் | *47* |
| *09.* | என்னதான் செய்துவிடப் போகிறார்கள்? | *52* |
| *10.* | புதிய சந்திப்பு | *59* |
| *11.* | குற்றவாளிகள் | *66* |
| *12.* | இரு முனைகள் | *71* |
| *13.* | வெற்றி பெற முடியாது | *79* |
| *14.* | பட்டினி கிடந்து சாகமாட்டோம் | *85* |
| *15.* | கடமையும் சேவையும் | *90* |
| *16.* | தாலியும் போய்விடும் | *97* |
| *17.* | கூப்பன் வேண்டாம் | *105* |

# கொடுமைகள் தாமே அழிவதில்லை

"என்ன மூப்பன் என்னைத் தெரியேல்லையா?"

கட்டிய ஓலைக்கீற்றில் நெருப்பை மூட்டி, தீச்சு வாலையை எழுப்பும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்த சின்னப்பன் என்குரல் கேட்டு ஒரு தடவைநிமிர்ந்து, கூர்ந்து என்னைப் பார்த்தான். முதுமையைக் காட்டும் தாண்ட கண்கள், உச்சி வழுக்கையாயிருந்த போதும் பின்புற மயிர்களைச் சேர்த்து முடிந்த சிறு முடி, தூர்ந்த காதில் கடுக்கன்கள் பெண்டூலம் போல ஆடிக் கொண்டிருந்தன.

"ஓ தம்பியா, என்ன அப்பிடிக் கேட்கிறியள். எப்ப வந்தது? என்னசேதி"

தன் வேலையை விட்டு சின்னப்பன் எழுந்து நின்றான். முதுகில் சிறிது கூனல் விழுந்து விட்டது. துடை தெரியுமளவிற்கு செம்பாட்டு மண்ணிறமான வேட்டியை உருட்டிச் செருகியிருந்தான். வெற்றிலை தொடக்கம் சில்லரைக்காசு வரை அடங்கிய அவனது வழமையான கொட்டைப் பெட்டி இடையில் தெரிந்தது.

இவர் என்ரை பெண்சாதிக்கு மாமன்முறை. அதுதான் செத்த வீட்டுக்காக வந்தனான்'

"அப்ப நான் கொஞ்சம் கவனமெடுத்தெல்லோ எரிக்க வேணும். பச்சை விறகு நெருப்புப்பிடிக்கத் தொட முடியாது.

நெருப்பாலைதான் சுடமுடிகிறது. தம்பிக்கு சொந்தமெண்டு கோபம் வராதெண்டு நினைக்கிறன்.' சின்னப்பு மீண்டும் தொடர்ந்து சொன்னான். நான் சிரித்தேன்.

சுடலைக்கு வந்த அனைவரும் மடத்திலே ஆறியிருந்து சுருட்டுப் புகைத்து சுடலைஞானம் தொடக்கம் அரசியல்வரை கதைத்துக் கொண்டிருந்தனர். ஒரு பகுதியில் விறகு வெட்டிய பள்ளர், பாடை கட்டிய கட்டாடி, மேளமடித்த பறையர், கொள்ளிசுமந்த பரியாரி ஆகிய அனைவருக்கும் கணக்குத் தீர்த்துக் கொண்டிருந்தனர்.

"என்ன கதை பேசிறாய்,"

"இப்பெல்லாம் வாய்க்கொழுப்பு மெத்திப் போச்சு"

"கொடுத்ததை வாங்கிக் கொண்டு போ"

"அந்தக் காலமெல்லாம் மலையேறிப் போச்சு"

"கூலி என்றால் கூலி தான் வை"

"வேண்டா மென்றால் அவன் போகட்டும் விடுங்கோ"

"நாளைக்கு அவன் வராவிட்டாலும், கேட்டதைக் குடுத்துத் துலையுங்கோ"

வழமையான குரல்கள் அங்கும் கேட்டுக்கொண்டிருந்தன. சின்னப்புவின் உதவியாட்களும் கூலிபெற ஓடி விட்டனர். சின்னப்பு மட்டும் எதிலும் ஆசைப்படாதவன் போல தன் கடமையைச் செய்து கொண்டிருந்தான். நான் அவனது தனிமையைப் பார்த்தே பேசச் சென்றேன். அவன் வீட்டுக்கு நான் முன்னர் அடிக்கடி செல்வேன். அவன் மகன் செல்லனும் நானும் நீண்டகால நண்பர்கள்.

"என்ன சின்னப்பு இந்த வயதிலையும் ஏனிந்த தொழில், வீட்டிலை கிடக்கிறதுதானே."

"என்ரை மேன் சொல்லிறமாதிரியே தம்பியும் சொல்லு கிறாய். ஆனால் நான் ஒரு காரியமாகவே இன்னும் இந்தத் தொழிலை விட்டு விடவில்லை".

பேசிக்கொண்டிருந்த போதும் சின்னப்பன் தன் தொழி லில் கவனமாகவேயிருந்தான். சிராய் விறகுகளை எரியும் சுவாலை யின் மேல் வைத்து நெருப்பைப் பலப்படுத்திக் கொண்டி ருந்தான்.

"அது என்ன காரியமென்று நான் அறியப்படாதோ"

நான் ஆர்வத்தோடு கேட்டேன்.

"நான் எவருக்கும் சொன்னதில்லை தம்பி. உமக்கு மட்டும் நான் சொல்லத்தான் வேண்டும். இந்த ஊரிலை இன்னும் ஒரு நாலைஞ்சு பேர் இருக்கிறாங்கள். அவங்களை நெருப்பு மூட்டி என்ரை கையாலே நான் சாக முந்தி எரிச்சுப் போட்டுப் போக வேணும். அது ஒண்டுதான் ஒரே ஆசை எனக்கு மிஞ்சியிருக்கு. இதே தொழிலை இன்னும் நான் தொடர்ந்து செய்யிறதற்கும் அது தான் காரணம்."

சின்னப்பன் வேலையைவிட்டு எழுந்து நின்று சொன் னான். அவ்வேளை அவனது வார்த்தையில் அழுத்தத்தையும் கண்களில் சினத்தையும் கண்டேன். சவமெரிக்கும் சாதாரண இழிசனர் எனக் கருதப்படும் மனிதனான சின்னப்பனுக்கும் வாழ்க்கையில் இலட்சியமொன்று இருக்கிறது என் நெஞ்சில் ஆர்வம் மேலிட்டது.

"யார் அந்த நாலு ஐஞ்சுபேர்?"

"தம்பிக்குத் தெரியாதா என்ன? அவங்கள் தானே இந்த ஊரின் பெரிய புள்ளியள். வெள்ளைவேட்டிக் கள்ளன்கள். அயோக்கிய உலுத்தன்கள். சாதி வெறியிலையும் பணத்தி மிரிலையும் அவங்கள் செய்த கொடுமைகள். அப்பப்பா.

தாங்கள் சாகமாட்டம் என்று இன்னும் நினைத்துக் கொண்டி ருக்கிறான்கள்''

"நான் தானே இப்ப ஊரிலையேயில்லை. கொழும்போடு இருக்கிறன். பேருகளைக் கொஞ்சம் சொல்லன். அறிந்திருக் கிறது எங்களுக்கும் பயன்படும்."

"அவன் அடைவு கடைச் செல்லையா, எங்க உழைப்பை யெல்லாம் வட்டியாய் வாங்கிச் சேர்த்து வைத்துக் கொண்டு எங்களையே அடக்கிக் கொண்டிருக்கிறான். அவன் கேட்பவர் களெல்லாம் வேலைக்குச் செல்லவேணும். அவன் கொடுப்பது தான் கூலி. எத்தினை குடிசைகளுக்கு தீ வைச்சான். புளியடி ஆறு முகத்தான் சங்கக்கடையை பிடிச்சு வைச்சுக்கொண்டு என்ன ஆட்டமெல்லாம் ஆடுகிறான். கூப்பன் துண்டுகளை வெட்டி வைத்துக்கொண்டு சாமான்களை கள்ள விலையில் வித்துப் போடுகிறான். எங்களுக் கெல்லாம் இடையிடை தான் ஏதேன் கிடைக்கும். புது வீடு கட்டி மேளுக்கு ஒரு இஞ்சினீயரைத் தேடிக்கொடுத்துவிட்டான். பழைய சேர்மன் பொன்னையா ஆடின ஆட்டங்கள் இன்னும் குறையவில்லை. வயதுபோன நேரத்திலை, தான் சாதியே பார்ப்பதில்லை என்று சொல்லிக்கொண்டு வடிவான பள்ளப் பெட்டைகளைப் பார்த்து வீட்டுக்கு வேலைக்கு வைச்சிருக்கிறான். என்ன தம்பி, நாடு முன்னேறிவிட்டுது என்று சொல்லுறியள், இன்னும் நாங்கள் இஞ்சை அடிமையாய்த்தானே வாழுறம் என்ன சுகத்தைத்தான் கண்டன். அவங்கள் சொல்லுறபடிதான் வோட்டும் போடவேண்டியிருக்கு. ஒரு மாற்றத்தையும் நான் காணேல்லை."

தீச்சுவாலைகள் எழுந்து கொண்டிருந்தன. காற்றோடு சேர்ந்து பிணப்பெட்டியிலேயே தீ பிடித்துக் கொண்டது.

சின்னப்புவின் முக்கிய பங்கு வேலை முடிந்துவிட்டது. நிமிர்ந்து எழுந்தான்.

"மாற்றம் ஏற்படேல்லை என்று சொல்லிவிட முடியாது சின்னப்பு. உனக்கே வயதாய்ப் போச்சு. உவங்கள் சாகு மட்டும் நீ இன்னும் எத்தினை வருஷம் காத்திருக்கப் போறாய். அதுக்கு முந்தி நீ செத்துப் போனால்...."

இழுத்துக் கொண்டே சொன்னேன். சின்னப்பு சிறிது நேரம் சிந்தித்தபடி மடியை அவிழ்த்து, கொட்டைப் பெட்டியை விரித்து ஒரு சிறு புகையிலைத் துண்டை எடுத்து வாயில் போட்டு சப்பிக் கொண்டே சொன்னான்:

"பஞ்சம் தான் வந்தாலும் நான் அப்பிடி கெதியாய் செத்துப் போகமாட்டன். ஆனால் செல்லன் என்ன சொல்லுகிறான் தெரியுமா?"

"தகப்பனுக்கிருக்கும் வஞ்ச மெல்லாம் மகனுக்கு இருக் காதா என்ன. அவன் என்ன சொல்லுகிறான்?"

செல்லன் என் நண்பனே. அவனை நான் நன்கு அறிவேன். அவனது கோட்பாடுகளை நான் அறிவேன். ஆயினும் அதை சின்னப்பு மூலமே அறிய விரும்பினேன்.

"பழம் தானே விழுந்துவிடும், கொடுமைகள் தானே அழிந்து விடுமென்று ஏனப்பா காத்திருக்க வேணும். நாங்கள் உவங்களை விழுத்திவிடுறம். நீ வேணுமென்றால் எரிச்சுப் போடு என்று சொல்லுகிறான்."

சின்னப்பு சிரித்துக் கொண்டே சொன்னான். அது வெறும் கேலிச் சிரிப்பல்ல. பெருமையும் பயமும் கலந்த சிரிப்பு. மகனின் துணிச்சல், அவனுக்கு அதனால் ஏதாவது நேர்ந்து விடுமோ என்ற அச்சம். இரண்டும் சிரிப்பில் ஒளிர்ந்தது.

“ஏனாம் அவன் இன்னும் காரியத்தைச் செய்யாமலிருக் கிறான்.”

அவன் மூலமாகவே, அவனது பார்வையில் விஷயங்களை அறிய முயன்றேன்.

“அவன் எனக்கு முழுக்க விளங்காத தத்துவமெல்லாம் பேசிறான். ஊரவைக்குள்ளேயே அவங்கள் மேலை வெறுப்பு ஏற்படச் செய்து அவங்களைக் கொண்டே செய்விக்க வேணு மென்று சொல்லுறான். ஏதோ கூட்டம் கூட்டமென்று இர விரவாய்த் திரிகிறான்.”

“மாற்றம் ஏற்படேல்லை என்று சொல்லாதை சின்னப்பு. நீ நினைப்பதிலும் பார்க்கப் பெரிய, பெரிய மாற்றங்களைச் செய்யத்தான் அவங்கள் வேலை செய்யிறாங்கள். உலகத்திலை எத்தனையோ நாடுகளிலை நடத்திய அனுபவங்களை வைச்சுக் கொண்டுதான் முயற்சி செய்யிறாங்கள்.”

“ஏதோ நானும் உயிரோடை இருக்கேக்கையே இதையெல் லாம் பார்த்திட்டுச் சாகவேணும். இவங்களையும் எரிச்சுப் போட்டுச் சாக வேணும்.”

“காலையிலை வாறனென்று செல்லனிட்டைச் சொல்லி வைக்கிறியா? நான் வரப் போறன். நீ கூலி வாங்கேல்லையா?”

“சரி தம்பி. நானும் வாங்க வாறன். நான் அவங்கள் தாறத்தை வாங்கிப் போடுவன். நான் நல்ல விசுவாசமானவன் என்று உவங்கள் நினைக்கிறாங்கள். என்ரை நெஞ்சுக்கை எரியிற நெருப்பையும் வஞ்சத்தையும் உவங்கள் அறிய மாட்டான்கள்.”

சின்னப்புவும் என்னோடு வந்தான்.

“காசை வாங்கி என்ன செய்வாய்?”

“இன்றைக்கு அந்த அயோக்கியனோடு நேர்ந்த இந்தப் புண்ணியவானை எரித்த நாளெல்லா. கள்ளுப்போட்டு கொண்டாட வேணும். தம்பிக்கு சொந்தக் காரனென்று கோபம் வந்து விடுமோ”

“அப்படி ஏன் நினைக்கிறாய்? எனக்குத் தெரியாதா என்ன, என் பெண்சாதியை திருப்திப்பண்ண வேணும். வேறும் வேலைகளிருக்கு. அதுக்குத்தான் வந்தனான்”

மடத்தடிக்கு வந்து விட்டோம். நான் பிரிந்தேன்.

“இந்தா, சின்னப்பு வந்திட்டான், அவன்தான் உவங் களுக்கை ஒரு நல்ல குடிமகன். கூலியைக்குடுங்கோ”

ஒருவர் சொன்னார்.

“காலையிலை காடாத்தப் போறம். நிண்டு நீறுபூக்கும் வரை எரிச்சுப் போட்டுப் போக வேணும்.”

மற்றொருவர் அதிகாரக்குரலோடு கூறினார். சின்னப்பு நயத்தோடு சொன்னான்:

“என்ன நயிந்தை, நான் அப்பிடிக் கவனிக்காமல் விடுவனா, எங்கடை ஊருக்கை எத்தனை அதிகாரத் தோடைவாழ்ந்த பெரிய கமக்காரனெல்லே. நான் சும்மா விடுவனா. ஒரு எலும்புத்துண்டு விடாமல் வடிவாய் எரிச்சுப் போட்டுத்தான் ராத்திரிக்குக் கள்ளுப் போடப் போவன்”

(பெப்.1994)

# பாணும் கேக்கும்

நீண்டு வளைந்த பாண் கியூ இன்னும் அசையத் தொடங்க வில்லை. மாலை ஐந்து மணி தொடக்கம் கால்கடுக்க நின்ற மக்கள் பொறுமையிழந்து புகைந்துகொண்டிருந்தனர். அரசி யல் தலைவர்களை வைது தமது ஆத்திரங்களை பகிர்ந்து கொண்டிருந்தனர்.

"காகம் திட்டி மாடு சாவதில்லை"

யாவையும் கேட்டுக் கொண்டிருந்த பாலசிங்கம் என்ற தொழிலாளி புறுபுறுத்தவர்களுக்குப் பதிலாகச் சொன்னான். யாவரும் அவனைச் சிறிது விசித்திரமாகப் பார்த்தனர். அழுக் கேறிய சேட், அரையிலே வெள்ளைச் சாரம், வாராத தலை, இரண்டு மூன்று நாட்களாக சவரம் செய்யாத முகம், தெளிவு, கோபம், சிந்தனை யாவும் தொக்கி நிற்பது போன்ற கண்கள்.

"பாணுக்காக கியூவில் தவங்கிடக்க நாங்கள் என்ன தவறு செய்தோம்?"

காற்சட்டைப்போட்டு நரை விழுந்த கிழவர் ஒருவர் திரும்பிப் பார்த்தபடியே கேட்டார்.

"கியூவில் நின்று இந்த அரசு பதவிக்கு வர ஓட்டுப் போட்டீர் களே, அதை மறந்துவிட்டீர்களோ? இப்போது கியூவில் நின்று பாண் வாங்க வைத்திருக்கிறார்கள்'.

பாலசிங்கம் உடனே பதில் கொடுத்தான். முன்புறம் நின்றோரும் பின்புறம் தொடர்ந்தோரும் அவனையே பார்த் தனர். ஒவ்வொருவர் முகத்திலும் வெவ்வேறு வித உணர்வுகள் மிளிர்வதை மாலைமங்கல் ஒளி காட்டியது.

"நான் இந்தக் கட்சிக்கு வோட்டுப் போடவில்லை"

நடுத்தர வகுப்பைச் சார்ந்த பெண் ஒருத்தி கையிலேயிருந்த தன் நீண்ட பர்ஸை ஆட்டியபடியே கோபத்தோடு பதில் கூறினாள்.

"யு. என். பி. மட்டும் இப்படி கியூவில் நிற்க வைத்திராது என்று எப்படிக் கூறமுடியும்?"

பாலசிங்கம் கேட்டான்.

"அவர்கள் ஒருக்காலும் இப்படிச் செய்திருக்க மாட்டார்கள் என்று நான் நிச்சயமாய் சொல்லுவேன்'.

பின்புறம் நின்ற மற்றோர் பெண்மணி முதற்பெண்ணுக்கு ஆதரவளித்தாள்.

"இதுக்குமட்டுமா கியூ, வேறு எதுக்குத்தான் இல்லை. வேறை சாமான் ஏதாவது கிடைக்குதா? சீனி, அரிசி, மா எல்லாமே ஒன்றுக்கு மூண்டு விலை. நாங்களெல்லாம் அரை வயிறு கால் வயிறாய் காயிறம். இவர் இந்த கவண்மேன்றுக்கு வக்காலத்துப் பிடிக்கிறார்".

முன்புறமாக மற்றோர் குரல்.

"நான்கூட எழுபத்தைந்து சதம் கடன் வாங்கிக்கொண்டு வந்தனான். பாண் கிடைக்காட்டால் ராத்திரிக்குப் பட்டினி தான்".

அழுக்கான உடையோடு நின்ற ஒல்லியான சிங்களப் பெண் ஒருத்தி கூறினாள்.

சிறுவர், சிறுமியர் கூட கியூவில் நின்றனர். அவர்கள் எதையும் நன்கு புரியாதவர்களாக வேடிக்கை பார்த்தனர்.

பாண் கொண்டுவரும் "வான்" வந்துவிட்டதாக ஒரு பையன் கத்தினான். கியூவில் நின்ற யாவரும் உசாராகினர். இடையே ஈவு இல்லாதபடி நெருங்கி நின்றனர்.

"சுதந்திரம் வந்த நாள் தொடக்கம் ஐந்து வருடத்திற் கொருக்கால் வோட்டுப் போட்டீங்களே, ஏதாவது விடிவு வந்ததா?"

பாலசிங்கம் கேட்டான், அவனது வினா பலருக்குப் புரியவில்லை. நிலைமை மோசமாகிக்கொண்டு செல்வதை யாவராலும் அசைபோட்டுப் பார்க்க முடிந்தது.

"வேறை என்னதான் எங்களால் செய்ய முடியும்?"

ஒரு குரல் ஒலித்தது.

"யு என்.பி.க்கும் தமிழரசுக்கட்சிக்கும் நீங்கள் வோட்டுப் போட வில்லையா?"

"ஏதாவது ஒரு கட்சிக்குப் போட்டுத்தானே தீரவேண்டும்".

"வோட்டுப்போட்டுப் பிரச்சனை தீராது என்பது இப் பொழுதாவது தெரிகிறதுதானே"

பாலசிங்கம் அழுத்திக்கூறினான், ஒரே மௌனம்.

கியூ அசைந்துகொண்டு முன்னேறியது.

"ஒரு றாத்தல் பாண் 75 சதம். அதை வாங்குவதற்கு இரண்டு மணித்தியால உழைப்பு நேரத்தை கியூவில், கிடைக்குமா கிடைக்காதா என்ற ஏக்கத்தோடு செலவிடவேண்டும். நாடு எப்பிடித்தான் முன்னேறப் போகிறதோ?"

பொறுமை கடைப்பிடித்த மற்றொருவர் கூறினார். அவர் வெள்ளைக் காற்சட்டையும் சேட்டும் அணிந்திருந்தார்.

பொருளாதாரத்தில் பட்டம் பெற்று எங்கோ வங்கியிலோ, அரசாங்கத்திலோ பணி புரிபவராக இருக்குமோ என பாலசிங்கம் எண்ணிக்கொண்டான்.

"வர்க்க சமுதாயத்தில் மனிதனுடைய அடிப்படைத் தேவையான உணவுப் பிரச்சனையைக் கூடத் தீர்க்க முடியாது என்பதை இது எடுத்துக் காட்டவில்லையா? உழைப்பதற்கு தயாரான பல லட்சம் இளைஞர்களே இந்நாட்டில் வேலை யில்லாது தெருச் சுற்றி அலைகிறார்கள். வேலை செய்து களைத்துவிட்டு வந்த நாங்கள் கால் கடுக்க கியூவிலே வேறை நிற்க வேண்டியிருக்கிறது."

கந்தசாமி கூறி முடிப்பதற்கிடையில் ஒரு பெண் பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்னாள்:

"இதற்கெல்லாம் நாம் என்ன தவறு செய்தோமோ தெரியவில்லை"

"வோட்டுப் போட்டால் சோஷலிசம் தானே வந்துவிடும் என்று தொழிலாளர்களே நம்பி இருந்து விட்டார்கள். ஆளும் வர்க்கத்தவர் தோள்மேல் ஏறி சவாரி செய்யப் பார்க்கின்றனர்."

"எத்தனை ஆண்டுகள் இன்னும் சவாரி செய்யப் போகி றார்கள்?"

ஒரு குரல் இடை மறித்து எழுந்தது.

"இந்த நாட்டுத் தொழிலாள விவசாயிகள் கண் விழித்து எழும்பும் வரைதான் சவாரி செய்ய முடியும். இன்று அவர்கள் நெஞ்சமெல்லாம் நீறுபூத்த நெருப்பாகி விட்டது. மக்கள் எதையும் மறந்து விடலாம், உணவில்லாது பட்டினி கிடக்க நேரிட்ட ஒரு நேரத்தை என்றும் மறந்து விடமாட்டார்கள்."

கந்தசாமி கூறிக் கொண்டிருந்த போதும் கியூவின் முன் புறத்தில், பேக்கரியின் வாயிலில் மக்களின் நெருக்கமும்

ஆரவாரமும் கேட்டதும், கியூ உடைந்து மக்கள் பேக்கரி வாசலைமுற்றுகையிட்டுக் கொண்டிருந்தனர்.

"என்ன? என்ன? என்ன நடந்தது?"

ஒரே வினா

"பாண் முடிந்து விட்டதாம். கேக்கும் பனிசும்தான் இருக்குதாம்"

எல்லோர் முகத்திலும் ஏமாற்றம், ஆத்திரம். கியூவை விட்டு சிலர் பின்னேற, பலர் முன்னேறிக் கொண்டிருந்தனர்.

"பாண் இல்லாவிட்டால் கேக்கைச் சாப்பிடுங்கள் என்று பிரெஞ்சுப் புரட்சியின் முன்னர் அந்நாட்டு அரசி சொன்னாளாம். சரித்திரப் புத்தகத்தில் படித்ததை இப்போது நேரில் கேட்கிறோம்"

மனமுடைந்த ஒருவர் கொதிப்போடு கூறினார்.

"அதே காலமும் சூழ்நிலையும் இங்கும் வந்து விட்டதையே இவர்களும் கூறுகிறார்கள். ஆனால் ஒன்று கேக் வாங்கப் பணம் இல்லை என்று போய் விடமாட்டோம். கேக்கைப் பறித் தெடுத்துச் சாப்பிடுவோம்"

கந்தசாமியும் முன்னேறினான். பேக்கரியை முற்றுகை யிட்டது போல கூட்டம் முண்டியடித்துக் கொண்டு நின்றது. பேக்கரியின் முதலாளியும் வேலையாட்களும் கூட்டத்தைத் தள்ளி வெளியேற்ற முயன்றனர். நெருக்கம் அதிகரித்ததே யல்லாது குறைந்தபாடாக இல்லை. உள்ளே பனிஸ் வாங்கியவர்கள் வெளியேறவும் முடியவில்லை.

பேக்கரிக்காரரர் விற்பனையை நிறுத்திவிட்டு மக்களை அகற்றிக் கதவுகளை அடைக்க முயன்றனர். முடியவில்லை. உள்ளேயிருந்த கண்ணாடிப் பெட்டிகள் உடையும் சத்தம் கேட்டது.

கூட்டத்தை உடைத்துக்கொண்டு சிலர் வெளியேறிக் கொண்டிருந்தனர். கந்தசாமியும் வெளியே மூச்சிழுத்தபடி வந்தான். அவன் கையிலே நசிந்து பிய்ந்த ஒரு கேக் பக்கெட் இருந்தது.

தூரத்தில் பொலிசார் கூட்டத்தை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்தனர்.

*(பெப்.1974)*

# கவர்ச்சியும் காதலும்

"உமா, உன் கண்கள் மான்விழி"

"ம்.... ம்...."

"உம் நடை அன்ன நடை"

"ம்.... ம்...."

"உன் கழுத்து வளைந்த மூங்கில்"

"ம்.... ம்....."

"உன் மேனி தங்கம்"

"ம்..... ம்...."

"உன் ஸ்கின் ரோசா இதழ் போல் மெதுமையானது"

"ம்..... ம்..."

எதையும் சிரத்தையோடு கேட்காதவளாக உமா புத்தகமும் கையுமாக எட்டி நடந்து கொண்டிருந்தாள். தெரிந்த தோழியர் எவரும் அண்மையிலில்லை. சந்திரன் அவளை விடாதவனாக தொடர்ந்து வர்ணித்தபடியே நெருங்கி நடந்தான்.

"உன் அசைவு கூட அழகாயிருக்கிறது"

"ம்..... ம்......"

"உன் உதடுகள் கொவ்வைப்பழம்"

"ம்.....ம்....."

“அவற்றைக் கடிக்க ஆசையாயிருக்கு”

உமா அவனைத் திரும்பிப் பார்த்தாள். சந்திரன் ஒரு கணம் துணுக்குற்றான். ஆயினும் அன்று கிடைத்த சந்தர்ப்பத்தை விட்டுவிட விரும்பாதவனாக அவன் அப்படியே நின்றான்.

“உமா, கோபம் கூட உன் முகத்திற்கு அழகாயிருக்கிறது”

“மிஸ்டர், உமக்கு வேறை வேலையில்லையா?”

“உன்னைவிட உலகத்தில் வேறு முக்கிய வேலை எதுவு மில்லை”

“ஒரு பெண்ணைப் பார்த்து இப்படியெல்லாம் புகழ உமக்கு வெட்கமில்லையா?”

“என் காதலியை வர்ணிப்பதில் என்ன வெட்கம். நீங்ககூட விரும்பித்தானே கேட்டுக் கொண்டு வந்தீர்கள்”

“உன் பைத்தியக்காரத்தனத்தையும் பேடித்தனத்தையும் தான் கேட்டுக் கொண்டு வந்தேன்”

சந்திரனுக்கு முகத்தில் அறைந்தது போலாயிற்று. இவள் என்ன விசித்திரமான பெண் என எண்ணிக் கொண்டான். தான் அவளை நினைத்து ஏங்கிய நாட்களையும் நண்பனோடு செய்த சபதத்தையும் ஒரு கணம் நினைத்துக் கொண்டான். தோல்வி யடையாதவனாக பதில் கூறினான்:

“உன் அழகும் கவர்ச்சியும்தான் என்னை அப்படி ஆக்கி விட்டது”

“இப்படி வர்ணித்து விட்டால் நான் மயங்கி விடுவேன், கட்டித் தழுவுவேன் என்று நினைத்தீரோ”

உமாவின் பேச்சு அவனுக்கு உறைப்பாகவே இருந்தது.

“இல்லை, என் காதலை ஏற்று கலியாணம் கட்டுவாய் என நம்புகிறேன்.”

“பெண்களைப் பார்த்துப் பல்லை இளிச்சுப் புகழுகிற வனையா நான் கலியாணம் கட்டுவேன்?”

“இல்லை, அப்பா அம்மா தலையை நீட்டடி என்று சொல்லுபவனை”

“நாங்கள் அத்தனை அடிமைகளாக மாட்டோம், பெண் களைப் பேடிகளைப்போல புகழ்ந்து பொம்மையாக வீட்டில் வைத்திருக்கிறவர்களையும் கட்டப் போவதில்லை”

“யார்தான் அந்த வீர புருஷனோ”

“அது நீயல்ல”

“அப்ப அது யார்?”

“ஏன், நீ அறியவேண்டுமோ, அவன் நிச்சயமாக ஒரு ஆண்மையுள்ளவனாக இருப்பான். என் புற அழகையல்ல என் கருத்துகளை காதலித்து மதிப்பவனாயிருப்பான். புரட்சிக்காக துப்பாக்கி எடுப்பவனாக, குண்டெறிபவனாக இருப்பான். நீ பெண்களைக்கெஞ்சும்கோழை”

“உமா, இத்தனையாக பாராட்டிக் கெஞ்சவும் நீ மிஞ்சு கிறாய்”

“இப்படியான பாராட்டை வேறு பேடிகளிடமும் நான் கேட்டிருக்கிறேன்”

சந்திரனின் காதலை ஏளனம் செய்வது போல அவள் வார்த்தைகள் தொடர்ந்து ஒலித்தன.

“நான் உண்மையாகக் காதலிக்கிறேன். நம்பு உமா”

“உப்படித்தான் எல்லோரும் சொன்னார்கள். நான் ஒரு ஆண்மகனை இப்படியெல்லாம் வர்ணித்துக் கொஞ்சுவேன் என்று நினைக்கிறாயா? நீங்கள் பெண்களிடமும் ஆசை வார்த்தைகள் பேசி இன்பம் தேடுவதே வாழ்க்கையென்று

நினைப்பவர்கள். பெண்களை வெறும் இன்பப் பொருளாக மட்டும் எண்ணும் எத்தர்கள்'

சந்திரன் தன் தோல்வியை உணரத் தொடங்கி விட்டான். ஆயினும் தான் ஆண்மகன், பெண்ணிடம் கேவலமாக ஏச்சு வாங்குவது என்பது ஆத்திரத்தையே தந்தது.

"நான் அளவுக்கு மீறி உன்னை உயர்த்தி விட்டேன். அது தான் நீ தலைக்குமேலாகப் பாய்கிறாய்"

"இல்லை அளவுக்கு மீறி என்னைக் கேவலப்படுத்தி விட்டாய். வெளியுருவக் கவர்ச்சியுள்ள ஒரு பெண் என்று மட்டுந்தான் நீ எண்ணிக் கொண்டு பேசினாய். இப்போதாவது தெரிகிறதா அது தவறு என்று. உன்னைப்போலவே சமுதாயத்தில் வாழ எல்லா உரிமையும் கொண்டவள் நான், வெறும் பொம்மையல்ல,"

தனக்கு அவள் அறிவுரை கூறுவதை அவனால் ஏற்க முடியவில்லை. தோல்வியால் எழுந்த சீற்றம் வேறு.

"நீ ஒரு வேசை"

"ஏனென்றால் நான் உன்னோடு ஆடவரவில்லை, அப்படித் தானே. மிஸ்டர் உந்தவார்த்தை ஒன்றே நீ பெண்களை எவ்வாறு மதிக்கிறாய் என்பதைக் காட்டுகிறது. உன் ஒழுக்கத்தை நீ பார்த்து நட. மனிதர்களையே சமனாக மதிக்கத்தெரியாத உன்னை நான்........."

"என்ன செய்து விடுவாய்?"

"மற்றொருதடவை சொன்னால் தெரியும்"

"நீ ஒரு வேசை தான்"

உமா சந்திரனின் கன்னத்தில் அறைந்தாள். அவன் எதிர் பார்க்கவேயில்லை. ஆங்காங்கே பல்கலைக்கழக வளாகத்தில்

உலாவிக் கொண்டிருந்தவர்கள் வியப்போடு அக்காட்சியைப் பார்த்தனர். சந்திரனை வெட்கம் பிடுங்கியது.

"சரி உன்னை ஒரு கை பார்க்கிறேன்"

கூறியபடியே எதிர்ப்பக்கமாகத் திரும்பி நடந்தான்.

"பேடிகள் இப்படித்தான் பேசுவார்கள்"

உமா முணு முணுத்தாள்.

*(மார்ச்.1974)*

# ஊமைகள்

விமலாவின் உடலிலே சோர்வு, கால்களும் சோர்ந்து விட்டன. ஆயினும் பாடசாலையை நோக்கி எட்டி நடக்க முயன்றாள். காலில் அறுந்து தைத்த செருப்பு. அது வழியில் அறுந்துவிடுமோ என்ற அச்சம் வேறு. பாடசாலைக்குப் பிந்தி விடப்படாது என்ற ஆவல் உந்திக் கொண்டிருந்தது.

"டீச்சர் மணியடித்திருக்குமா?"

விமலாவிற்குத் துணையாக வரும் அயல்வீட்டு சிறுமி அம்பிகா கேட்டாள்.

"இருக்காது, எட்டிவா"

அம்பிகா தன் சிறு கால்களால் ஈடுகொடுத்து நடக்க முடியாதவளாக ஓடியும் நடந்தும் தொடர்ந்தாள்.

சில நிமிடங்கள் தானும் தாமதித்துச்சென்று தலைமை வாத்தியாரிடம் தலைகுனிவதையோ பற்களைக்காட்டுவதையோ, அவரது இருவகையான சாதுரியப் பேச்சுக்களையோ கேட்க அவள் விரும்பவில்லை. ஒரு தடவை கண்டித்து பொறுப்புள்ள தலைமை ஆசிரியர்போல ஏசுவார். மறுதடவை சிரித்து வளைத்துப் பேசுவார். அவற்றின் அடிப்படை நோக்கை அவள் அறியாமலில்லை. நீண்டநாள் திருமணமாகாத பெண் என் தயவிருந்தால் எப்படியும் தாமதித்து வரலாம் என்பது அவர் கருத்து. இதற்கெல்லாம் ஏன் இடம் வைக்கவேண்டும்? அவர்

வசதியான குடும்பத்தவர். கார் வைத்திருக்கத்தக்க வருமானம் உள்ளவர். அவர் ஏழை ஆசிரியர், பிள்ளைகளின் துன்பங்களை யும் நினைவுகளையும் அறியார்.

"ரோசா மலர் எவராலும் முகரப்படாது வாடிக் கருகுவது தான் உலகத்தில் மிகக் கொடியது"

நளினச் சிரிப்போடு சிலநாள் தனிமையில் கூறினார். மலர் கருகுவதிலுள்ள வேதனையை அவர் உணராமலில்லை. ஆனால் அவர் உலகில் இக்கொடுமையைத் துடைக்க ஓரடி யாயினும் முன்வைப்பவரல்ல. எனக்காக இரங்கி தான் இன்பம் பெற நினைப்பவர். மற்றவர்களுக்கு வயிறும் மானமும் உண்டு என்பதை அறியாதவர்.

வீட்டிலே வயதான அப்பா, அம்மா, பாட்டி, விதவையான அக்காவின் பிள்ளைகள் இருவர், முன்னர் என் உழைப்பில் எல்லோரும் உண்டு வாழ்ந்தோம். இன்று முடியுமா?

அப்பா, அம்மா, பாட்டிக்கு என்னைக் கட்டிக்கொடுக்க விருப்பமில்லையா? ஊரவர்கள் கேட்கும்போதெல்லாம் அவளுக்குப் பிடித்தவனாக வரவில்லை என்று பெருமூச்சோடு கூறுவர். பேசிய கலியாணங்கள் ஏதோ காரணங்களால் கைவிடப்படுவது அனைவருக்கும் மகிழ்வே. நான்கூட குடும்பப் பொறுப்பு முழுவதையும் ஏற்கத்தக்கவரையே விரும் பினேன். சீதனம் கேட்பவர்களிடம் எவ்வாறு இத்தகைய பொறுப்பை ஏற்கும் துணிவை எதிர்பார்க்கமுடியும். பாலுணர்ச் சிகளை அடக்கியடக்கி இப்போதெல்லாம் உடலே மரத்து விட்டது. அந்த ஆசைகளே குறைந்துவிட்டன.

என் தேய்ந்த அழகை நான் அறியாமலில்லை. ஆயினும் தலைமை ஆசிரியர் தம்பிராசா சொல்லுவார்:

“இருபத்தைந்து வயதுக்குமரி என்று ஆரும் மதிப்பினம். இன்னும் கூச்சமே விட்டுப்போகேல்லை”

பதினைந்து வயதைக் குறைத்த அவருடைய பச்சாத்தாப வார்த்தைகளை நான் புரியாமலில்லை.

வெளியே வாழ்க்கைச் செலவு உயர்வுபற்றி ஆற்றாநிலையில் பிறருடன் பேசியபோதும் எமது பட்டினியைப்பற்றி வெளியே சொல்ல மனம் வருமா? உடலின்பம் போன்றது தான் பசியும். நாம் இத்துன்பங்களை வெளியே சொல்ல தயங்குகிறோம், அஞ்சுகிறோம். வாயையும் வயிற்றையும் கட்டிக்கொள்கிறோம். இப்படி எத்தனை லட்சம் பெண்களோ? மனித உணர்ச்சிகளையே கொன்றுதான் இச் சமூகத்தில் வாழமுடியுமோ? ஆனால் தலைமை ஆசிரியர் தம்பிராசா அன்று பிந்திச்சென்று, அவர் முன்னிலையில் தனியாக கையெழுத்துப் போடும்போது சொன்னார்:

“இப்ப சிலிம் பண்ணுறீங்கபோலை தெரியுது. உடம்பெல்லாம் அமைப்பாய் வந்து தனி அழகாயிருக்கு”

எனக்கே நல்லாய் தெரியுது. சட்டை, பாவாடை, பிறெஸியர் கூட தொழுதொழுத்துப்போச்சு. மாற்றித் தைக்கவும் துணியில்லை. பதினைந்து வருடத்திற்கு முன் போட்ட ஓரிரு சட்டைகள் அடிப்பெட்டியில் இருந்தன. அவற்றை ஓரிருநாள் போட நேரிட்டது. மற்ற ரீச்சர்மார் ஒருவகையாக அப்புதிய பாஷனைப் பார்த்துச் சிரித்தனர்.

“அம்பி, காலையிலை என்ன சாப்பிட்டாய்?”

என்னையறியாதே கேட்டுவிட்டேன். கேட்டது தவறு என்பது தெரிகிறது. நம் மனதில் குடைவதை எம்மையறியாது நாமே காட்டிக் கொள்கிறோம்.

அவளும் கேட்காதவள்போல நடந்துவந்தாள். அவளிடம் கட்டாயம் அறியவேண்டும் என என் மனம் விழித்தது.

"என்ன? நான் சொன்னது கேட்கேல்லையா?"

திரும்பிக் கேட்டேன்

"என்ன டீச்சர்"

அவள் மழுப்பிக் கேட்டாள்.

"காலையிலை என்ன சாப்பிட்டாய்?"

"வாழைப்பழமும் ....... புட்டும் .........."

இழுத்துச் சொன்னாள். அவள் பொய் பேசுகிறாள் என்பது குரல் மூலமே நன்கு தெரிந்தது. இந்த சிறு வயதிலேயே போலி நாகரிகத்தைப் பேண கற்றுக்கொண்டுவிட்டாளே என எண்ணிக் கொண்டே எட்டி நடந்தேன்.

சில நிமிடங்கள் பிந்தியேவிட்டேன். அப்பா பலவீனமாகி வருகிறார். அம்மாவிற்கு இன்று காலையென்று வயிற்றுப் போக்கு. என்ன நோயோ? பிழைப்புக்காக நான் தனியே விட்டுவிட்டு அவசரமாகப் புறப்பட்டேன்.

தலைகுனிந்தபடி கையெழுத்திடுகிறேன். தலைமை ஆசிரியர் முகத்தைப்பார்க்கவே விருப்பமில்லை.

"உந்தச்சேலை நல்லாயிருக்கே"

வெறும் முகமன் வார்த்தைகள். கிழிந்துவிட்டது என அடிப் பெட்டியில் போட்ட சேலை. காலையில் உடுக்க சேலையே இல்லை முதல் நாள் தோய்த்தது காயவில்லை. கிழிந்த பகுதியை அரையில் சுற்றி ஒரு வகையாக வெளியே கிழிவு தெரியாதபடி சமாளித்துவிட்டேன்.

மக்களுடைய துன்பமறியாத அரசியலாரும் காமுகரும் ஒருவாறே தான் இருப்பரோ?

எதுவும் பேசாது வகுப்பறையை, நோக்கி நடந்தேன்.

“விமலா டீச்சர், காலையிலே ரேடியோ கேட்டிங்களா? சீனி விலை றாத்தல் ஐந்து ரூபா”.

ஆசிரியர் முத்தையா படிப்பதை நிறுத்திவிட்டு சிரித்துக் கொண்டே சொன்னார்.

“மாஸ்டருக்கு எப்பவும் அம்மா ஆட்சி பற்றி பகிடிதான்”

நான் மேலும் நின்று பேச விரும்பாது என் வகுப்பிற்குச் சென்றேன். உண்மையாயிருக்குமா என்று எண்ணிப்பார்த்த போது எதிலும் கவனம் ஓடாது உதட்டின் மேல் புறத்தில் வியர்வை அரும்பியது. சேலைத்தலைப்பால் துடைத்தேன். அக்காவின் பிள்ளைகளை கட்டுப்படுத்துவது பற்றியே நினைவு வந்தது.

அடுத்த பாடம் மூன்றாம் வகுப்பில் சமூக அறிவியல் பாடத்தில் தொற்று நோய்கள் பற்றி கற்பிக்கத் தொடங்கினேன். வாந்திபேதி நோய் ஏன் ஏழைகளை மட்டும் தாக்குகிறது, என்பதை விரித்துக் கூறினேன்.

“நல்ல போஷாக்கான உணவு உட்கொள்ளின் நோய்களி லிருந்து தப்பிக் கொள்ளலாம்”

“அது என்ன உணவு டீச்சர்”

ஒரு பிள்ளை எழுந்து நின்று கேட்டது.

வாங்கின் மேல் ஒரு பிள்ளை மயங்கி விழுந்து விட்டது.

‘சுமதி, சுமதி’ என்று கத்தியபடி எல்லாப் பிள்ளைகளும் சூழ்ந்து கொண்டனர். பிள்ளைகள் யாவரையும் ஒதுங்கச் செய்து சுமதியைத் தூக்கி வாங்கில் கிடத்தினேன். மற்ற ஆசிரியர்களும் வந்து சூழ்ந்தனர். தலைமை ஆசிரியர் வந்து பார்த்தார். மூச்சைத் தொட்டுப் பார்த்தார்.

"ஹாட் அற்றாக்காக இருக்கலாம். ஆசுபத்திரிக்குக் கொண்டு போவதுதான் நல்லது. பெற்றாருக்கும் அறிவிக்க வேண்டும்."

மிகவும் சீரியசாகச் சொல்லி ஏற்பாடுகள் பற்றி கலந்து பேசினார்.

எனக்கும் சீரியசாகச் சொல்லி ஏற்பாடுகள் பற்றி கலந்து பேசினார்.

எனக்கு உள்ளூர அவர்களது அறியாமையை எண்ணிச் சிரிப்பும் சமூக நிலைமையை நினைத்து ஆத்திரமுமே ஏற்பட்டது.

"அவசரப்பட வேண்டாம். அப்படியென்றால் டாக்டரை இங்கு அழைப்பதெல்லோ சரி"

சும்மா சொல்லிவிட்டு ஒரு பிள்ளையை தண்ணீர் எடுத்து வரும்படி அனுப்பினேன். மற்றும் நின்றவர்களிடம் கோப்பி அல்லது தேநீர் கொண்டு வரும்படி சொன்னேன். பால் கொண்டு வந்த பணக்காரப் பையனின் பிளாஸ்கை சில பிள்ளைகள் எடுத்து வந்தனர்.

சுமதியின் முகத்தில் தண்ணீரைத் தெளித்துவிட்டு என் மடியில் தலையை வைத்து பற்களை விரித்துப் பாலைப் பருக்கினேன். சில நிமிடங்களில் சுமதி விழித்தெழுந்து சுற்று முற்றும் பார்த்தாள். வெட்கம் அவளைப் பிடுங்கியது.

"ஊரார் பிள்ளைகளை வளர்த்த அனுபவம் போலை"

தலைமை ஆசிரியர் அடிப்படைக் காரணம் எதையும் ஆராய விரும்பாதவராக கூறிக் கொண்டே சென்றார்.

யாவரும் கலைந்தனர்.

நான் சுமதியை தனியே அழைத்துச் சென்று கேட்டேன்.

காலையிலை என்ன சாப்பிட்டாய்?'

மிரண்டு பார்த்தபடி சிறிது தாமதித்துப் பொய்பேசுவது தெரியத் தக்கதாகவே சொன்னாள்.

'சோறு'

"ஏனடி பொய் சொல்லுறாய், அரிசிப் பஞ்சமான காலத்தில் காலையிலை சோறு திண்டியா? உண்மையைச் சொல்"

விரும்பாதபோதும் அதட்டியே கேட்டேன்.

"வீட்டிலை சாப்பிட ஒன்றுமில்லை டீச்சர்"

அழுக்கடைந்த கீழ் சட்டையை தூக்கி கண்ணை மூடிய படியே விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

நான் அவளை அணைத்து அழுகையை ஆற்ற முனைந்தேன். அதன் மேல் நான் என்னதான் செய்ய முடியும்? என் வயிறே எரிந்து உடல் நடுங்குவதை எவரிடம் சொல்ல முடியும்? தண்ணீரால் தான் தற்காலிகமாவது தடுக்க முடியும். முகத்தில் தெளிக்க எடுத்து வந்த தண்ணீரை நான் குடிக்கிறேன். கைகளில் நிதானமில்லை.

நானும், சுமதியும், அம்பியும் மட்டும்தானா பசியைப் பற்றி வெளியே பேசாது நாகரிகமாக வாழ நினைக்கின்றோம்.

ஆளுபவர்கள், தலைமை ஆசிரியர் போன்றவர்களா? அல்லது பசி கூட பழக்கமாகிவிடும் என்று நினைப்பவர்களா?

(மார்ச்.1974)

# நகர்வலம்

மழை தூறிக்கொண்டிருந்தது. அந்த ஓட்டலின் முன்னே சிறு மழை நீருடன் சாக்கடை நீர் சங்கமமாகிக் கொண்டிருந்தது. கசங்கிய பேப்பரின்மேல் கருகிய பாண் செருவல்கள் மிதந்து கொண்டிருந்தன. அவ்விடத்திலேயே உட்கார்ந்திருந்து அவற் றைப் பொறுக்கி வாயில் திணித்துக் கொண்டிருந்தான் அவன். அரையில் அழுக்கான சாரம், மேலில் கிழிந்த சட்டை, வாராத தலை, அரைத்தாடி, ஐம்பது வயது மதிக்கலாம்.

ஓட்டல் வானொலி அறிவித்தலில் வாந்தி பேதியைத் தடுக்கும் முறைகள் பற்றி நண்பர் சுந்தாவின் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. அக் காட்சியைப் பார்த்தும் பார்க்காதவர் போல நடைபாதையிலும் தெருவிலும் சுறுசுறுப்பாக மக்கள் நடந்துகொண்டிருந்தனர். சமுதாயத்தில் இவை சாதாரணம், தவிர்க்கமுடியாதவை என்ற எண்ணமா?

புறக்கோட்டை பஸ் நிலையத்தை அடைந்துவிட்டேன். பிச்சையெடுப்போரை முன்னரும் இங்கு பார்த்திருக்கிறேன். அவர்கள் வாயிலிருந்து இத்தகைய புதிய குரல்களை நான் கேட்டதில்லை.

“மாத்தையா, இரண்டு நாளாய்ப் பட்டினி, இந்தப் பிள்ளையைப் பாருங்கோ”.

ஒட்டி உலர்ந்த குழந்தை, தாயின் சட்டையைப் பிடித்த படி கத்திக் கொண்டிருந்தது. ஒரு பத்துச் சதத்தை எடுத்துக் கொடுத்தேன். அத்துன்பக்காட்சியிலிருந்து விடுதலை பெற முயன்றேன்.

"குழந்தைக்கு வெறும் தேத்தண்ணி பருக்கவாவது தர்மம் கொடுங்க".

வெறும் தேநீரின் விலை 35 சதம், அதை அவள் நினைவூட்டி யதில் தவறில்லை. பிச்சையெடுப்போரின் நிலையே எத்தனை மோசமாகிவிட்டது.

மழைக்கு ஒதுங்கி ஒரு தாழ்வாரத்தில் நின்றேன்.

"மாத்தையா பஸ்ஸிற்கு காசில்லை. ஒரு ரூபா தாருங்கோ"

"நீ பெரிய பிச்சைக்காரனாயிருக்கிறாயே. ஒரு ரூபாவை துணிச்சலோடு கேட்கிறாய்".

"கிராமத்திலை பட்டினி... இங்கே ஏதாவது வேலை தேடிப் பிழைக்கலாமென்று வந்தேன். நேற்றுத் தொடக்கம் சாப் பிடவேயில்லை. ஊருக்குத்திரும்ப காசில்லை."

இப்படியாகப் பிச்சை கேட்கும் பலரைப் பார்த்திருக்கிறேன். அவனது உடற்சோர்வையும் முகத்தையும் பார்த்தபோது அவன் பேசுவதில் பொய் தொனிக்கவில்லை.

"ஏனப்பா கிராமத்தைவிட்டு வாறியள், அங்கே ஏதாவது கூலி வேலை செய்து பிழைக்கலாமே".

"அறுவடை வேளைகளில் தான் ஏதேன் கூலிவேலை கிடைக்கும். மற்ற வேலைகளுக்கெல்லாம் டிராக்டர் இருக்கு."

"நீ கிராமத்துக்கே போய்விடு, கூப்பனாவது இருக்குமே. அரைக்கொத்தரிசியாவது சும்மா கிடைக்கும்."

“கஞ்சி காய்ச்சவும் அதுபோதாதென்றுதான் அதை அடைவு வைச்சிட்டு இங்கே வந்தேன்”.

என் மனத்தை திருப்திப் படுத்த ஒரு ரூபாவைக் கொடுத்து விட்டு வெளியேறினேன். அரைக் கொத்தரிசி கூட ஏழைக்குப் பயன்படாது போய் விடுகிறதே என்று மனம் ஏங்கியது. இதைக் கூட ஆளும் வர்க்கம் ஏன் வழங்கவேண்டும்? தொழிலாள, விவசாயிகளை அரைப்பட்டினியில் உயிரோடு வைத்து உழைப்பைப் பெறுவதற்கா? அல்லது அவர்களின் புரட்சி யுணர்வை தர்மப்பிச்சை மூலம் மழுங்கடிக்கவா?

நாலாம் குறுக்குத் தெருவால் வந்து கெய்சர் வீதியில் மார்க்கெட்புறமாகத் திரும்பினேன். எதிர் மூலையில் பெரிய பிராமண ஓட்டல். எச்சில் இலைகள் கெய்சர் வீதியில் வீசப் படுவதை நீண்டகாலமாகவே அறிவேன். அந்த எச்சில் இலை களிடையே மூன்று, நாலு பையன்கள் ஒவ்வொரு இலையாக எடுத்து, துடைத்து எஞ்சிய உணவுகளை சேகரித்துக் கொண்டி ருந்தனர். லொறிகளின் உறுமல், சுறுசுறுப்பான மக்கள், பணம் புரளும் வீதிகள் சங்கமிக்கும் இடம். அங்கே இத்தகைய இழிவான நிலையா?

முதலாளித்துவத்தின் மிகப் பெரிய முரண்பாடு பணமும் வறுமையும் அருகருகே இருப்பதுதான் என்ற மாக்ஸ்ஸின் கோட்பாடு நினைவு வந்தது.

அந்த பேக்கரியின் முன்னே முண்டியடித்துக் கொள்ளும் கியூவரிசை. அவர்களிடை ஒழுங்கு நிலைநாட்ட பொல்லோடு பொலிசார். காலையிலும் மாலையிலும் கால்கடுக்க மக்கள் கூட்டம். இது அநாகரிகக் காட்சியாக ஆளும் வர்க்கத்த வருக்குத் தெரியவில்லையா?

காட்டுமிராண்டியாக உணவுக்கலைந்த மனிதன் காலம் அநாகரிக காலம் என்று இன்று பாடசாலைகளில் பாடங்கற்பிக் கிறார்களே. உயிர்வாழத் தேவைப்படும் அந்த அடிப்படைத் தேவையையும் நாகரிகம் பேசும் சமுதாயத்தால் நிவர்த்தி செய்ய முடியவில்லையே.

மாலையில் வேலை முடிந்து சோண்டர்ஸ் பிளேஸ் வழி யாக வந்தேன். வாழைத்தோட்ட பூங்கா எதிரே தெருவோரத் தில் நடைபாதையிலே பலர் படுத்துகிடந்தனர். முதல் நாள் மழை கொட்டியபோது பஸ்கூட அப்பாதையால் ஓட முடிய வில்லை. வெள்ளம் கலக்கி நனைந்த கால்சட்டையுடன் நான் வீடு திரும்பினேன். அதே இடத்தில் எத்தனை துணிச்சலோடு அவர்கள் நிரையாகப்படுத்திருக்கிறார்கள். வானம் இருண்டு தான் கிடக்கிறது.

எதிரே மரப்பலகைகளால் அடிக்கப்பட்ட சிறு கடைகளும் குடிசைகளும். அங்கு விபசாரம் பரவலாக நடைபெறுவதாக முனிசிப்பல் சபை கூட்டத்தில் ஒருவர் கூறியதைப் பத்திரிகை யில் படித்த நினைவு வந்தது. இத்தனை துன்பங்களிடையே மக்கள் வாழும் போதும் இது ஒன்றே தான் அவருக்கு அசிங்கமாகவும் அநாகரிகமாகவும் தோன்றியதை எண்ணிக் கொண்டேன். விபசாரம் அவர்களுக்கும் பொழுது போக்கா? முதலாளித்துவத் திலும் அடிமைகளாக வாழும் பெண்களுக்கு விபசாரம் ஒன்றில் தான் நேரடியாகக் கூலி கிடைக்கிறது என்று ஓர் ஆங்கிலப் பெண் மணி எழுதிய கட்டுரை ஒன்றைப் படித்தது நினைவில் வந்தது.

இந்தச் சமுதாயம் நிலைப்பதற்கு எவ்வித சமூக நீதியு மில்லை என்ற நினைவோடு தேநீர் குடிக்க ஒரு ஓட்டலை நோக்கி நடந்தேன். மற்றோர் பிரபல ஓட்டலின் முன்னே இருவர் வாலிப வயதான ஒருவனைப் பிடித்து அடித்துக்

கொண்டிருந்தனர். அவனும் தடுத்து போராடிக் கொண்டிருந்தான். சிலர் கூடி இடையில் நின்று சண்டையை தடுத்தனர். சாப்பிட்டுவிட்டுப் பணம் கொடுக்காமல் வெளியேறினானாம்.

"ஏனப்பா நீ பணம் கொடுக்காமல் போனாய்?"

அவனைப் பார்த்து ஒருவர் கேட்டார்.

"என்னட்டை காசில்லை"

"உண்மையை அவன் துணிச்சலோடு கூறியது என் நெஞ்சை துணுக்கிடச் செய்தது".

இப்ப இதெல்லாம் ஒரு பெரிய தொல்லையாப் போச்சு. அவன் துணிச்சல் பேச்சைவேறு பாத்தியா' ஓட்டடல் மேலாள் குறைபட்டான்.

"முடிந்தால் கூப்பிடு உன் காவல் நாயை"

அவன் ஓடிவிடவில்லை. எதிர்த்து நின்றான்.

அவன் மேலாள் கூறினான்.

ஏறுபோல அவன் சாவதானமாக நடந்துகொண்டிருந்ததை நான் நீண்ட நேரம் பார்த்துக்கொண்டு நின்றேன்.

பல சம்பவங்களாலும் சோர்ந்து போயிருந்த நெஞ்சில் ஒரு மின்னல் பளிச்சிட்டது. நசுக்கப்படும்போதெல்லாம் சமுதாயம் தூங்கிவிடுவதில்லை. அதன் புதிய தெம்பை அவன் குரலொலி என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

(ஏப்.1974)

# சட்டங்கள் எங்களுக்கே

தர்மலிங்கத்தார் அதிகாலையில் எழுந்து காலைக்கடன் களை முடித்து சாயிபாபா பூசையைத் தொடங்கினார். அன்று இரண்டு முக்கிய வேலைகள் முடிந்தாகவேண்டும். அவை சுமுகமாக, வெற்றியாக முடிய வேண்டும் என தற்போது அவர் குலதெய்வ மாகக்கொண்டிருக்கும் சத்யசாயிபாபாவை வேண்டிக்கொண்டார்.

வெள்ளை அரைக்கை சேட்டையும் சால்வையையும் போட்டுக் கொண்டே கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டு வெளியே வந்தார்.

அங்கே அவர் ஆணைக்காக பலர் காத்துநின்றனர். வைக்கல் ஏற்றிய டிராக்டர் அவரின் சொந்தக் கிராமத்திற்குப் புறப்படு வதற்கு அனுமதி வழங்கினார். அக்கடமைக்குப் பொறுப்பான கந்த சாமியை உள்ளே தனிமையில் அழைத்து முதல்நாளிரவு கூறிய விஷயங்களை மீண்டும் அழுத்திக்கூறினார். பணத்தை மூன்று உறையுள் எண்ணி வைத்து அவனிடம் கொடுத்து கடைசியாகக் கூறினார்:

"கவனம், பாபாவை தியானித்துக்கொள்".

மீண்டும் வெளியேவந்து கூலி வேலையாட்களுக்கு வேலை களைப் பணித்தார்.

“இந்த வாரம் மட்டுந்தான். அடுத்த வாரம் வேலை கிடைக்கும் என்று நம்பி வரவேண்டாம். வேறு எங்காவது தேடிக்கொள்ளவேண்டும்”.

அறுவடை யாவும் முடிந்ததை அவர்கள் அறிவார்கள்.

“நாலாம் வாய்க்கால் பட்டடை இன்றும் சூடுமிதிக் கேல்லை”

மேலும் ஒரு வாரமாவது வேலை கிடைக்கலாம் என்ற நப்பாசையுடன் நாகராசா நினைவூட்டினான். அவனை அவருக்கு என்றும் பிடிக்காது. சிவப்புப் புத்தகம் படிக்கும் கோஷ்டியுடன் கூடித்திரிகிறான் என்று கேள்விப்பட்டிருந்தார்.

“அது பொறுத்துப் பார்த்துத்தான் செய்யவேண்டும்”

தர்மலிங்கம் சாவதானமாகக் கூறினார். அவரின் திட்டத்தை நாகராசா நன்கு அறிவான். அடுத்த மூன்று மாதமும் கூலி வேலை கிடையாது, படக்கூடிய துன்பத்தை நினைத்தபோது அவன் நெஞ்சு கொதித்தது. கூலி விவசாயிகளின் துன்பத்திற்கு விடிவு கிடையாதா?

“அதுசரி, ஏனய்யா அவசரப்படவேணும். பட்டடை செம்மையாக சீராயடிக்கியிருக்கிறம். ஆறு மாதத்திற்கு அசை யாமல் கிடக்கும். நேற்று நெல்லு அம்பத்திநாலு ரூபா கூட வித்ததாம். உவங்களுக்கு ஏன் அவசரப்பட்டு முப்பது ரூபா வுக்குக் கொடுக்கவேணும்?” தர்மலிங்கத்தாருக்கு சார்பாக எப்பொழுதும் பேசி சலுகைகள் பெறும் சுந்தரம் கூறினான். தர்மலிங்கத்திற்கு அது பிடிக்கவில்லை. தமது திட்டத்தை அவர்கள் ஊகித்தாலும் அம்பலமாக அவன் கூறியது அவருக்கு கோபமூட்டியது.

“சரிசரி போங்கோ. எப்ப சூடடிக்கிறது என்று எனக்குத் தெரியும்”.

எல்லோரும் வயலை நோக்கிப் புறப்பட்டனர். சின்னராசா மட்டும் தலையைச் சொறிந்தபடி ஒதுங்கி நின்றான்.

"என்ன சின்னராசா, ஊருக்குப்போற யோசனையோ".

"ஓமய்யா, மனுஷிக்கும் குழந்தைக்கும் சுகமில்லை என்று ராத்திரி கொழும்பு லொறிக்காரர் ஆரோ சந்திக் கடையிலை சொல்லியிருந்தாங்கள். போய் பார்த்திட்டு வரவேணும்".

"அதிலையென்ன, இங்கேயும் வேலையெல்லாம் முடிஞ்சு போச்சுது தானே. கொஞ்சம் இரன் கணக்குப்பார்த்துக் காசைத் தாறேன்".

வேலைக்கு வரவேண்டாம் என்று கூறுவதிலும்பார்க்க இப்படிக் கணக்கு முடித்து அனுப்புவது எளிதாகவே அவருக்கும் தோன்றியது.

"காசைக் கொண்டுபோய் அங்கே என்ன செய்யிறது? பிள்ளைகளெல்லாம் அரைப்பட்டினி. ஏதேனும் அரிசி அனுப்பும் படி மனுஷி போன கிழமையே எழுதியிருந்தாள். அரிசியாய் கொண்டுபோனால் பிள்ளையள் கொஞ்சநாளைக் கானாலும் கூப்பனரிசியோடை வயிறுகுளிரச் சாப்பிடுங்கள்".

"காசை கொண்டுபோய் அங்கை வாங்கன்"

"அந்த அநியாய விலை குடுக்கக் கட்டுமா அய்யா. நீங்க இங்கை விக்கிற விலையப் போட்டுத்தாருங்கோ"

"தாறதிலை ஒன்றுமில்லை சின்னராசா. நீ வழியிலைபோய் பொலிசிலை மாட்டுப்படப்போறாய் என்றுதான் பார்க்கிறன்". தர்மலிங்கம் அறிவுரை கூறுவதுபோல் கூறினார்.

"ஆறு கொத்தரிசியைமட்டும் தந்து மிச்சத்தை காசாய்த் தாருங்கோ. அதை நான் உடுப்போடை சேர்த்துப் பாசலாய் கட்டிக் கொண்டு போய்விடுவன்".

வேலையாளைக் கூப்பிட்டு அரிசியை அளந்து கொடுக்கும் படி சொல்லிவிட்டு அவனது சம்பளக் கணக்கைப்பார்த்து காசை எடுத்துவந்து எண்ணிக்கொடுத்தார்.

"முழுக்கொத்து மூண்டரை ரூபாப்படிதான் கணக்குப் போட்டன். என்னெண்டாலும் கவனமாய்க் கொண்டுபோ. என்ன வழியிலை நடந்தாலும் நீதான் பொறுப்பு, பாபா உன்னைக் காப்பாற்றுவார்' சங்கத்திலே அவரும் முக்கிய கமிட்டி உறுப்பினர். ஒருபகுதி நெல்லை இருபத்தைந்து ரூபா விலையில் கொடுத்தவர் தனக்கு முழுக்கொத்து இரண்டரை விலையில் போடுவார் என எதிர்பார்த்து ஏமாந்தான். விதைப் புத் தொடக்கம் அறுவடைவரை உழைத்துத்தான் என்ன நன்றி. வெந்த மனதை வெளியே காட்டாது சின்னராசா காசையும் அரிசியையும் பெற்றுக்கொண்டு புறப் பட்டான்.

"எப்பிடிப் போகப்போறாய்?"

"பஸ் என்றால் ஆனையிறவுப் பாலத்திலை கரைச்சல். ரெயிலிலை தான் போகப்போறன்".

சின்னராசா போனதும் அவர் சாப்பாட்டை முடித்து விட்டுவந்த போது செல்லத்தம்பி காத்திருந்தான்.

"உன்னைத்தான் நினைத்துக்கொண்டிருந்தேன், உனக்கு நூறுவயசு".

உயர்வாகப்பேசி, நாலாம் வாய்க்காலருகே அவருடைய வயலுக்கருகே துண்டாகக்கிடக்கும் முருகுப்பிள்ளையின் நாலேக்கர் வயல் நிலத்தையும் சாதுரியமாக விலைபேசி வாங்க வேண்டிய விபரங்களைக் கூறினார்.

"இந்த ஆண்டு விதைநெல்லுக்கே கஷ்டப்பட்டு நானும் கொஞ்ச நெல்லுக்கொடுத்து பிந்தித்தான் விதைச்சான். அது வாய்க்கேல்லை. எனக்கு அப்பவே தெரியும்".

தர்மலிங்கத்தை அறியாது உதடுகளில் மெல்லிய வெற்றிப் புன்னகை ஒளிர்ந்தது. கொடுத்த விதைநெல்லு மர்மத்தையும் வெளிக்காட்டியது.

"அவனுக்கு இப்ப கஷ்டம், கட்டாயம் சம்மதிப்பான். எப்பிடியெண்டாலும் உங்கடை முடிவான விலைக் கணிப்பையும் சொல்லுங்கோ".

"அவன் சம்மதம் என்றால் விலைபற்றி பிரச்சனையில்லை. நாலு பேர் மதிப்பதையோ அல்லது அவன் கேட்பதைத்தானும் கொடுத்து விடலாம். ஐந்துசத வட்டிக்குக் கடன்பட்டு விதைச்சு ஏனப்பா வீணாய் கஷ்டப்படுகிறாய், விற்றுக்கிடைக்கிற பணத்தை வட்டிக்குக் கொடுத்திட்டு சும்மா இருந்து சாப்பிடலாமே என்று புத்தி சொல்லு".

"அதெல்லாம் நான் அவனைச் சரிப்பண்ணிப்போடுவன். உறுதி முடிக்கேக்கை உந்த நெற்காணி உச்சவரம்புச் சட்டமெல்லாம் உங்களைப் பாதிக்காதே".

"அதைப்பற்றி உனக்கென்ன கவலை. நான் ஒரு பிள்ளையின்ரை பேரிலை எழுதிவிடுவன். எத்தினை சட்டந்தான் உவங்கள் கொண்டந்தாலும் எங்களைப் பாதிக்காது. அதுக்கெல்லாம் விதிவிலக்கு இல்லாமலாபோகும். மூக்கு முட்டிவிட்டால் உன்னைப்போல நம்பிக்கையானவர் பேரிலை எழுதிவிடலாம். நான் பயிர்செய்ய இன்னொருவன் வந்து அறுவடை செய்ய முடியுமா? ஆர்பேரிலே இருந்தால்தானென்ன, ஆட்சியுரிமை தான் வேணும். இந்த வருஷம் நான் நூறு ஏக்கர் விதைச்சன். எல்லாம் என்ரை நிலமா?"

"உறுதி முடிக்க வருமானவரிப் பிரச்சனையிருக்காதோ"

"முருகுப்பிள்ளைக்கு வருமானவரியே கிடையாது. நான் சொல்லிறதை அவன் கேட்பான். என்ரை புரக்கிராசிதானே. அரைவிலை கால் விலைபோட்டு உறுதிமுடிக்கலாம்".

பாபாவின் ஆசீர்வாதத்தோடு செல்லத்தம்பி மாலையில் வருவதாகக் கூறிப் புறப்பட்டார்.

இரண்டு விஷயத்திலும் அவருக்குப் பூரண நம்பிக்கை இருந்த போதிலும் மன அமைதி ஏற்படவில்லை. மீண்டும் பாபா பஜனையை முணுமுணுத்தபடி பூசை அறையில் சென்று வழிபட்டார். பின்னர் வெளியே வந்ததும் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். டிராக்டர் எவ்விடத்திற்குப் போய்ச் சேர்ந்திருக்கும், என்று கணக்கிட்டுப்பார்த்தார். மனம் இருப்புக்கொள்ள வில்லை. வயல் வரப்புகளில் முன்னும் பின்னுமாக நடந்தார். அப்போதும் முடியவில்லை.

"பாபா மன்னித்துக்கொள்" என்று முணுமுணுத்தபடியே அறையில் சென்று விஸ்கியில் சோடாவைக் கலந்து ஒரு டோஸ் அடித்தார். பகல் சாப்பாட்டை முடித்ததும் மீண்டும் ஒரு டோஸ் அடித்து விட்டுப் படுத்தார். நல்ல நிம்மதியான தூக்கம்.

அவர் எழுந்தபோது மாலை ஐந்துமணியாகிவிட்டது. நிலைமைகளை அறிவதற்காக ஜீப்பை எடுத்துக்கொண்டு கிளிநொச்சி கடைத்தெருவுக்கு வந்தார்.

டிராக்டர் போய் சேர்ந்திருக்கும். புசலுக்கு ஐந்து ரூபாதான் வழிச்செலவாக முடிந்தாலும் பரவாயில்லை. ஊரில் விற்கும் இன்றைய விலைக்கே புசலுக்கு எட்டுப் பத்து ரூபா லாபம் கிடைக்கும். மொத்த லாபத்தை மனதால் கணக்குப்போட்டுப் பார்த்துக்கொண்டார்.

கடைத்தெருவில் நின்ற லொறிகளை ஒவ்வொன்றாகப் பார்த்தார்.

"ஐயாவா, உங்கடை வைக்கல் டிராக்டரை புதன்கழிப் பாலத்திலே பார்த்தம்"

சிவன் லொறிக் கிளீனர் தர்மலிங்கத்தைக் கண்டதும் செய்தி சொன்னான்.

பாபா உன் அருள் தான், கட்டாயம் உங்களைத் தரிசிக்க விரைவில் வருவேன். மனம் முணுமுணுத்தது.

ஜீப்பை வாய்க்காலடியில் ஒதுக்கி நிறுத்தினார். செல்லத் தம்பியை எங்கே காணலாம் என்று நினைத்தபோது, எதிரே அவனே ஓடிவந்தான். பல்லும் சிரிப்புமே வெற்றியைக் காட்டியது.

"பாபா ஆசீர்வாதம் ஒருக்காலும் பொய்க்காது, வெற்றிதான்"

ஜீப்பின் முன்சீட்டில் ஏறியிருந்து தன் வீரப்பிரதாபங்களை செல்லத்தம்பி அளந்தான். நல்ல கமிஷன் பெறவேண்டு மென்பதே அவன் நினைவு.

"மூன்று வருஷம் திட்டமிட்டு முயன்றும் பாபாவின் ஆசீர் வாதம் பெற்றபிறகுதான் எல்லாம் தாமாகவே கைகூடுகிறது"

தர்மலிங்கம் பயபக்தியோடு சொன்னார்.

"நானும் அந்த பகவானை கட்டாயம் ஒருதடவை தரிசிக்க வேணும் வசதிதானில்லை".

"பயப்படாதையும் நானே கூட்டிப்போகிறேனே. நாளைக்கே எல்லாம் பேசி முடித்துவிடுவோம்".

இந்த விஷயம் முடியும்வரை திருப்திப்படுத்த சொல் லிவைப்போம் என்று தர்மலிங்கம் நெஞ்சுக்குள் சொல்லிக் கொண்டார். மீண்டும் மறுநாள் காலை சந்திக்கும்படி செல்லத் தம்பியிடம் கூறிவிட்டு மன நிறைவோடு அவர் ஜீப்பை எடுத்தார்.

ஜீப் வயல்காட்டை நோக்கித் திரும்பும்போது நாகராசா எதிரே ஓடிவந்து ஜீப்பை மறித்து மூச்சிழுத்தபடியே சொன்னான்:

"ஐயா கேட்டீங்களா, சின்னராசா ஆறுகொத்தரிசியோடை பொலிசில் பிடிபட்டுப்போனானாம்",

"மடைப்பயல், நான் வழிக்குவழி சொன்னன், காசைக் கொண்டு போய் அங்கை அரிசியை வாங்கென்று, கேட்டானா? ஊரிலை எங்கடை வீட்டிலைபோய் கேட்டால்கூட அரிசி கிடைத்திருக்கும்" 'சட்டங்களெல்லாம் எங்களுக்குத்தானய்யா உங்களுக்கில்லை.....' நாகராசாவின் வெந்த நெஞ்சு பேசியது. தர்மலிங்கத்தாரால் அந்தப் பச்சை உண்மையை தாங்க முடிய வில்லை.

ஜீப் அவரது கோபத்தைத் தெரிவிப்பதுபோல உறுமிக் கொண்டே புறப்பட்டது.

நாகராசா ஜீப்பிற்கு கையைக்காட்டி, பல்லைக்கடித்து 'உன் நாலாம் வாய்க்கால் போரை இரவிரவாய் சூடடிச்சுப் பகிராட்டால் பாரடா......' என்று உறுமினான்.

நாகராசாவின் உண்மையிலும்பார்க்க தமது ஆசீர்வாதம் சின்னராசாவிற்கு பயன்தராததே அவருக்கு அதிக கோபத்தைத் தந்தது. வயல் காற்று காதைக் குளிரச்செய்தது. சினம் சிறுத்தது. தன் மனதிற்கே சொல்லிக்கொண்டார்:

"பாபா பகவான் அவதாரம், அவரது ஆசி எனக்குப் பலன் தரும். நான் அவரது அருள்பெற்ற சாதாரண மனிதன், என் ஆசீர்வாதமும் சாதாரணமானதாகவே இருக்கும்".

*(ஏப்.1974)*

## புதிய சுலோகங்கள்

"தேவி, தேத்தண்ணி கொண்டுவா"

சில்வாவுடன் பேசிக்கொண்டிருந்த சுந்தரம் குரல் கொடுத் தான்.

முதல் திகதி காலை முதல் மாதம் வாங்கிய கூப்பன் சீனியை மிக அருந்தலாகப் பாவித்தும் 20ஆம் திகதியின் பின் சீனியே யில்லை. வீட்டிலே பிள்ளைகளிடையே கசப்பும் சண்டையும். காலையில் தேநீர் தயாரிப்பதையே நிறுத்தியி ருந்தாள். இப்போ தெல்லாம் சீனியில்லாது தேநீர் வற்புறுத்திக் கேட்பவர் களுக்கு மட்டுமே அவள் தயாரித்துக்கொடுப்பாள்.

சில்வா சுந்தரத்தின் தொழிற்சங்கத்து நண்பன். சில்வா மட்டுமல்ல, வழமையாக வந்துபோகும் தொழிற்சங்க நண்பர் களுக்கெல்லாம் தேநீர் கொடுப்பது வழமை. இப்போது சுந்தரம் கேட்டால் மட்டுமே கொடுப்பாள். சீனி இருந்தால் சரி, இல்லாவிட்டால் வெறும் சாயந்தான்.

சில்வாவிற்காக அயல் வீடுகளில் கடன் கேட்கலாமா என்று ஒரு கணம் நினைத்தாள். தோட்டத்தில் எல்லா சந்துகளிலும் அதே நிலைதான். பெரும்பாலான சந்துகளில் பணக்கஷ்டம் ஏற்படும் போது வெளியே கடைகளுக்கு எடுத்துச்சென்று நாலு ரூபாவிற்கு விற்றுவிடுவார்கள். தேவிக்குக்கூட அந்த நிலை ஏற்படுவதுண்டு. பிள்ளைகளுக்கு அஞ்சி அவள் கஷ்டத்தைப்

பொறுத்துக் கொள்வாள். இளையவன் போதிய இனிப்பில்லா விடின் தேநீரையே தாயின் முன் வீசிவிட்டு நிலத்தில் கிடந்து கத்துவான். அவனை ஆற்றுவதென்பது இயலாதகாரியம்.

தேவி தயக்கத்தோடு சீனியில்லாத சாய நீரைக் கொண்டு போன போது அங்கு முனிதாசாவும் முத்தையாவும் வந்திருந் தனர். பனாகொடை காம்பில் பிரதமர் ஆற்றியதாகக் கூறப்படும் உரைபற்றியும் அங்கு நடைபெற்றதாகக் கூறப்படும் வரவேற் புப் பற்றியும் ஆராய்ந்து கொண்டிருந்தனர். மற்றவர்களுக்கும் தேநீர் கொண்டுவரும்படி சுந்தரம் கூறினான். தமக்காக ஊற்றி வைத்திருந்த தேநீரை அலுமினிய கப்புகளில் சுடச்சுடக் கொண்டுவந்து வைத்தாள்.

"புலிகளின் சலசலப்பு ஆபத்தானது. மக்களுக்கு ஆயுதம் வேண்டும்".

முனிதாசா சொல்லிக்கொண்டிருந்தான். அவளுக்கு எதுவும் புரியவில்லை.

சென்ற ஆண்டு மே முதல் திகதியன்றும் இவர்கள் யாவரும் காலையிலேயே வந்தது, அவள் நினைவில் வந்தது. பாணும் பருப்புக்கறியும் சீனி போட்ட தேநீரும் வந்தவர் அனைவ ருக்கும் வழங்கினாள். அதற்கு முந்திய மே தினங்களிலும் இது வழமையாக நடைபெற்றுவந்தது.

இந்த ஆண்டு பாண் என்ன, சீனிபோட்டுத் தேநீரே கொடுக்க முடியவில்லை. தேவிக்கு வெட்கமும் வேதனையும் நெஞ்சில் குமுறியது.

சங்கம் சங்கம், சோஷலிசம் சோஷலிசம் என்றெல்லாம் என்னைக் கட்டியகாலத்திலிருந்து பேசிக்கொண்டேயிருக் கிறார். வாழ்க்கை தேய்ந்துகொண்டேபோகிறது. இளையவன் பிறப்பதற்கு முன் தைத்த சிவப்புச்சட்டையை காலையிலே

கேட்டார். எடுத்து விரித்தபோதுதான் இவருக்கு தொய்யலாகப் போகிறது என்பது தெரிந்தது. என் மனத்துன்பத்தை எவருக்குச் சொல்லி ஆறுவது. அவருக்கோ பிள்ளைகளுக்கோ வயிறு நிரம்ப ஆன சாப்பாடுதான் கொடுக்க முடிகிறதா?

தனக்குக் கிடைக்கும் கூலியை கொண்டுவந்து தருவார்.

"இந்தா அப்பா இவ்வளவுதான். என்னவும் செய்துகொள்".

கண்மூடிக்கொண்டு தன் தொழிற்சங்க வேலை என்று இரவுபகலாக அலைந்து திரிவார்.

அவர் தந்த கூலிப்பணத்தில் முன்பு வாங்கிய சாமான்களில் மூன்றில் ஒரு பங்குதானும் வாங்க முடியவில்லை. ஏன் இந்நிலை ஏற்பட்டது?

"துறைமுகத்திலை நீங்கள் இறக்குகிற அரிசி, மா, சீனியாக உங்கள் கூலியை வாங்கிக்கொண்டுவந்தால் எனக்குப் பிரச் சனையில்லை".

தேவி சொல்லிப்பார்த்தாள்.

"அவங்கள் தருவாங்களா? திருடித்தான் கொண்டுவர வேண்டும்".

"எங்கடை தேவைக்கு கூலி வாங்காமல் அப்பிடியாதல் கொண்டாருங்கோவன் எனக்கு வீட்டுப்பிரச்சனையாவது தீரும்".

"நாங்கள் மட்டுமா வாழவேண்டும் இந்த நாட்டில் ஒரு கோடி மக்கள் வாழவேண்டும்".

அவர் எப்பொழுதும் பரவலாகவே பதில் கூறுவார்,

"ஏன் இந்தக் கஷ்டம் என்று அன்றைக்கு முத்தையாவைக் கேட்டன். எங்க உழைப்பை இவங்கள் திருடுறாங்கள் என்று சொன்னான்.

அவரால் எதுவும் கூற முடியவில்லை. வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு தலை குனிந்தபடி மௌனமாக இருந்தார்.

தொழிற் சங்கத்தில் செயலாளராக இருக்கிறார், தொழிலாளரிடை நல்ல மதிப்புப் பெற்றிருக்கிறார் என்றே அப்பா அவரைத் திருமணம் பேசி கட்டிவைத்தார். அக்காலத்தில் அவரைக்காண அடிக்கடி பலர் வீட்டுக்கு வருவதைக் கண்டு நானும் பெருமைப்பட்டேன்.

கலியாணம் முடிந்து இத்தோட்டத்தில் வந்து குடியேறியதும் ஒரு கட்டிலும் நாலு நாற்காலியும் வாங்கினார். நான் பெருமைப் பட்டேன். இன்னும் ஏதோவெல்லாம் வாங்கித் தருவதாக சொல்லிக் கொண்டேயிருந்தார். எதுவும் நடைபெற வில்லை. கட்டில் உடைந்து ஈடாடிக் கொண்டிருக்கிறது. நாற்காலியில் இரண்டு திருத்த முடியாதபடி உடைந்து அடுப்பில் வைத்து எரித்துவிட்டேன். மற்றவை பின்னாமல் கிடக்கின்றன. மூத்தவன் கயிறு போட்டுக் கட்டியிருக்கிறான்.

வளரும் வயதில் ஆறு பிள்ளைகள், அவர்களது அசுரப் பசியைத் தணிப்பதென்பது விளையாட்டல்ல. அவருக்கென்ன தெரியும்? தொழிற் சங்கத்தோடும் அரசியலாராய்ச்சியோடும் சுற்றித்திரிவார்.

“அம்மா பாண் கொண்டுவந்திட்டன்”.

மூத்தவன் கியூவில் நின்று திரும்பி விட்டான். காட்டுக்கு இரண்டு றாத்தல் பாண். இதை எத்தனை பேருக்குப் பகிர்வது?

மனம் கேட்காமல் ஒரு பாணை மெல்லிய துண்டுகளாக வெட்டிக் கொண்டுபோய் விருந்தாளிகள் முன் வைத்தேன். அவர்கள் தாம் சாப்பிட்டு விட்டு வந்ததாகப் பொய்கூறி உண்ண மறுத்தனர். அவர் கூட வற்புறுத்தவில்லை. இரண்டு துண்டை எடுத்து கடித்து தேநீரைக் குடித்தார்.

மே தின ஊர்வலத்தில் சுலோக அட்டைகள் பற்றி ஆராய்ச்சி நடந்து கொண்டிருந்தது. தொழிற்சங்கத்தில் அவருக்கு முன்னர் இருந்த தலைமைப் பதவி எதுவும் தற்போது இல்லை. கமிட்டியில் மட்டும் ஓர் உறுப்பினர். அரசைச் சார்ந்தவர் ஆதிக்கத்திலேயே தலைமைப் பதவியும் கமிட்டியும் இருந்தது. அவர்கள் பல வசதிகளை அரசிடம் தமக்காகப் பெற்றனர். உறுப்பினர்களிடை மட்டும் இவருக்கு ஆதரவு வளர்ந்து வந்தது.

மே தினத்தை தனியாகக் கொண்டாடும் தீர்மானம் கமிட்டியில் தோல்வியடைந்தது. அரசு சார்ந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ள பெரும்பாலானோர் வரமாட்டார்கள் என்ற கணிப்பையும் அவர்கள் ஏற்கத் தயாராக இல்லை. ஊர்வலத் தில் பங்கு பற்றி புதிய கோஷங்களை எழுப்புவதென இவரது ஆட்கள் முடிவு செய்தனராம். மூத்தவன் இவற்றை அறிந்து சொன்னான்.

முன்னைய மேதினங்களில் அவர்களது தோட்டமே பெரிய கோட்டையாக விளங்கும். முதல் நாள் இரவிரவாக கொடிகள் தைக்கப்படும். சுலோக அட்டைகள் எழுதப்படும்.

“ஏன் உங்க மே தினத்தில் இப்போதெல்லாம் உசாரைக் காணவில்லை”.

முதல் நாளிரவு அவரைத் தேடி வந்த தம்பையாவைக் கேட்டிருந்தாள்.

“சரியான அரசியல் போதனையில்லை. கூலி உயர்வுப் போராட்டத்திற்காக மட்டுமென்று தொழிற்சங்கங்களை வளர்த்து விட்டார்கள்”.

தேவிக்கு அவன் கூறியது முற்றாகப் புரியவில்லை. அவருக்கும் கூலி உயர்ந்தது வீட்டுத்துன்பங்கள் அதனிலும் பல

மடங்காக உயர்ந்து வருவதை அவளால் நன்கு உணர முடிந்தது. இரண்டு வருடமாக ஒரு புதிய சேலை தானும் வாங்க முடிய வில்லை. பழைய சேலைகளை அலம்பி அலம்பி கட்டி அவை இத்துவிட்டன.

“நீங்கள் சரியான அரசியலைப் போதிப்பது தானே”

அவள் சொன்னாள்.

“அதில் தான் இப்போது ஈடுபட்டிருக்கிறோம்”.

“அது என்ன புதிய அரசியலோ”

கேலியாகவே கேட்டாள்.

‘புரட்சிகர அரசியல்’

“நாளைக்கு அரசுக்கு வால் பிடிக்கும் ஊர்வலத்தில் போக மாட்டீர்களாக்கும்”

“கட்டாயம் போகப் போகிறோம். புதிய சுலோகங்களை முன் வைக்கப் போகிறோம்”

அவர்களது முடிவு அவளுக்கே வியப்பாயிருந்தது.

“கூலி உயர்வு கேட்க மாட்டீர்களாக்கும்”

“அதை நாம் கேட்க மாட்டோம்”

“ஆச்சரியமாயிருக்கே. அப்போ ஒருத்தரும் ஊர்வலத்தில் வர மாட்டாங்களே”

தேவி சிறிது நளினமாகவே சொன்னாள்.

“அதை அரசுக்கு வால் பிடிப்பவர்களே கேட்பார்கள். புரட்சிகர அரசியலறிவு போதிக்கப்படாத தொழிலாளர்களை திருப்திப்படுத்த கூலி உயர்வை முன்வைத்தே கோஷம் எழுப்புவார்கள்”

“உங்க அரசியலை அந்த ஏமாறும் தொழிலாளர்களுக்கு நீங்க போதிப்பதுதானே”

“அதில் தான் இப்ப ஈடுபட்டிருக்கிறோம்”

தம்பையா சிறிதும் விட்டுக்கொடுக்காதவனாக தேவிக்குப் பதில் கொடுத்துக் கொண்டிருந்தான்.

“நாளைக்கு ஊரடங்குச் சட்டம் போட்டால் என்ன செய்வீர்கள்? எல்லா இடமும் அப்பிடித்தான் பேச்சு”

“அதை எதிர்த்து ஊர்வலம் நடத்தியே தீருவோம். அப்பிடி தீர்மானமே எடுத்து விட்டோம்”

தம்பையா காலையில் வருவதாகச் சொல்லிவிட்டுப் போய் விட்டான். அவன் பேச்சிலிருந்து அவர்களது சங்கத்தில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டிருப்பது தெரிந்தது. அவள் திருமணமாகி அந்த தோட்டத்திற்கு வந்த காலம் தொடங்கி புரட்சி பற்றிப் பேசப்படுவதை அவள் கேட்டிருந்தாள். ஆனால் இவர்கள் பேச்செல்லாம் தேர்தலுக்கு வோட்டுப்போட்டு புரட்சியை எதிர்பார்ப்பதாகவே இருந்தது. தற்போது தான் புதிய விதமாகப் பேசிக்கொள்கிறார்கள்.

நேரம் ஆக ஆக மேலும் பலர் வந்துகொண்டிருந்தார்கள். பல புதிய முகங்கள், இளைஞர்கள். அவர்கள் சுலோகங்களை எழுதிவந்தனர். ஆவலோடு படிக்க முயன்றேன்.

“மக்கள் கையில் ஆயுதங்களைக்கொடு”

“ஏகாதிபத்தியத்தை ஒழிப்போம்”

“தரகு முதலாளிகளை விரட்டுவோம்”

தலைகீழாகக் கிடந்த சிலவற்றை முழுமையாக அவளால் வாசிக்க முடியவில்லை. அங்கேயும் சிலர் சுலோகங்களை எழுதுவதில் ஈடுபட்டிருந்தனர்.

தேவி மும்முரமாக சமையலில் ஈடுபட்டாள். அவர் ஊர்வலமென அவர்களோடு போய்விட்டால் இரவுமட்டும் பட்டினியிருக்க நேர்ந்து விடும் என்று கவலைப்பட்டாள். வீட்டில் இருந்த அரிசி முழுவதையும் எடுத்துப் புடைத்தாள்.

சமையலில் ஈடுபட்டிருந்தபோதும் அவர்கள் புறப்படுமுன் சுலோகம் யாவையும் படித்துவிட வேண்டும் என்னும் அவா எழுந்தது.

சமையல் முடியும் முன்னரே சுந்தரம் வந்து தாங்கள் புறப்படப்போவதாகக் கூறினான்.

‘சாப்பிடாமலா?’

அவன் பதில் கூறாதபோதும் அவள் கவலைப்பட்டாள். வடித்த கஞ்சிக்குள் உப்பைப் போட்டுக்கொடுத்தாள்.

சமையலை அப்படியே விட்டுவிட்டுச்சென்று எடுத்துச் செல்லும் சுலோகங்களைப் படித்தாள்.

“அவசரகால நிலைமையை அகற்று”

“நான்கு மலைகளையும் அகற்றுவோம்”

“புதிய ஜனநாயகப் புரட்சியை ஏற்படுத்துவோம்”

“புள்ளடி போட்டது போதும்”

“புறப்பட்டு வாருங்கள் - புரட்சிக்கு வழிவகுப்போம்”.

(மே.1974)

# பூசாரிகள்

“டே உனக்கு என்ன வேணுமென்றடா என்ரை புருசனை நாளைக்கு வா, நாளைக்கு வா எண்டு அலைக்கிறாய். உன்ரை கொப்பன் வீட்டுப் பணத்தையாடா கடன் குடுக்கிறாய். எங்களுக்கென்ன பணம் ஓசிலையாடா கடன் தாறாங்கள். இதுக்கை இவன் ஒரு பூசாரி.”

சீதேவி எழுப்பிய குரலைக் கேட்டு சந்தியில் நின்றவர் யாவரும் திரும்பிப் பார்த்தனர். சிலர் நெருங்கி வந்து நடந்ததை அறிய ஆவலாய் நின்றனர். ஆத்திரத்தில் சுற்றாடலை மறந்து சீதேவி சங்கத்து மனேச்சரை ஏசிக்கொண்டு நின்றாள்.

“காசு வேணுமெண்டால் வாயைத் திறந்து கேளன்ரா. உனக்கொரு இருபத்தைஞ்சு ரூபாயை எறிஞ்சு போட்டுப் போறன். நீ வீடு கட்டினதும் சோக்குப்பண்ணித் திரியிறதும் நீ கஷ்டப்பட்டு உழைச்ச பணமாடா? ஊரவையிட்டை தட்டிச் சுத்தினதெண்டு நான் சொல்லித்தான் ஊரிலை தெரிய வேணுமோ. மற்றவங்களுக்கு தலைநிமிந்து சொல்ல தைரிய மில்லை, முதுகெலும்பில்லா தவங்கள். நீ ஒரு வெள்ளை வேட்டிக்கள்ளன் எண்டு உன்ரை வெள்ளாளச் சாதியே பேசினதை இந்த காதாலை கேட்டிருக்கிறன்.”

சீதேவியின் குரல் ஏறிக்கொண்டு வந்தது. அவளை எதிர்த்து நிற்க எவருக்கும் துணிவு ஏற்படவில்லை. சந்தைக் கொட்டி லுக்குள் நின்றவரும் வெளியே வந்து வேடிக்கை பார்த்தனர்.

விளையாடிக் கொண்டு நின்ற சிறுவர், சிறுமியர் சீதேவியை வளைத்துக்கொண்டு நின்றனர்.

'உவனுக்கு உது வேணும்' என்று சிலர் முணுமுணுத்தனர்.

சந்தைக் கொட்டிலுக்குள் காய்கறி விற்றுக்கொண்டிருந்த முத்தியைப் பார்த்து குத்தகை வாங்கும் அரியம் சொன்னான்:

"போய் அவளை ஒரு மாதிரி சமாதானப் படுத்திவிடு."

முத்தி எழுந்து தளர்ந்திருந்த சேலையை இறுக்கிக் கட்டிக் கொண்டே வெளியே வந்தாள்.

"உனக்கு பெம்பிளை வேணுமெண்டாலும் சொல்லன்ரா. எனக்கு இன்னும் தீட்டு நிக்கேல்லை. நானே வாறன்ரா...."

சீதேவி தொடர்ந்து பேசிய வார்த்தைகள் அனைவரது மனதையும் கூசச் செய்தன. கரிய நிறமானாலும் கட்டான உடல் அமைப்பு. உருண்ட கரிய விழிகள். அழகான பல்வரிசை. நடு உச்சி பிரித்து மயிரை முடிந்திருந்தாள். கருநீல நிறத்தில் வெள்ளை நூல் கரை ஓடிய சேலை உடுத்திருந்தாள். மூக்கிலே ஒரு கல்லு வைத்த மூக்குத்தி. அது வரை வாய் பேசாது கேட்டுக்கொண்டிருந்த மனேச்சர் இராசதுரை அவளைப் பார்த்து அடங்கிய குரலிலேயே சொன்னான்:

'சரிசரி போதும், போ..... போ.....'

"ஏன் தம்பிக்கு ரோசம் வந்து சீலை உரியுதோ. அவற்றை உருட்டுப் பிரட்டெல்லாம் அம்பலமாகுதெண்டு இப்பதான் மானம் வருதாக்கும். பிச்சைக்காரன் போலை தட்டிப் பிழைக் கிறவனுக்கும் பொம்பிளைக் கள்ளனுக்கும் மானம், ரோசம் சீக்கிரம் வந்துவிடாது".

முத்தியும் வந்து சீதேவியின் கையைப் பிடித்து 'போதும் வாடீ' என்று இழுத்தாள்.

“விடு முத்தி, உவனை இண்டைக்கு ஒருகை பார்க்காமல் நான் போக மாட்டேன். வெங்காயத்துக்கு எல்லாருக்கும் காசு குடுத்திட்டான். நாங்கள் எழுதிக் குடுத்ததைத்தான் இன்னும் வைச்சுக்கொண்டு என்ரை அவருக்கு கோயில் பூசாரிபோலை விளையாட்டுக் காட்டுறான். அதை ஏன் எண்டு கேக்கிறதும் பிழையா? காலிலை சுகமில்லாத அந்த மனுஷன் எத்தினை நடை போட்டுட்டுது தெரியுமா?”.

“சரி சரி போதுமெடி, போ. அது நான் அரியத்திட்டை சொல்லி எல்லாம் பார்க்கிறேன்”.

முத்தி சொல்லியபடி மீண்டும் இழுக்க முயன்றாள்.

“எனக்கு ஒருதற்றை தயவும் வேண்டாம். உவன் என்ன முடிவு சொல்லுகிறான் என்றதை கேட்டிட்டு போய் என்ரை மேனுக்கு பதில் சொல்ல வேணும்.”

சீதேவி முத்தியை உதறிவிட்டு மேலும் ஏசியபடி சங்கத்து வாசலுக்குச் சென்றாள்.

“சரி சரி போய் உன்ரை மேனை அனுப்பு”.

இராசதுரை சமாளித்துக்கொண்டு உள்ளேயிருந்தபடி சொல்லிக் கொண்டே அவளின் ஏச்சுகளைப் பொருட்படுத் தாதவன் போல தலைகுனிந்து எழுந்து வேலையில் ஈடு பட்டான். அவன் கரங்கள் நடுங்கிக் கொண்டிருந்தன.

“இப்ப மேனை அனுப்பட்டாம். இப்பிடிப்பட்டவங்களை நடுத்தெருவிலை வைச்சு சீலை உரிஞ்சு போட்டு சுறாவா லாலை வெளுக்க வேணுமெண்டு புறப்பட்டவனை நான் தான் மறிச்சுப் போட்டு வந்தனான். சாதிபேசி அடக்கிறது, எங்களைப் போலை வேர்வை வடிய நிலத்தைக்கிண்டி வாழுற ஏழைகளை அலைக்கழிச்சுப் பிடுங்கப்பார்க்கிறவங்களுக்கு

அவன் சொல்லுற மருந்து தான் சரி, இண்டைக்கு இவன் என்னாலை தான் பிழைச்சான்'.

"சரி போதும் சீதேவி பார் சந்திச் சனமெல்லாம் கூடி விட்டது. வெக்கக்கேடு. வா போவம்."

முத்தி மீண்டும் இழுத்தாள்.

"ஆருக்கு வெக்கம். நான் நீதி நியாயத்தைத்தானே கேட் கிறன். எந்த வேளாளனெண்டாலும் வந்து அவனுக்காக பதில் சொல்லட்டும் பாப்பம். என்ரை மேன் வந்தால் கையாலை தான் நீதி கேட்பான்" சீதேவி திமிறிக் கொண்டு மேலும் முன்னேறினாள்.

"அவங்களுக்கு விதானை, பொலிசுக்காரன் இல்லாத மாதிரி நீ பேசிறாய்".

முத்தி மெதுவாகச் சொன்னாள்.

"என்ரை மேன் ஆட்கள் தனிய எண்டு நினைக்காதை. ஒரு கூட்டமே இருக்குது. அவங்கள் உந்த வெருட்டுக்கெல்லாம் பயப்பிடமாட்டான்கள்."

சீதேவியின் சீற்றம் அப்போதும் தணியவில்லை.

முத்தியோடு அரியம் அனுப்பிய இரண்டாவது கையாளான வெள்ளைச்சியும் சேர்ந்து கொண்டாள். சீதேவி உடலை உலுப்பி விடுவித்துக் கொண்டு போய் மீண்டும் கேட்டாள்:

"இப்ப என்னடா சொல்லுறாய்"

"சரி போய் பொன்னனை அனுப்பு"

இராசதுரை ஆற்றா நிலையில் அடிக்குரலில் கூறினான்.

"என்ரை புருஷன்ரை பேர் பொன்னனில்லை, பொன்னுத் துரை. மரியாதையாக எங்கடை பேர்களை சொல்லப் பழகிக் கொள். நான் வாறன்."

முத்தியும் வெள்ளைச்சியும் சீதேவியின் இரு புறமும் பிடித்தபடி அழைத்து வந்தனர். அவர்களைத் தொடர்ந்து சிறு பிள்ளைகள் ஆரவாரத்தோடு சென்றனர்.

தெருவில் ஏறிய போதும் ஆத்திரம் அடங்கா நிலையில் சீதேவியின் உறுமிய குரல் ஒலித்தது:

"நான் வாய் திறந்ததும் அவன் சுறுண்டுபோய் பூனை போலை இருந்தான் பாத்தியா? இனிமேல் உவன் எனக்கென்ன, எங்கடை ஆட்கள் எவருக்கெண்டாலும் இப்பிடிச் சேட்டை விடுவானென்றால் என்ரை மேனிட்டை சொல்லித் தான் உவனைத் திருத்த வேணும்."

(மே.1974)

# என்னதான் செய்துவிடப் போகிறார்கள்?

“நீ ஏன் யூனிபோம் போட்டுக்கொண்டு வரேல்லை”

பாடசாலை மாணவரிடை ஒழுக்கமும் ஒழுங்கும் நிலை நாட்டவேண்டும் என அடிக்கடி ஆசிரியர் குழுக்கூட்டத்தில் வலியுறுத்தும் மிஸ்சகிதேவி, பி.ஏ.சாந்தாவின் மாறுபட்ட உடையைப் பார்த்து கண்டிப்போடு கேட்டாள்.

“வெள்ளைத்துணி கிடைச்சால்தானே டீச்சர் யூனிபோம் தைக்கலாம்”

சகிதேவி இப்படியான பதிலை முன்கேட்டதில்லை.

“கூப்பனுக்காவது வாங்கித் தைக்கலாமே”

“ஒரு யாரிலை எப்படி டீச்சர் யூனிபோம் தைக்கிறது. பிளவுஸ்தான் தைக்கலாம்”

டீச்சரின் ஏ வடிவத்தில்வெட்டி கைகளிலும் இடுப்பிலும் சதையோடு ஒட்டிக்கொண்டிருந்த சட்டையைப் பார்த்தபடியே கூறினாள்.

வகுப்பிலிருந்த மற்ற மாணவ மாணவியர் வந்த சிரிப்பை அடக்கினர். சகிதேவி டீச்சரின் சரித்திர பாடத்தின்போது அவர்கள் வாய்விட்டுச் சிரிப்பதில்லை. அவருக்குக் கோபம் பொத்திக் கொண்டு வரும் என்பதை அவர்கள் அறிவர்.

“ரவுனிலை கடையிலை வாங்கித் தைக்கிறதுதானே”

"கூப்பன் துணி வாங்கவே காசில்லை டீச்சர், எப்பிடி யாருக்கு ஆறு, ஏழு ரூபா குடுத்து வெளியிலை வாங்கிறது"

சாந்தா வகுப்பிலேயே துணிச்சல்காரி என்பதை யாவரும் அறிவர். ஆயினும் சகிதேவி டீச்சரை எதிர்ப்பது என்பது எல்லோராலும் முடியாது.

"யூனிபோம் போட முடியாவிட்டால் ஏன் பள்ளிக் கூடத் துக்கு வாறீங்கள்?"

'படிக்கிறதுக்கு டீச்சர்'

அடக்கமுடியாமல் வகுப்பிலுள்ள யாவரும் சிரித்தனர். பாடசாலையிலேயே செல்வத்தாலும் செருக்காலும் மட்டு மல்ல 'ஸ்ரையிலான ரீச்சர், என்றும் பாராட்டுப்பெற்ற சகிதேவிக்கு ஆத்திரமாத்திரமாக வந்தது. இடுப்பில் செருகி யிருந்த கைக் குட்டையை எடுத்து மூக்கில் அரும்பிய வியர்வை யைத் துடைத்தாள்.

"சரி, வகுப்பு முடியட்டும் உன்னை பிரின்சிபலிட்டை கொண்டுபோய் விடுறன்"

"ஏன் டீச்சர், மற்றவைபோலை என்னைப் பொய்பேசச் சொல்லுறீங்களா? நான் உண்மையைத்தானே பேசுகிறேன்".

"சரி உன்ரை வாய்போதும். இரடி, பாடம் படிப்பம்"

சகிதேவி வேறு வழியின்றி தன் அதிகாரத்தை செலுத்தி சாந்தாவை இருத்தினாள். கண்களில் தோன்றிய கோபத்தை கண்ணாடி மறைத்தது. வகுப்பில் அமைதி நிலவியது. பிரித் தானியர் காலத்திய ஆட்சிச் சிறப்புகள் பற்றி அவள் கற்பிக்கத் தொடங்கினாள்.

மணியடித்ததும் நடந்த யாவையும் மறந்துவிட்டதுபோல சகிதேவி வகுப்பறையை விட்டு சுறுசுறுப்பாகப் புறப்பட்டாள். அவளது ஊதாகலர் சிங்கப்பூர் நைலக்ஸ் சேலை காற்றில்

அசைவதை வாயைப்பிளந்து சில மாணவியர் பார்த்துக் கொண்டிருந்தனர். உண்மையில் நடந்தவை யாவும் சகிதேவி யின் மனதைக் குடைந்து கொண்டிருந்தன.

அடுத்த பாடம் 9 ஆம் வகுப்பில், ஏழாம் வகுப்பில் நடந்த சம்பவத்தின் எதிரொலிப்பை அங்கு காட்டமுயன்றாள். கடு கடுப்புடன் பாடத்தை ஆரம்பித்தாள்.

"கண்டி ஒப்பந்தம் எத்தனையாம் திகதி எழுதப்பட்டது? சிவராசா சொல்லு"

திடீரென ஒரு கேள்வியைத் தூக்கிப்போட்டாள். சிவராசா பற்றி மற்றும் ஆசிரியர்கள் குறைபட்டது நினைவு வந்தது. அவனை அடக்கவேண்டும் என்று நினைத்தாள்.

'1815இல்'

"மாதம், திகதி சொல்லு"

"உதெல்லாம் பாடமாக்கவேணுமா டீச்சர்?"

"நீ என்னைக் கேள்வி கேட்கிறியா?"

"புத்தகத்திலை இருக்கும் டீச்சர்"

மாணவ, மாணவியர் வந்த சிரிப்பை அடக்கினர். சகி தேவிக்கு ஆத்திரம் அதிகரித்தது.

"உன்னுடைய புத்தகம் எங்கை"

"புத்தகம் இல்லை டீச்சர்"

"ஏன் வாங்கேல்லை"

"காசில்லை"

"புத்தகமில்லாமல் என்ன படிப்பு?"

"நீங்க சொல்லித்தருவீங்கதானே"

மீண்டும் சிரிப்பு எழ இருந்ததைச் சகிதேவி கண்டாள்.

“புத்தகமில்லாம வந்தவர்கள் எழும்புங்கோ”

கையை உயர்த்திக் கூறும்போது அவளது தங்கக் காப்புகள் கலகலத்தன. பதினைந்துபேர்வரையில் எழுந்துநின்றனர்.

“நீங்களெல்லாம் எப்பிடித்தான் சோதினை பாஸ்பண்ணப் போறீங்களோ தெரியாது.”

சினத்தோடு சகிதேவி கூறினாள். மயிரைச் சிறிதுசிறிதாகப் பின்னி வட்டமாகப் போட்ட தன் கொண்டையைக் கையால் தடவிக் கொண்டாள்.

“சோதினை பாஸ்பண்ணினால் வேலை தருவீங்களா? டீச்சர்”

சிவராசா கேட்டான், அதைக் காதில் விழுத்தாதவள் போலக் காட்டிக்கொண்டு முதல் வரிசையில் எழுந்து நின்ற ஒரு மாணவியைப் பார்த்துக் கேட்டாள்:

“ஏன் நீ புத்தகம் வாங்கேல்லை, வீட்டிலை வாங்கவேணு மென்று சொல்லேல்லையா?”

“பாண் வாங்கக் காசில்லை, உனக்குப் புத்தகம் வாங்க ஆறு ரூபாவா என்று அண்ணன் கேட்டான்” என்றாள்.

“உன் அண்ணன் என்ன செய்கிறான்?”

“தோட்டம் செய்கிறார்”

“நீ ஏன் படிக்கிறாய்?”

“வேலைபார்க்க?” சிரித்தபடியே கூறினாள்.

“இங்கை இருக்கும் எல்லாருமே வேலைபார்க்கத்தான் படிக்கினம் டீச்சர்”

சிவராசா சத்தமிட்டுச் சொன்னான்.

“எல்லாருக்கும் வேலை கிடைக்கப்போகுதா?”

“அப்ப ஏன் டீச்சர் படிப்பிக்கிறீங்க?”

“அறிவுக்காகத்தான் கற்பது என்பதை முதலில் எல்லோரும் கவனத்தில் வைக்கவேண்டும்.”

சகிதேவி கூறியதும் சிவராசா பலத்த குரலில் கேட்டான்.

“அறிவு என்றால் என்ன டீச்சர்?”

“அறிவு என்றால் அறிவுதான் உங்களுக்கு நான் படிப்பிக்க வந்தேனே”

இரண்டாவது தோல்வியோடு வகுப்பறையைவிட்டு வெளியேறினாள். முருகேசு மாஸ்டர்தான் பிள்ளைகளையெல்லாம் பழுதாக்குகிறார் என்ற முடிவான கருத்தோடு, தான் பாடசாலையில் படித்த காலத்திய அடக்க ஒடுக்கத்தை நினைந்து கொண்டே, வீட்டிலிருந்து பிளாஸ்கில் கொண்டுவந்த கோப்பியை அருந்த ஆசிரியர்களின் ஓய்வு அறையை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். இந்தப் போக்கு நீடிப்பின் இனிமேல் ஆசிரியர் தொழிலே பார்க்க முடியாது என்ற எண்ணம் அவள் நினைவில் எழுந்தது.

“மாஸ்டர் உங்களைத்தான் தேடுறன்”

எதிரே வந்த முருகேசு மாஸ்டரை நிறுத்தினாள். வழமையாகவே அவள் அவரோடு அதிகம் உரையாடுவதில்லை. மாணவரிடை அவர் பெற்றிருந்த ஆதிக்கம் அவளுக்கு வெறுப்பையே தந்திருந்தது. தன்போன்றவருக்கு எதிராக மாணவர்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறார் என்றும் நம்பியிருந்தாள். இன்று அடிபட்ட ஆத்திரத்தை அவர்மேல் தீர்க்க மனம் உந்தியது.

“என்ன மாஸ்டர்? இந்தக் கல்லூரியைவிட்டே ஓடி விட வேணும் போலைகிடக்கு. உங்க மாணவர் செய்யிற அட்டகாசங்களைப் பொறுக்க முடியேல்லை”

அவள் நினைத்ததற்கு மாறாக அவள் குரல் ஒலித்தது.

"ஏன் டீச்சர்? என்ன நடந்தது?"

முருகேசு ஆர்வத்தோடு கேட்டார்.

"சோதினை பாஸ்பண்ணினால் வேலை தருவீங்களா? அறிவு என்றால் என்ன? என்றெல்லாம் என்னை கேட்கிறாங்கள். நாங்கள் படிச்சகாலத்தில் இப்பிடியா வகுப்பிலை வாய்காட்டிக் கொண்டிருந்தம்"

முருகேசு நிலைமையை நன்கு உணர்ந்துகொண்டார்.

"அந்தக்காலத்து நிலை வேறு ரீச்சர், இந்தக்காலத்து நிலை வேறு. அப்போது கல்லூரியால் வெளியேறினதும் ஏதாவது வேலை தேட முடிந்தது. இப்போது அவர்களுக்கு முன்னே இருக்கும் சூனியம் தெரிகிறது. அதன் பிரதிபலிப்புகளைத்தான் காண்கிறீர்கள். அவர்களில் தவறெதுவும் இல்லை. கல்வி முறையில் தான் தவறிருக்கிறது. என்மேல் ஏன் வீண்பழி சுமத்துகிறீர்கள். அவர்கள் உங்கள் மாணவர்தானே"

"புத்தகம் வாங்கக் காசில்லை, யூனிபோம் தைக்க துணியில்லை என்று தங்கடை வீட்டுப் பிரச்சனைகள் பற்றி எல்லாம் வெட்கமில்லாமல் வகுப்பிலை சொல்லுறாங்கள்"

அடிபட்ட ஆத்திரம் அவள் குரலில் தொனித்தது.

"அவர்கள் பொய் பேசாது துணிச்சலாக வீட்டு நிலைமைகளை சொல்லுவதை நீங்கள் பாராட்ட வேண்டும் ரீச்சர். அவர்களின் துன்பங்களுக்கு கல்வி விடிவுதரும் என்றுதான் இங்கே அனுப்புகிறார்கள். உற்பத்திக்கு பயன்படாத வெறும் புத்தக அறிவை நாங்கள் புகட்ட முனைகிறோம். இந்த ஏமாற்றுகள் நீண்டகாலம் நிலைக்காது. அதன் பிரதிபலிப்பைத் தான் நீங்கள் கண்டு ஆத்திரப்படுகிறீர்கள். இங்கு மட்டுமல்ல

வெளியேயும் இதையே காண்கிறீர்கள். நாள் போகப்போக இன்னும் மோசமடைவதையும் காண்பீர்கள்.'

முருகேசு சிரத்தையாகக் கூறியதை சகிதேவி ஏளனத் தோடேயே கேட்டாள்.

"மாணவர்களை கட்டுப்படுத்தி அடக்க ஒடுக்கமாக ஒழுங்கோடு வாழ பாடசாலைகளில் பயிற்ற வேண்டும். அதற்கு மாறாக உங்களைப் போன்றவர்கள் தவறான வழியில் தூண்டி விடுவதால் தான் நிலைமை மோசமடைகிறது. ஒழுங்கு விரும்பும் எங்களைப் போன்றவர்கள் வகுப்புகளில் நுழையவே முடியா திருக்கிறது."

பல நாள் வைத்திருந்த ஆத்திரத்தை அன்று தீர்க்க முயன் றவள் போலப் படபடப்போடு கூறினாள்.

"மாணவர்கள் எதிர்கால சமுதாயப் பிரசைகள் என்று அவர்களை நேசித்து அவர்களது இன்றைய பிரச்சனைகளை யும் எதிர்காலப் பிரச்சனைகளையும் தீர்க்கும் விதமாக கல்வி ஊட்டப்பட வேண்டும். இல்லாவிட்டால் இன்று நீங்கள் காண்பதென்ன, இதனிலும்மோசமாக நாட்டிலையே கண்டோம், அதனிலும் மோசமாக இனிமேல் காண்பீர்கள்."

"அப்படி என்னதான் செய்துவிடப் போகிறார்கள்?"

கேலியாகவே சகிதேவி பதற்றக் குரலில் தொனிக்கக் கேட்டாள். முருகேசு உணர்ச்சியோடு கூறினான்:

"இந்தச் சமுதாயத்தை உடைத்தெறியத் துப்பாக்கி எடுப் பார்கள்".

(யூன்.1974)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நூலகம்
Jaffna Central College Library

# புதிய சந்திப்பு

மழை ஓய்ந்து காற்றோடு தூறல் அடித்துக்கொண்டிருந்தது. அது வரை கோல்பேஸ் கோட் மூலையில் கூட்டத்தோடு நெருங்கி ஒதுங்கி நின்ற கந்தசாமி, காலிரோட் வழியே கொள்ளுப்பிட்டியை நோக்கி இடதுபுற நடைபாதை வழியே நடந்து கொண்டிருந்தான். மழைத்தூறலையும் குளிரான கடற் காற்றையும் பொருட்படுத்தாத ஆழ்ந்த சிந்தனை, தார் ரோட்டை பார்த்த குனிந்த நடை. ஊர்ந்து முன்னேறிய கார் ஒன்று "கிரீச்" சென்ற ஓசையுடன் நடைபாதை ஓரமாக நின்றது. சிந்தனை கலைய நிமிர்ந்து பார்த்தான். இளம் பச்சை நிற கில்மன் கார், 6 சிறீ நம்பர். பின்புற கண்ணாடியில் நீர் வழிந்தது. ஆட்களை தெரியவில்லை. பின் கதவு திறக்கப்பட்டு அழைப்பு ஓசை:

"கந்தா ஏறு"

அவன் எதிர்பாராத குரல், பழைய குரல். குனிந்து பார்த்தான். பழைய தொழிற்சங்க நண்பன் சண்முகராசா, தன் அழகான பல்வரிசையைக்காட்டி சிரித்துக் கொண்டிருந்தான். அருகே அவன் மனைவி ஆனந்தவல்லி நெற்றியில் நீர்த்துளிபட்டு கரைந்த குங்குமம், பெருமையைக் காட்ட முனையும் வலிந்த சிரிப்பு, கால்மேல் கால். சீட்டின் மேல் வலதுகரம் புரண்டு கிடந்தது.

தவிர்க்க முடியாத சூழலில் பின் சீட்டில் ஏறிக்கொண்டான். அவள் திடீரென கையை எடுத்து, கால்களையும் விடுவித்துக் கொண்டு அவனுக்கு மரியாதை காட்டுபவள்போல அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

"ஆப்ர லோங் டேய்ஸ். ஹவ் ஆயு. கடைசியாய் எப்ப பாத்தம்?"

"எழுபத்தொன்று முன்பகுதியாயிருக்க வேணும். இன்சே ஜன்ட் அக்டிவிட்டியின் முன்பு"

"ஆமாம் ஃபிரஞ் பலே முடிந்துபோகும்போது மாச் கடைசியில்"

"அதற்கிடையில் எவ்வளவு மாற்றம்"

இருவருமாக உரையாடியதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த கந்தசாமி பதில் கூறினான்:

"உங்களைப் பார்த்தாலேயே தெரிகிறதே"

"கந்தா எங்கே இப்ப இருக்கிறாய்? றொப் பண்ணி விடுகிறேனே"

"ஹொலிடேதானே. வீட்டுக்கே அழைத்துப்போவோம். பாவம் நல்லாய் நனைந்து போனார். ஹொற்றாய் ஏதேன் குடிக்க குடுக்கலாம். லஞ் எடுத்த பிறகு வீட்டிலை விடுவோமே"

ஆனந்தி முந்திக்கொண்டாள். அவளை ஆமோதிப்பவன் போல சண்முகராசா சொன்னான்:

"தற்இஸ் ஏ குட் ஐடியா, டாலிங்"

முன்னும் பின்னுமாக கார்கள் ஊர்ந்து கொண்டிருந்தன. கொள்ளுப்பிட்டி சந்தி சிக்னல் போஸ்டில் கார் நின்றது. கந்தசாமி ஆனந்தியின் வேண்டுகோளை மீற முடியாது என்பதை அறிந்து மௌனமாகவே இருந்தான்.

ஆனந்தி முன்புறம் திரும்பினாள். கழுத்தின் அழகைக் காட்டும் விதமாக நிமிர்த்திய கொண்டை, இலையோடு ஒட்டிய சிவந்த கானேஷன் மலர்கள் வளைந்து கிடந்தன.

"ஷோ வெயர் ஆயு நவ். வை டோன்ற் யு ஜோயின் அஸ் இன் பில்டிங் சோஷியலிசம் இன் திஸ் கன்றி"

மழை நீரை ஒதுக்கிக்கொண்டிருந்த 'வைப்பர்' ஊடாகப் பார்த்தபடியே சண்முகராசா கேட்டார். கந்தசாமி எதுவும் பேசவில்லை. அவன் மௌனத்தின் பதிலை அவர் உணரா மலில்லை, மஞ்சள் ஒளியைக் கண்டதும் பிரேக் காலை தளர்த்தி, கிரீன்பாத் வழியாக திருப்பி ஓட்டியபடி கதையை மாற்றினார்.

"றிப்பப்ளிக் டே எப்பிடி இருந்தது. மழைதான் கெடுத்துப் போட்டுது. என்றாலும் பிள்ளைகளின் டிசிப்பிளினை பாராட்ட வேணும். ஆமிபரேட் பரேட்தான். கவனித்துப் பார்த்தன் காலடி ஒன்றுகூட பிசகேல்லை. வெல் டிசிப்பிளின்ட் ஆமி."

சந்தியில் காரை மறித்த பொலிஸ்காரன் காரில் ஒட்டியிருந்த லேபலை பார்த்துவிட்டு முன்னேற அனுமதியளித்தான். ஆயுதம் தாங்கிய பொலிஸ் வான் ஓடிக்கொண்டிருந்தது அதைத் தொடர்ந்து ராணுவ ஜீப்.

"அவரை அறியாமல் "போரா"க பேசிக்கொண்டே போறீங்கள். மே டேயைப்பற்றி கேளுங்கோவன்' என்று சொல்லிக்கொண்டே அவனைத் திரும்பிப் பார்த்தபடி ஆனந்தி கேட்டாள்:

"மே டே ஊர்வலம் இந்தாண்டு பார்க்கேல்லையா?"

"பார்த்தனே"

"உங்க ஒப்பினியன் என்ன?"

ஆனந்தி கேட்பதற்குப் பதில் கூறாதிருக்க முடியாது.

"கோல்பேஸில் அன்று மே தினத்தன்று கண்ட தொழிலாளர்களை இன்று குடியரசு நாளில் காணமுடியவில்லை....?"

ஏன் 'பப்பிளிக்கை' இன்று காணவில்லையா?'

சண்முகராசா பொறுமையிழப்பவர்போல கேட்டார். அவரைப் பேசவிடாது தடுத்து ஆனந்தி கேட்டாள்:

"யாரை இன்று பார்த்தீங்க?"

"அழைக்கப்பட்ட அதிகாரிகளையும் அணிவகுத்து நின்ற ராணுவத்தினரையும் தான் பார்த்தேன்."

"இதைப்பற்றி இப்ப என்ன சொல்லுறீங்க"

ஆனந்தி தொடர்ந்தாள். கந்தசாமி பதில் கூறினான்:

"இவர்கள் தான் இந்த நாட்டின் ஆளும் வர்க்கமோ, இவர்களுக்கு மட்டுந்தான் குடியரசு தினமோ என்று எண்ணிப் பார்த்தேன்"

"மழை, வந்தவர்களெல்லோரும் மூலைகளில் ஒதுங்கியிருப்பார்கள்"

சண்முகராசா சமாதானம் கூறினார்.

"என்ன சொன்னாலும் நீங்கள் கூறிய விஷயத்தை சீரியஸாக யோசிக்கவே வேண்டும்"

ஆனந்தி அவன் கருத்தைக் கேட்டு பாராட்டுபவள் போலக் கூறினாள். என்றுமே அவன்மேல் தனி மதிப்பு வைத்திருந்தாள். அவனது இலட்சிய வெறியைக் கண்டு கடைசியில் அஞ்சியவள். இன்று தன் சொந்த வாழ்வில் வெற்றிபெற்று விட்டாள். ஆயினும் அவளது அடிமனதில் ஏதோ ஒரு தோல்வியின் உறுத்தலில்நோவு பேச்சில் தொனிக்கவே செய்தது.

கணவனின் பேச்சிலும் பார்க்க அவனது கருத்துக்களை அறியும் ஆர்வம் அவளை ஈர்த்தது.

எடின்பேக் கிரெசென்டை அடைந்தபோது கலகலத்துப் பேசியபடி மக்கள் கலைந்து செல்வது தெரிந்தது.

“கூட்டம் போகுது, யு.என்.பி.யின் சத்தியாக்கிரகம் ஏதேன் நடந்ததா? எல்லாம் தடை செய்திருந்தார்களே. கந்தா ஏதேனும் நியூஸ் தெரியுமா?”

சண்முகராசா ஆவலோடு கேட்டான்.

“ரிய காஸ் அடித்து எல்லாம் கலைக்கப்பட்டுவிட்டது”

“அதுதானே கேட்டன்”

“ஓ இந்த வேடிக்கையெல்லாம் பார்த்திட்டுத்தான் அங்கு வந்தீங்களோ?”

ஆனந்தி அவனைப் பார்த்து நளினமாகக் கூறியபடி மேலும் தொடர்ந்தாள்:

“வேறு என்ன நியூஸ்”

“யு, என். பி.யினர் துப்பாக்கி எடுத்து வரவில்லை. துவக்கு வைத்திருந்த பொலிசாரும் வெடி வைக்கவில்லை”

சிரித்தபடி அவளைப் பார்த்துச் சொன்னான்.

“நொன் அன்ரகனிஸ்ட் றிலேஷன்ஷிப் என்று சொல்லு றீங்கள், அப்படித்தானே. அதுக்கு தமிழிலை நீங்க நல்ல சொல்லொன்று வைத்திருக்கிறீங்க. பகைமையற்ற உறவு. சரிதானே”

“ஓ இதையெல்லாம் நீ இன்னும் மறந்து விடவில்லை.”

“யு.என்.பி.ஆட்சியிலிருந்தால் சுட்டிருப்பார்கள்”

சண்முகராசா கூறினார்.

"இதே பொலிசார்தானே இருந்திருப்பார்கள். பொலிசார் ஒரே வர்க்கத்திற்குச் சொந்தமானவர்களே..."

கந்தசாமியை இடைமறித்து ஆனந்தி கணவனின் கருத் துக்குப் பதில் கூறினாள்:

"தற் இஸ் எ மாட்டர் ஒவ் ஒப்பினியன்"

ஹோட்டன் பிளேஸால் சென்ற கார் விபுலசேன மாவத்தை யால் வலது புறமாகத் திரும்பியது.

"இந்த ரோட்டில் தான் எங்க வீடு" ஆனந்தி கூறினாள்.

"புது வீடு கட்டியிருப்பீர்கள்"

"நல்லவேளை, முந்தியே கட்டிப் போட்டம். இப்ப கட்டுவ தென்றால் இரண்டு லட்சம் வேணும். பாங் லோனும் பெற்றே...."

"பெரிய வீடாயிருக்குமே"

"நானும் மாலதியும் தான் வீட்டில். இவர் நாள்முழுதும் அந்த மீட்டிங், இந்தக் கொன்பரன்ஸ் என்று ஓடிக்கொண்டே யிருப்பார்."

"ஒரு கோப்பரேசனை சுமந்தபடி மேலும் இரண்டில் போட் மெம்பராயிருப்பதென்றால் சும்மாவா"

கந்தசாமியின் நளினம் கலந்த பேச்சைக் கேட்கப் பொறுமை யற்று தற்புகழ்ச்சியைக் கேட்க விரும்பாதவர்போல காட்டிக் கொண்டே, காரை படலையை நோக்கித் திருப்பியபடி இடை மறித்துக் கேட்டார்:

"நியூ எலைட் றூலிங் கிளாஸ் என்று அப்போது கூறினீங் களே. யாரை மீன் பண்ணி சொல்லுறீங்க."

"உங்களைப் போன்றவர்களைத்தான். மூன்று வருஷத்தில் தொழிற் சங்கத்திலிருந்து முன்னேறி பாட்டாளிக்கு புதிய சோஷலிசம் போதிக்கிறீங்களே...."

முகத்தில் அறைந்தது போல இருந்தபோதும் அதைச் சமாளித்து, பிரேக்கை காலால் அமுத்திக் காரை நிறுத்திக் கொண்டு சொன்னார்.

"சோஷலிசத்தை எங்களால் கட்டி எழுப்ப முடியாது என்று சொல்லுகிறாய். அப்படித்தானே"

அதை சிரத்தையோடு கேட்காதவன்போல காரைவிட்டு இறங்கி வீட்டைப் பார்த்தபடி கந்தசாமி கூறினான்:

"இங்கே மூன்று பேர் வாழ பெரிய மாளிகையே கட்டி யிருக்கிறீங்களே"

முகம் தெரியத்தக்கதாக பொலிஷ் செய்த வரவேற்பறையுள் மூவரும் அடி வைத்து நுழையும்போது சண்முகராசா கேட்டார்:

"அப்ப சோஷலிசம் பற்றிய உன் முடிவான கருத்தென்ன?"

"நானே சொல்கிறேன். முந்தி எத்தனை தடவை சொல்லி யிருக்கிறார். மறந்து போனீங்களா? சோஷலிசமென்பது வறுமையைப் பகிர்வதல்ல. புரட்சி நடவாமல் சோஷலிசத்தை நோக்கி முதலடி கூட வைக்கமுடியாது."

ஆனந்தி கூறியபடியே டவல் எடுத்து வருவதாக மணிப்புரி சேலை சல சலக்க அறையை நோக்கி ஓடினாள். சண்முகராசா பிரிட்ஜை திறந்தபடி கேட்டார்:

"பிரண்டியா? விஸ்கியா?"

(யூன்.1974)

# குற்றவாளிகள்

“புதுத் தெருவில் காட்டை வெட்டி நிலத்தைத் திருத்தினாய்”

“ஆமா”

“அதிலே ஒரு குடிசை போட்டு மனைவி பிள்ளைகளோடு வாழ்ந்தாய்”

“ஆமா”

“காடு திருத்தியது யார்?”

“நானே மூண்டு வருஷமா உழைச்சேனுங்க.”

“டி.ஆர்.ஓ. உன்னை நிலத்தை விட்டு எழும்படி பல தடவை எச்சரித்தார்.”

“ஆமா”

“நீ ஏன் எழும்பவில்லை?”

“அது என் நிலமுங்க. நான் காடு வெட்டித் திருத்திய நிலமுங்க”

“உன் நிலமெண்டால் உறுதி உன்னிடம் இருக்கிறதா?”

“ஏனுங்க உறுதி. நான்தானே அந்தப் பாழ் நிலத்தைத் திருத்தி அங்கேயே குடியிருக்கிறேனே.”

“அது முடிக்குரிய நிலம் - அரசாங்கத்திற்குரிய நிலம் என்று உனக்குத் தெரியாதா?”

"அரசாங்கத்திற்குரிய நிலத்தை பயிரிட்டால் எவரும் கேட்கமாட்டார்கள் என்ற துணிச்சலோடுதான் காடு வெட்டத் தொடங்கினேன்."

"நிலத்திற்குப் பாதுகாவலாக அரசாங்க அதிகாரிகள் இருப்பது தெரியாதா?"

"அதிகாரியென்று எங்க டி.ஆர்.ஓ.வைச் சொல்லுறீங்களா? அது அவருடைய நிலமில்லையே"

"அப்ப யாருடைய நிலமென்று சொல்லுகிறாய்?"

"அது என் நிலமுங்க."

"உறுதியில்லாமல் எப்படி உன் நிலமாகும்?"

"அப்பிடி ஒன்று தேவையென்றால் எழுதிக் கொடுங்க. பிரச்சனை தீர்ந்துவிடும்."

"எழுதிக் கொடுப்பதாவது. நீ அந்த நிலத்திலையிருந்து எழும்பி விட வேணும்."

"அது எப்படி முடியுமுங்க. நான் அந்த நிலத்திலேயே வசிக்கிறேன். நாட்டிலை பஞ்சம். உணவுப்பொருட்கள் பயிரிட வேணுமென்று டி.ஆர்.ஓவே கூட்டம் நடத்தினார். நாங்க அதுக்காவவே உழைச்சம். இப்ப வேண்டாம், எழும்புங்க என்கிறார் இது பிழையாகத்தான் எனக்குத் தெரியுது"

"சட்டப்படி நீ செய்தது குற்றம். முடிக்குரிய காணியை நீயாகவே காடுவெட்டித் திருத்திக் குடியேறியது சட்டப்படி குற்றம்"

"சட்டத்தை திருத்திவிட முடியாதாங்க"

"உன் வசதிக்காகவா?"

"என்னைப்போல ரொம்பப்பேர் இருக்கிறாங்க"

"சரி, நீ இறங்கிப்போகலாம்"

முருகையா சாவதானமாக சாட்சிக் கூட்டிலிருந்து இறங்கி நடந்தான்.

“இவன் வெறும் அப்பாவியாக இருக்கிறான். அவன் சட்டத்தை மதிப்பவனாகவும் தெரியவில்லை”

விசாரணை நடத்திய புரொக்டர்கூறினார்.

“டி.ஆர்.ஓ. இந்த நிலத்தை பறித்து என்னசெய்வார்? வேறொருவருக்குக் கொடுப்பார். அப்படித்தானே?”

“யெஸ்”

“அப்படியானால் ஏன் இவனுக்கே கொடுத்துவிடப்படாது”

“இவன் இந்தநாட்டுப் பிரஜையல்ல”

அவனது பதில்களையும் தோற்றத்தையும் கொண்டு நீதிபதியால் அவனைக் கணிக்கமுடியவில்லை.

நீதிபதி தீர்ப்பை ஒத்திவைத்துவிட்டு அடுத்த வழக்கை எடுத்தார்.

நண்பகல் உணவிற்காக வீடு திரும்பும்போது அவர் வீட்டில் நாய் போல நன்றியோடு உழைக்கும் மாரப்பனின் நினைவு வந்தது. அவனது பிரஜா உரிமைபற்றி அவர் என்றும் விசாரித்த தில்லை. மனைவியாரின் ஆட்சியில் மாதம் 40 ரூபாவிற்காக அவன் மாடாக உழைக்கிறான். எல்லோர் வீடுகளிலும் அவன் போன்ற வேலைக் காரர் பரவிவருவதை அவர் அறியாம லில்லை. எல்லோரும் குற்றம் புரிகிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுப்பதே சட்டப்படி குற்றம். குறைந்த ஊதியம் கொடுப்பதும் சட்டப்படி குற்றம். ஆனாலும் வசதி கிட்டும் போதெல்லாம் தண்டிக்கப்படுபவர்கள் அவர்களே. அவர்கள் உழைக்கமட்டும் பிறந்தவர்கள். அதிகாரம் எங்கள் கையில் உள்ளது. பிரஜா உரிமைச்சட்டம் அவர்களையெல்லாம்

அடிமைகளாக்கிவிட்டது. அவர்களது உழைப்பை நாம் மலிவாக வாங்க முடிகிறது. சிந்தனை நீதியைத்தேடி அலைந்த போதும் முருகையாவின் தோற்றமும் பதில்களும் அவர் மனதை வட்டமிட்டன. வீட்டு வாசலில் காரை நிறுத்தியதும் மாரப்பன் ஓடிவந்து காரின் கதவைத் திறந்துவிட்டான். அவரது பைல் கட்டுகளை எடுத்துச்சென்றான்.

"இவனை இந்த வீட்டில் இனிமேல் வைத்திருக்க முடியாது"

வீட்டில் படியேறியதும் மனைவி அழாக்குறையாகச் சொன்னாள்.

"ஏன், என்ன நடந்தது?"

"அவன் என்னை எதிர்த்துப் பேசுகிறான்"

"அதுக்காகமட்டுமா?"

"அவன் கூடாத கூட்டம் கூடித்திரிகிறான்"

"அது என்ன கூட்டம்"

"ஏதோ புரட்சிக்கூட்டமாம். மாமனைப்பார்க்க சுண்டிக் குளம் போவதாகக் கூறிக்கொண்டு இரவெல்லாம் காட்டில் கூட்டத்திற்குப் போயிருக்கிறான். ஒருத்தரும் நிலத்தைவிட்டு எழும்புவதில்லை என்று தீர்மானம் எடுத்திருக்கிறாங்களாம். அதிகாரிகள் ஆதிக்கம் செலுத்தினால் கொலையும் செய்து விடுவாங்களாம். இவனை உடனே கலைத்துவிடப் போகிறேன்."

"உனக்கு இதெல்லாம் எப்படித் தெரிந்தது"

"இவன் மார்க்கெட்டுக்குப் போயிருக்கும்போது வேறொருவன் வந்து சொல்லிவிட்டுப்போனான்"

"மாரப்பா இங்கே வா. உன் மாமனைப்போய் அன்றைக்குப் பார்த்தியா"

நீதிபதி மாரப்பனை அழைத்துக் கேட்டார்.

"ஆமா"

"உன் மாமன் பெயரென்ன?"

"முருகையா".

*(யூலை.1974)*

# இரு முனைகள்

"மணியம் இந்தா எண்பது சதம். கார்ட்டை எடுத்துக் கொண்டு போய் பாணை வாங்கிவா"

"என்னால் முடியாதம்மா"

"ஓ நீயொரு பீ.ஏ.பட்டம் வைச்சிருக்கிறாய், பட்டினி யெண்டாலும் எப்பிடி பாண் வாங்கப்போவாய், மானம் போய்விடு மெல்லோ"

"அப்ப ஏன் என்னைப் படிப்பிச்சாய்?"

"உழைச்சுக் குடும்பத்தைக் காப்பாற்றுவாய் என்றுதான் உள்ளதையெல்லாம் வித்துச் சுட்டுப் படிப்பிச்சம். இப்ப உப்பிடி ஏன் படிப்பிச்சனி என்று கேட்கிறனீ ஏன் பெத்தனி என்றும் கேட்டுவிடலாமே".

செல்லம்மாவிற்கு துக்கத்தில் நெஞ்சேயடைத்துக்கொண் டது. நாள்தோறும் மூத்தவனோடு ஏதாவது வாக்குவாதம் நடந்து கொண்டேயிருக்கும். வீட்டில் வறுமையும் விரக்தியும் வளர வளர மோதல்களும் அதிகரித்துக்கொண்டேயிருந்தது.

"அப்பு செத்ததோடை உனக்கும் வரவர பைத்தியம் பிடிச்சுப் போட்டுது. எடுத்ததுக்கெல்லாம் என்மேலை பாஞ்சு கொண்டு தான் நிக்கிறாய்"

மணியம் குத்தலாய் கூறினான்.

"ஓமடா எனக்குப் பைத்தியந்தான் பிடிச்சுப்போட்டுது. நீயேன் பைத்தியக்காரியோடை வீணாய் பேசிக்கொண்டிருக் கிறாய். தெருச்சுத்தப்போவன்".

"நாங்க சும்மா தெருச்சுத்திறம் என்றுதான் நினைச்சுக் கொண்டிருக்கிறாய்".

"இல்லை. நீ கூடித்திரியிற கூட்டமெல்லாம் எனக்குத் தெரியாதெண்டா நினைக்கிறாய். உனக்கு என்ன நடக்கப் போகுதெண்டும் எனக்குத் தெரியும். என்ன நம்பிக்கையோடை ஒரு காலம்வாழ்ந்தான். இப்ப எல்லாம் அழிஞ்சுபோச்சு. இன்னும் என்னென்ன அழிவுதான் வரப்போகுதோ".

செல்லம்மா கவலை தாங்கமுடியாது கலங்கிய கண் களுடன் குசினிக்குந்தில் குந்தி, நாடியில் கையை ஊன்றி வைத்தபடி கூறினாள். அவ்வேளை தோய்ந்துவிட்டு தலையை உணர்த்தியபடி ஆனந்தன் வந்து கொண்டிருந்தான். கிணற்றடி யிலேயே அவர்களது வாக்குவாதம் அவனுக்குக் கேட்டுக் கொண்டிருந்தது.

"என்னம்மா விடிந்ததுமே உன் ஒப்பாரியை தொடங்கி விட்டாய். இனி ராத்திரிக்கு தூங்குமட்டும் இந்த ஒப்பாரிதான் இப்ப என்ன நடந்திட்டுது என்று தொடங்கிறாய்"

ஆனந்தன் தமையனைப் பொருட்படுத்தாது தாயின்முன் நின்று கொண்டே துவாய் தலைப்பை உருட்டி காதைக் குடைந்துகொண்டே கேட்டான்.

"என்னதான் நடக்கேல்லை. எல்லாமே நடந்து முடிஞ்சுது. உள்ள சொத்து எல்லாமே உங்க படிப்புக்காக அழிச்சுப் போட்டமே. இருந்த தாலிக்கொடி கூட அவற்றை செத்த வீடு, அந்திரட்டிச் செலவோடை போட்டுது. இனிமேல் தின்னுற துக்குத் தான் என்ன இருக்கு, அந்த மனுஷன் இருக்குமட்டும்

நிலத்தையாதல் கொத்திக்கொண்டிருந்து. உங்களுக்குப் பின்னாலை பி.ஏ. பட்டம் ஏறிவிட்டுது. இனி மண்வெட்டி யைத்தானும் தொட மாட்டியள், இப்பபாரன் பாண்வாங்கப் போகவே முடியா தொண்டு இவன் நிக்கிறான்".

"அதுதானம்மா நான் போய் வாங்கிவாறனே. நீதானே முந்தி அப்பாவையே பேசுவியே, நீ நிலம் கொத்தப் பிறந்தனிசரி, என்ரை பிள்ளைகளையும் நிலம் கிண்டவிடுவனென்று நினைச்சியா என்று. இப்ப மாத்திப்பேசிறாய்".

"நான் நினைச்சபடி நடந்துதா, சொத்து, சுகம் எல்லாம் அழிஞ்சு போச்சுதடா"

"அதுதான் நல்லதம்மா. இனிமே எமக்கு இழக்கிறதுக்கு எதுவுமில்லை. சரிதானேயம்மா".

"இவர் இப்ப பாட்டாளியாகிவிட்டாராம். புரட்சி நடத்தப் போகிறார்".

இருவர் பேச்சையும் பொறுமையோடு கேட்டுக் கொண்டி ருந்த மணியம், தாயைப் பார்த்தபடி தம்பியார் பற்றி நளின மாகக் கூறினான்.

"ஓம் புரட்சி நடத்தத்தான்போறம், அதைவிட்டு உன்னைப் போல இன விடுதலை பேசித்திரிவன் என்று நினைக்கிறியா?"

ஆனந்தன் கேட்டான்.

"நீதானே தமிழ் உணர்ச்சியே இல்லாத துரோகியாச்சே. சிங்களத்தை திணித்ததாலைதானே உனக்கும் எனக்கும்கூட வேலையில்லை. தெரு அளக்கிறம்"

"சிங்களவரில் மட்டுமே வேலை கிடைச்சிருக்கா. ஏழு, எட்டு, லட்சம் பேருக்கு வேலையில்லை. வருஷம்தோறும் மேலும் இரண்டுலட்சம்பேர் சேர்ந்துகொள்ளுகிறாங்கள். பாராளுமன்ற ஆட்சியால் எல்லாருக்கும் வேலைதர முடியும்

என்று நினைக் கிறியா? தமிழரசு வந்து விட்டால் தமிழர் எல்லாருக்கும் வேலை கிடைத்துவிடும். அப்படித்தானே"

கடைசி வார்த்தையை ஆனந்தன் நளினமாக அழுத்திக் கூறினான்.

"வெறும் வயித்தைப்பற்றித்தான் உங்களுக்குக் கவலை, மானம் என்று ஒன்றில்லையா?"

"வயித்துக்காகப் பிச்சையெடுப்பது மானக் கேடில்லையோ" என்று ஆனந்தன் கூறிவிட்டு தாயைப் பார்த்துச் சொன்னான்.

"காசைத் தா அம்மா பாண் வாங்கி வாறம். பாண் வாங்கப் போறதையே மானக்கேடு என்று நினைக்கிறவர் தான் மானத்தைப் பற்றி பேசவந்திருக்கிறார்".

"நான் குளிக்கப்போறன்........"

மணியம் இழுத்தான்.

"ஓமடா உன்ரை மழுப்பலை எனக்குத் தெரியாதா" என்று கூறிக்கொண்டே கையிலிருந்த 80 சதத்தையும் செல்லம்மா ஆனந்தனிடம் நீட்டினாள்.

"இன்னும் 20 சதம் தா அம்மா. பாண் விலை கூடினது உனக்குத் தெரியாதா?"

"கோதாரீலை போறவங்கள், பிறகும் விலையை ஏத்தி விட்டாங்களா?"

"அரிசி விலையிலை கொஞ்சம் குறைச்சிருக்கிறாங்களாம். இந்தத் தகிடுதித்தங்களை உன்ரை மகனிட்டைக் கேள்"

மணியன் பரிகசித்தான்.

"போன மாதந்தானே ஏத்தினாங்கள் அதையா குறைச் சிருக்கிறாங்கள்" என்று மனக்குழப்பத்தோடு கூறியபடி செல்லம்மா குசினிக்குள் சென்று மேலும் 20 சதத்தைக்

கொண்டுவந்து கொடுத்தாள். ஆனந்தன் சேர்ட்டை எடுத்துப் போட்டுக்கொண்டு சந்தியை நோக்கி நடந்தான்.

செல்லம்மா குசினிக்குள் சென்று புகைந்து கொண்டிருந்த அடுப்பை கிளறி வாயால் ஊதி மூட்டினாள். அவள் மனதும் புகைந்து புகைந்து பழைய வாழ்க்கையையும் தான் கட்டிய மனக்கோட்டைகளையும் நினைந்து எரிந்துகொண்டிருந்தது. தன் பிள்ளைகள் தன் புருஷனைப் போல நிலம் கிண்டிக் கஷ்டப் படப்படாது என்று அவள் கருதியது மட்டுமல்ல, புருஷனை என்றும் குறைவாகவே மதித்து வந்தாள். தன் சீதனச் சொத்து யாவையும் விற்றுப் படிப்பித்தாள். குத்தகை நிலத்தைக் கிண்டிக்கொண்டிருந்த புருஷனும் அவளைவிட்டுப் போய் விட்டார். இருவரும் தொழிலில்லை என்று தெரு அளந்தாலும் பரவாயில்லை, ஆபத்தான அரசியலிலை ஈடுபட்டிருப்பதே அவளுக்கு அதிக வருத்தமளித்தது.

ஆனந்தன் பாணை வாங்கிக் கொண்டு வந்தபோதும் வீட்டில் வாக்குவாதம் நடந்துகொண்டிருந்தது. செல்லம்மா சம்பலையும் சுடவைத்த பழங்கறியையும் வைத்தாள்.

“நீங்க சாப்பிடுங்கோ. எனக்குக் கொஞ்ச பழஞ்சோறிருக்கு”

“என்னம்மா. பிறகும் அண்ணனோடை சலசலப்பு”

ஆனந்தன் கூ.......... தாய்க்கு அளவுமீறி வீண் தொல்லை கொடுப்பதை அவன் விரும்புவதில்லை.

“அவன் அஞ்சு ரூபா காசு வேணுமாம். கடன் கேட்கக்கூட இனி ஆட்களில்லை. உங்களைப் படிப்பிக்கச் செலவழிச்ச காசை வட்டிக்குக் கொடுத்திருந்தாலும் நான் இன்றைக்குக் கஷ்ட மில்லாமல் செல்லப்பிள்ளையாய் இருந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பன். நீங்களும் ஏதேன் தோட்டந்துரவைப் பார்த்து மனுஷராய் பிழைத்துக் கொண்டிருப்பீர்கள்”.

செல்லம்மா அழாக்குறையாய் அளந்தாள்

“உன்னிலை பிழையில்லை அம்மா ஊரைப் பார்த்து நீ ஆத்தோடை போனாய். அவங்களும் கவைக்குதவாத கல்வியைக் கற்பிக்கிறாங்கள். இந்த வீட்டிலை மட்டும் இந்தப் பிரச்சினை இல்லையம்மா. நாடெல்லாம் இந்த நிலைதான். கொஞ்சக்காலம் பொறம்மா. இந்தச் சமூகத்தையே உடைத்தெறிந்து காட்டுறம்”

ஆனந்தன் பேச்சில் உணர்ச்சியும் உறுதியும் தொனித்தது. பாணைவெட்டி தமையனின் தட்டில் போட்டான்.

“இவர்தானம்மா புரட்சி நடத்தி உனக்குச் சோறு போடப் போறார். காத்துக் கொண்டிரம்மா”

மணியம் கேலியோடு கூறினான்.

“இவர் தமிழன், நாட்டுக்கு உயிர் கொடுப்பதாக வீம்பு பேசிறார். ஒருவேலை கிடைத்ததும் ஓடிப்போய் சிங்களம் படிப்பார்”

ஆனந்தம் அடித்துச் சொன்னான்.

“இவர் மட்டும் வேலைகிடைச்சால் போகமாட்டார்”

“உன்னைப்போல் குட்டிபூஷ்வா அல்ல நான்”

“இவர் வேறை குடும்பத்திலிருந்து வந்தவர். 71இல் நடந்ததைப் போலத்தான் இவற்றை புரட்சியும் இருக்கும்”

“உன்னைப் போன்றவங்களைச் சேர்த்தால் துவக்கைக் கண்டதும் மட்டுமல்ல, வேலையைக் கண்டதும்கூட ஓடி விடுவாங்கள். சோஷலிசம் பேசிற காலத்திலை இனத்துக்கு விடுதலைதேடப் போகிறார்”

ஆனந்தன் பழித்துக் கூறினான்.

“சுதந்திரம் கிடைத்தால் எங்கள் இனம், மொழிக்கு சமத்துவம் வேண்டாமோ? சிங்களவருக்குத்தான் எல்லா சுதந்திரமுமோ?”

“அரச மொழியாகி சிங்கள மக்கள் பிரச்சனையெல்லாம் தீர்ந்து விட்டுதா? எங்களிலும்பார்க்க மோசமானதாலைதான் 71 கிளர்ச்சி கூட நடந்தது. பாராளுமன்றத்தாலை அவங்க பிரச்சனையோ எங்க பிரச்சனையோ தீர்ந்துவிடப் போவதில்லை. இன்னும் மோசமாகிக் கொண்டேயிருக்கும். ஒரு புரட்சி நடந்து தான் இப்பிரச்சனையெல்லாந் தீரமுடியும்”

“புரட்சி நடந்தால் தமிழருக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வந்துவிடும்”

மணியம் நளின பாஷையில் கூறினான்.

“ஏன் வராது? எந்த மொழியாலை படித்தாலும் எல்லாருக்கும் வேலை கிடைக்கும். எல்லாரும் உற்பத்தியில் ஈடுபடுவோம். இப்ப நீ கூட சிங்களத்தாலை சிங்களவருக்கு வேலை கிடைக்குது, தமிழனுக்கு வேலையில்லை என்று தானே வகுப்புவாதம் பேசுகிறாய். எத்தனை தவறான கருத்து. படித்த சிங்கள மக்கள் நிலை எங்கள் நிலையிலும் மோசம்.”

“போதுமப்பா போதும், உங்க ரண்டு பேற்றை சண்டையும். இப்ப சாப்பிட்டு முடியுங்கோ. என்ரை கவலை உங்க ரண்டு பேருக்கும் சோறு போடுற கவலைதான். போற போக்கைப் பார்த்தா ரண்டு பேருக்கும் அரசாங்கமே சோறுபோடும் போலையிருக்கு”.

செல்லம்மா பொறுமையிழந்து கூறினாள்.

“இது எங்க வீட்டுப் பிரச்சனை மட்டுமில்லையம்மா. இது தான் இன்றைய நாட்டுப் பிரச்சனை. பாட்டாளி வர்க்கந்தான் பெருகி வருகுதே”

செல்லம்மா கேட்டாள்.

"நான் அரைப்பாட்டாளியம்மா. ஆனால் தொழிலாளி வர்க்கத்தின் சிந்தனையை கிரகித்துவிட்டேன். எங்காவது தொழிற்சாலையில் அல்லது தோட்டத்தில் கூலிவேலை செய்யத் தொடங்கினால் நான் முழுப்பாட்டாளியாகிவிடுவேன்".

தாயாருக்காகவல்ல, மறைமுகமாக தமையனுக்காக விளக்கிக்கூற முயன்றான்.

"எனக்கு உந்தப் பெயரே பிடிக்கேல்லையம்மா"

மணியம் கூறினான்.

"குட்டிப் பூஷ்வாவிற்கு எப்பிடிப் பிடிக்கும். பல்கலைக் கழகத்தில் படித்ததெல்லாம், பழகினதெல்லாம் உன் மூளையில் அப்படியே இருக்கே"

"அப்ப என்னை உங்க புரட்சியிலை சேர்க்க மாட்டீங்க."

"ஒருபோதும் சேர்க்கமாட்டம்"

"ஏன்?"

"அதுதானே முந்தியே சொன்னனே. துவக்கைக் கண்டதும் மட்டுமல்ல, வேலையைக் கண்டதும்கூட புரட்சியைவிட்டு ஓடிவிடுவாய்"

"போதுமடா போதும். போய் கையைக் கழுவிவிட்டு தெருச் சுத்தப் போங்கோ. நான் இருக்கிறேனே சோறுபோட. வீட்டிலை அரிசி கூட இல்லை"

செல்லம்மா செம்பில் தண்ணீரைக்கொடுத்து எழுப்பி விட்டாள்.

"ஒடியல் புட்டு அவியம்மா. சாப்பிட ஆசையாயிருக்கு, நான் ராத்திரிக்கு வெளியூர் போகிறேன்....."

தாயைப் பிரிந்து நீண்டபயணம் புறப்படுவதுபோல ஆனந்தன் குரல் ஒலித்தது.

(ஆக.1974)

# வெற்றிபெற முடியாது

"வாங்க வணக்கமுங்க"

பியதாசா கொழும்பிலிருந்து அன்றுதான் முதன்முதலாக பலாங்கொடையிலுள்ள அந்தத் தோட்டத்திற்கு வந்திருந்தான். மூன்று மைல் தூரம் மலை ஏறி அவன் களைத்துப் போயிருந் தான். பேச முடியாது மூச்சு இழுத்தது. மாரப்பன் லயத்து வாசலில் நின்று கை கூப்பி வரவேற்றான். அதன் முன்னே நான்கு தடி நட்டு படங்குச்சாக்கு போடப்பட்டிருந்தது. கொழும்பு பஸ்ஸிலிருந்து பியதாசாவை மாரப்பனின் மூத்த வன் ஆறு முகம் அழைத்து வந்திருந்தான்.

"பிரயாணமெல்லா மெப்பிடி இருந்துதுங்க"

"மலை ஏற ரொம்ப கஷ்டப்பட்டார்"

ஆறுமுகம் சிரித்தபடியே பதில் கூறினான்.

மாரப்பன் கொழும்புக்கு மேதினத்திற்குச் சென்றபோது பிய தாசாவைக் கண்டு பேசினான். பியதாசாவுக்கு ஓரளவு தமிழும் தெரிந்திருந்தது. அவன் இரத்மலானையில் காலணிகள் தயாரிக் கும் ஒரு கம்பனியில் வேலைபார்த்தான். அங்குள்ள தொழிற் சங்கத்திற்குச் செயலாளராகவும் இருந்தான். தேயிலைத் தோட் டம் பார்க்க ஆவலாயிருப்பதைத் தெரிவித்தான். மாரப் பன் தன் மகள் கலியாணத்திற்கு அழைத்திருந்தான். அவன் சிறிதும் எதிர்பாராதவிதமாக பியதாசா கலியாணத்திற்கு வருவதாக எழுதியிருந்தான்.

மாரப்பன் உள்ளே அழைத்துச்சென்று தங்கள் லயத்தைக் காட்டினான். உள்ளே பெண்களும் சிறுவர் சிறுமியினரும் நிறைந்திருந்தனர். தன் மனைவி, பிள்ளைகளை அறிமுகம் செய்தான். நேரு, காந்தி, இந்திரா, கலண்டர் படங்கள் சுவரில் தொங்குவதையும் கவனித்தான். பின்னர் வெளியே அழைத்து வந்து முன்புறத்தில் போடப்பட்டிருந்த ஒரு நாற்காலியில் உட்காரச் செய்தான். சோடா புட்டி ஒன்று உடைத்து வழங்கப் பட்டது.

தனக்குக் காட்டும் அதீத மரியாதையை மறுக்கவும் முடியாது பியதாசா சிரமப்பட்டான்.

“கலியாணமென்றால் நாங்க துரையிட்டைக்கூட அனுமதி பெற வேணும். மற்றத் தோட்டத்திலிருந்து கார் வருவதா னாலும் நாங்க அனுமதி பெற்றேயாகவேணும்”

“அப்பிடித்தான் அறிந்திருந்தேன். உங்க புதுமாப்பிளை இங்கேயா வேறு தோட்டமா?”

“அடுத்த டிவிஷன் தோட்டத்திலை. நாங்க கொங்கு வேளாள சாதியைச் சேர்ந்தவங்க. அதே சாதியிலைதான் பெண் கொடுப்போம்”.

தோட்டங்களில் சாதிமுறைகள் ஒழியாத காரணங்கள் பற்றி பியதாசா முன்பே அறிந்திருந்தான். நகரத்துப் பாட்டாளிகளுக் கும் பெருந்தோட்டப் பாட்டாளிகளுக்குமிடையே உள்ள பல வேறு பாடுகளையும் முரண்பாடுகளையும் பற்றி முன்னர் பலருடன் கலந்துபேசி விவாதித்திருந்தான்.

“தொழிற்சங்க அரசியல் வளர்ச்சியில் நாங்க நகரத்தைப் போலை இன்னும் முன்னேற முடியேல்லை. என்ன காரண மென்று நினைக்கிறீங்க”

“உங்க உற்பத்திப் பண்ட உறவுக்கும் எங்க உற்பத்திப் பண்ட உறவுக்கும் அதிக வேறுபாடு இருப்பதுதான்”

பியதாசா மாரப்பனுக்குப் பதில் கூறி மேலும் விளக்கினான்:

“நீங்க ஏகாதிபத்திய ஆதிக்கத்திலுள்ள மார்க்கெட்டுக்காக விவசாயப் பண்டங்களையே உற்பத்தி செய்யிறீங்க, யந்திரத் தொழிற்சாலை வேலையே மிகக் குறைவு. நாங்க பெரும் பாலும் உள்நாட்டுத் தேவைக்காகவே பூரணத்துவமான கைத் தொழிற் பண்டங்களை உற்பத்திசெய்கிறோம். உங்கவேலை நேரம், சம்பளம்மெல்லாம் எப்படி?”

“காலையிலை ஆறேமுக்காலுக்கு சங்கு ஊதுறாங்க. மத்தி யானம் 12 தொடக்கம் 2 மணிவரை சாப்பாட்டு நேரம், எல்லா நாளும் வேலை கிடைப்பதில்லை. மாதச் சம்பளத்திலை கூப்பன் சாமானுக்கெல்லாம் பணம் பிடிச்சிட்டு பத்து பதி னைஞ்சு ரூபாத்தான் கையிலை வருமுங்க”

“நகரத்துக்கும் உங்களுக்கும் இதிலையே எத்தனை வித்தி யாசம் பாருங்க. சாப்பாட்டை வேலைத்தலத்திலேயே சாப் பிட்டுக் கூடிப்பேச எங்களுக்கு ஒரு மணி நேரமிருக்கு, மாதச் சம்பளத்தை முழுக்கத் தந்திடுறாங்க, வேலையில்லை என்று சொல்ல முடியாது”

பியதாசா கூறினான்.

“நீங்க முதலாளிக்கே பயமில்லை. இங்கே துரை சொன்ன தெல்லாம் சட்டமுங்க”

“இது ஒரு வகைப் பண்ணையடிமை மட்டுமல்ல, உங்களுக் காக மட்டும் கொண்டு வந்த குடியுரிமைச் சட்டம் உங்களை நவீன அடிமையாகவே ஆக்கி விட்டது”

“இது உண்மைதானுங்க, தோட்டத்தை விட்டு டவுணுக்கோ வெளியூருக்கோ போற தெண்டால் பயத்தோடைதான் நம்ம

ஆட்கள் போறாங்க. கிராமச்சங்கத்திற்குக்கூட வோட்டுரிமை கிடையாது. ஒரு நிலம் வாங்க முடியாது. எங்க பிள்ளையள் படிக்கிற பள்ளியைக் கூட நீங்க ஒருக்கா பார்க்கணும்"

"இதெல்லாம் பார்க்க எண்டுதானே வந்தன். கலியாண வீடு ராத்திரிக் கெண்டா இப்பவே பார்த்திடுவமே. பட்டினி நிலையைப் பற்றிக் கூட நான் பார்க்கவேணும்"

மாரப்பன், ஆறுமுகத்தோடு வேறும் தொழிற்சங்க ஆர்வமுள்ள அடுத்த லயத்து தொழிலாளர் சேர்ந்து கொண்டனர். லயத்து வாயில்களில் ஒட்டிய உடலோடு சோர்ந்திருக்கும் கிழங்களை காட்டினர். குன்றின் உச்சியிலிருந்த துரைபங்களா, உத்தியோகத்தர் பங்களாக்கள், தொழிற்சாலை, பிள்ளைமடுவம், கோவில் யாவையும் சுட்டிக்காட்டிய படி பாடசாலையை நோக்கி நடந்தனர்.

"நகரத் தொழிலாளர்களிடமிருந்து எங்களுக்கு ஆதரவே குறைவு"

மாரப்பன் கூறினான்.

"உங்களை அத்துமீறிச் சுரண்டுவதில் ஒரு பங்கை அரசு நகரத்தொழிலாளர்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறது. அதனால் தான் அவர்களும் உங்களை ஒதுக்கிச்சுரண்ட ஒப்புக்கொள்வது போல பேசாதிருக்கிறார்கள்".

மாரப்பன் இத்தகைய யதார்த்தப் பதில்களை முன் என்றும் கேட்டதில்லை.

மேதினத்தின்போது பியதாசாவின் பேச்சிலிருந்த துணிச்சலையும் உண்மையையும் கண்டே சில மணி நேரத்திலேயே மாரப்பன் நண்பனாகி விட்டான்.

"எங்க விடிவுதான் எல்லாத்திலையும் கஷ்டமாயிருக்கே"

"அதுக்கு மற்றொரு காரணம் உங்க உற்பத்தி உறவு ஏகாதி பத்தியத்துடன் நேரடியாகப் பின்னப்பட்டிருப்பதுதான்"

"50,100 வருஷம் தொடர்ந்து வாழ்ந்தும் குடியுரிமைக்கு அவங்க கேட்கும் அத்தாட்சி காட்ட முடியாமலிருக்கு. அத னாலே தான் இந்த நாட்டை தங்க நாடு என்றே உரிமையோடு சொல்ல தயங்கிறாங்க"

"வர்க்க அரசு நிலைக்கும் வரை அடிமையாக வைத்துச் சுரண்ட எல்லாம் செய்வாங்க. தொழிலாளி என்ற ஒரு தகுதியே இந்த நாட்டுப் பிரசை என்பதற்குப் போதுமானது என்பதே எங்க கருத்து"

பியதாசாவின் ஒவ்வொரு வார்த்தையுமே மாரப்பனுக்கு உணர்ச்சியும் வியப்பும் ஊட்டியது.

"உங்களைப்போல எல்லா சிங்களத் தொழிலாளர்களும் கூறினால் எங்க ஆட்களெல்லாம் விழுந்தெழுந்து உயிரைக் கொடுத்தே புரட்சிக்காகப் போராடுவாங்க"

"புரட்சிகர அரசியலில் ஈடுபட்ட கட்சிகளெல்லாம் கிராமப் புறப் பாட்டாளிகளிடம் போகமுன் உங்களிடைதான் வந்து வேலை செய்யவேண்டும்"

மாரப்பனுக்கு இவ்வார்த்தைகள் மேலும் ஆச்சரியத்தையே அளித்தன. குடியுரிமையற்ற நவீன அடிமை நிலையில் தோட்டத் தொழிலாளரை வைத்துப்பார்த்தால் கிராமப்புறப் பாட்டாளியின் நிலையில்கூட நாம் வளர்ந்துவிடவில்லை. அதனால்தான் பிற்போக்கான தொழிற் சங்கங்களை கட்டி அழுகிறோம் என்று கணித்திருக்கிறாரோ என்று மாரப்பனால் பிரித்தறிய முடியவில்லை.

'ஏன் அப்படிக் கூறுறீங்க?' மாரப்பன் கேட்டான்.

பியதாசா அழுத்தமாகப் பதிலளித்தான்:

"இந்த நாட்டில் அரைப்பட்டினி நிலையில்வைத்து அத்து மீறிச் சுரண்டப்படும் முழுப்பாட்டாளிவர்க்கம் நீங்கதான். உங்க துணையின்றி எந்தப் புரட்சிகர அரசியல் கட்சியாலும் புரட்சியை நடாத்தி வெற்றிபெற முடியாது".

(ஆக.1974)

# பட்டினி கிடந்து சாகமாட்டோம்

கதிரன் மண்வெட்டியைத் தோளில் போட்டபடி செம்பாட்டுப் புறத்திலுள்ள தன் குடிசையை நோக்கி நடந்தான். காக்கைகளும் 'கா கா' என்று கத்தியபடி ஒதுக்கிடம் தேடிப் பறந்து கொண்டிருந்தன. வயிற்றை நிரப்பும் வேலை முடிந்த ஆரவாரம் காக்கைகளின் குரலில் ஒலித்துக்கொண்டிருந்தன.

கதிரன் தோளிலிருந்த செம்பாட்டு மண்ணும் வியர்வை நாற்றமும் படிந்த துண்டை எடுத்து முகத்திலும் நாடிப் பாகத்தில் ஊசி போல் வளர்ந்திருந்த மயிரிடையும் தேங்கியிருந்த வியர்வையை துடைத்தபடி நடந்துகொண்டிருந்தான். மேலெல்லாம் வியர்வையோடு ஊறிய செம்பாட்டு மண் பிசுபிசுத்துக் கொண்டிருந்தது. அன்று அதிகாலையிலிருந்து மாலைவரை கூலிக்கு நிலத்தைக் கொத்திய சோர்வு, தோள் மூட்டிடையே நோவுகூட கண்டிருந்தது. வயிற்றிலே பசி கண்டுவிட்டது.

சின்னத்துரை பெண்சாதி சாதுரியக்காரி. காலையில் சீனியை உள்ளங்கையில் போட்டு, நக்கி வெறும் தேநீரைக் குடிக்கக் கொடுத்தாள். காலைச் சாப்பாடு கேட்டதற்கு பாண்வாங்க முடியவில்லை. வேளைக்குச் சோறு தாறன் என்று கடத்தி பன்னிரண்டு மணிக்கே மரவள்ளிக்கிழங்குக் கறிக்குள் சோற்றைப் போட்டுப் பிரட்டிக் கொடுத்தாள். உழைக்கும் வயிற்றிற்கு அது எத்தனை நேரம் போதும், மாலையிலும்

வெறும் தேத்தண்ணி, வயிறு தீயாக எரிந்தது. அன்றைய கூலியாக ஏழுரூபா கொடுத்தான்.

"அரிசி விக்கிற விலையிலை இது என்ன கூலி?"

கதிரன் சின்னத்துரையாரைக் கேட்டான்.

"மிளகாய் கன்று நட கொத்திச்சாறிய கூலி உது"

சின்னத்துரை பெண்சாதி பதில் கூறினாள்.

"மிளகாய்தானே இப்ப அரிசியிலும் பார்க்க விலை ஏறியிருக்கு"

"நாங்களும் மிளகாயை வித்துத்தான் அரிசி வாங்க வேணும்"

சின்னத்துரை பெண்சாதியின் குரலின் ஒலியில் அழுத்தம் தொனித்தது. சின்னத்துரையாரிடம் மேலும் ஒரு ரூபாவாவது அதிகம் பெற இவள் விடமாட்டாள் என்பது கதிரனுக்கு நன்கு தெரிந்தது.

"அப்ப மிளகாய் நடுற நேரம் சாமி, குரக்கன் செய்வது தானே? மிளகாயைத் திண்டு சீவிக்க முடியுமா?"

கதிரன் எழுப்பிய கேள்விக்கு எவரும் விடை கூறவில்லை. ஆனால் பதில் மூவருக்கும் தெரியும்.

மிளகாயில் கிடைக்கக்கூடிய லாபம் குரக்கனில் கிடைக்க மாட்டாது. அதனால்தான் நாங்கள் பட்டினி கிடக்கும்போதும் மிளகாய்க் கன்றையே நடுகிறார்கள் என்று கதிரன் எண்ணிக் கொண்டான்.

பணம், லாபம் சேர்ப்பதுதான் அவர்களுக்கு முக்கியமா? அவர்கள் என்ன விலைக்கும் அரிசி வாங்கிக்கொள்வார்கள். இது உண்மை.

என்னிடம் மட்டும் நிலமிருந்தால் நான் சாமி, குரக்கன்தான் நடுவேன். ஏன் எனக்கு மட்டும் நிலம் கிடையாது? எனக்கென்ன, எங்களுடைய சுடலையில் வாழ்பவர்கள் எவருக்குமே கிடையாதே. செம்பாட்டு நிலமெல்லாம் தரிசாகிக் கிடக்கிறது. அதில் பயிர் செய்தால் இவர்களுக்கு என்ன நட்டம் ஏற்பட்டுவிடும்? விதானையையும் பொலிசாரையும் கொண்டு வந்து விடுவர். நிலங்களின் காவல்நாய்கள். அவர்களுக்குப் பின்னே சட்டம், கோடு, சிறை, துவக்கு எல்லாம் இருக்கிறது.

தெளிவில்லாத சிந்தனையுடன் பசி கிண்ட சோர்வோடு குடிசையின் முன்வந்து மண்வெட்டியைக் கீழே வைத்தான். பிள்ளைகள் ஓடி வந்தனர். முகங்களிலே அவர்களது வயிற்று நிலை தெரிந்தது.

தெய்வானை குறுக்குக்கட்டோடு குனிந்து வெளியே வந்தாள்.

"நான் இப்பதான் வந்தன். அந்தக் கமக்காறிச்சி நாள் முழுதும் முதுகு முறிய வெங்காயத்துக்குப் புல்லுப் பிடுங்கின கூலி இல்லை என்று போட்டாள். நாளைக்கு வரட்டாம். நீங்க என்ன கொண்டாறியள்? எடுங்கோ. வீட்டிலை ஒண்டுமே யில்லை".

கதிரன் மடியை அவிட்டு ஏழு ரூபாவையும் எடுத்துக் கொடுத்தான்.

"இதென்ன ஒரு கொத்து அரிசி வாங்கவும் போதாது"

கதிரன் எதிர்பார்த்த வார்த்தைகளே.

"எனக்குத் தெரியாது. நீ என்னவும் செய்"

பதில் எதிர்பாராது முற்றத்தில் மூடிக்கிடந்த தண்ணீரைச் சட்டியில் ஊற்றி முகத்தையும் முதுகையும் நீரால் நனைத்து துணியால் துடைத்தான்.

“என்னை எங்காவது களவெடுத்துக் கொண்டுவரச் சொல்லுறீங்களோ?”

“முடிந்தால் செய்யன், உழைச்சு ஒன்றையும் காணேல்லை”

“பரமன் உங்களைத் தேடி வந்துபோனான்”

“அவன் என்னவாம்?”

“அவன் பறிச்செடுக்க வேண்டும் என்று எல்லாருக்கும் சொல்லித் திரிகிறான். பிள்ளைகளுக்குக்கூட பாடம் சொல்லிக் கொடுக்கிறான்”

கதிரன் சிறிதுநேரம் எதுவும் பேசவில்லை. அவன் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான்.

“இப்ப போய் கிடைக்கிற அரிசியை வாங்கி வா. பசி காதை அடைக்குது”

“உங்களுக்கு மட்டுமா? இதுக்கு என்னத்தை இப்ப வாங்கலாம்? முந்தி மூண்டு கொத்து வாங்கின காசுக்கு இப்ப முக்காக் கொத்துத் தான் வாங்க முடியும், ஏன் இப்பிடி வந்தது? ஆரோ எங்களை ஏமாத்தினம்”

தெய்வானை சொல்லியபடியே ஓலைப்பெட்டிகளை எடுத்தாள்.

“கமக்காரன் முதல் கடைக்காரன் வரை எல்லாரும் எங்களை ஏமாத்திறாங்கள், உண்மையாய் பார்த்தால் நாங்கதான் உழைச்சுப் போட்டு பட்டினி கிடக்கிறம். இப்ப போய் கிடைக்கிற அரிசியை வாங்கி வா. கஞ்சியாதல் காய்ச்சிக் குடிப்பம்.”

“இப்பிடி ஒரு காலமும் கஷ்டம் வந்ததில்லை. ஒவ்வொரு நாளும் அரைப்பட்டினிதானே போற போக்கிலை நாங்களும் பிள்ளைகளும் பட்டினிகிடந்து சாகத்தான் வேண்டிவரும் போலை கிடக்கு”.

"பொறுக்குமட்டும் பொறுப்பம். ஆனா ஒன்று மட்டும் உண்மை. பொறுமையாய் பட்டினிகிடந்து செத்துவிட மாட்டம். பறிக்க வேண்டிய காலம் வந்தால் நேரடியாகப் பறிச்சுத்தான் சாப்பிடுவம்."

"பரமனின் ஞானம் இப்பதான் வந்ததோ?"

"அவன் சும்மா சொல்லவில்லை. நியாயத்தோடைதான் சொல்லுறான்"

*(ஆக.1974)*

Jaffna Central College Library

# கடமையும் சேவையும்

குமாரசாமி ஆசுபத்திரி வாட்டிற்கு வந்தபோது சுந்தரம் கட்டிலில் அனுங்கியபடி கிடந்தான். காலிலும் கையிலும் கட்டுகள் போடப்பட்டிருந்தன. அவற்றை அசைக்கவே முடி யாதபடி வலி. முகத்தில் களைஇல்லை. மூன்று நாட்களாக சவரம் செய்யாத முகம். குமாரசாமியைக் கண்டதும் அனுங் கலை நிறுத்தி, புன்னகையை வரவழைத்து, வரவேற்க முயன் றான். உடலின் வேதனையை வலிந்த சிரிப்பால் மறைத்துவிட முடியவில்லை.

"சுகம் எப்படி சுந்தரம்?"

குமாரசாமி கூறியபடியே நெற்றியில் புறவிரல்களை வைத் துப் பார்த்தான். காய்ச்சல் நெருப்பாக காய்ந்து கொண்டிருந்தது. கண்களே இடுங்கியிருந்தன. கழுத்தடியிலும் மார்புப் புறமாக வும் விரல்களை மடித்து வைத்துவிட்டு எடுத்துக் கொண்டான். குமாரசாமியின் முகத்திலும் கவலை குடி கொண்டது.

"கவனமாகப் பார்க்கிறார்களா?"

"தர்மாஸ்பத்திரி என்று காட்டிக்கொள்கிறார்கள்"

சுந்தரம் மெல்லிய குரலில் பதில் கூறினான்.

"ஏனப்படிச் சொல்கிறாய் இது அரசாங்க ஆஸ்பத்திரி. நாட்டுக்குச் சொந்தமானது. நல்ல வைத்தியம் பெற பணக்காரர் கூட இங்கேதான் வரவேண்டும்."

“இது வர்க்க சமுதாயம் என்பதை மறந்து பேசுகிறாய். வெளியேயுள்ள நேஸிங்ஹோமுக்குப் போகாவிட்டாலும் இங்கே பணம், தகுதி கொண்டே வைத்தியம், கவனிப்பு நடக்கிறது.”

வேதனையின்போதுகூட தவறான கருத்தைக்கேட்டதும் சுந்தரத்தால் தாங்கமுடியவில்லை. சிறிது நிமிர்ந்து உட்கார்ந்த படி அழுத்தமாக பதில் கூறினான்.

“நாங்கள் அதற்காக ஊமைகளாக இருக்கமுடியாது. எதிர்த் துப் போராட வேண்டும்”

“இந்த நிலையில் கிடந்து நான் என்ன செய்ய முடியும். இங்கே தகுதியைப்பார்த்தே கட்டில் கூட கிடைக்கும். என் நிலை மோசமான படியால் சில நாட்களுக்கு கட்டில் கிடைக் கலாம். இங்கேயுள்ள கக்கூஸ் பற்றி மற்றவர்கள் சொல்வதைக் கேட்டால் எங்க தோட்டத்துக் கக்கூஸ் பரவாயில்லைப்போல் தெரிகிறது. என்னால்தானே இன்னும் கீழே இறங்கவே முடிய வில்லை. பல தடவை குரல்கொடுத்த பிறகுதான் பரோபகாரம் செய்வதுபோல பெட்பானை கொண்டுவந்து வைப்பார்கள். எடுப்பதற்கும் பலதடவை குரல் கொடுக்க வேண்டும்.”

“தொழிலாளர்களே இப்படிச் செய்கிறார்களா?”

“அவர்களிடம் வர்க்க உணர்வு இன்னும் நன்கு வளர வில்லை. கூலிக்கு மாரடிப்பவர்களே. இவர்களை ஆயிரத் திற்கு மேல் சம்பளம் பெறும் டொக்டர்மாரோடு ஒப்பிட்டால் இவர்கள் பரவாயில்லை என்றே சொல்லவேண்டும். காலை யிலே ஒரு றவுண்ட். மாலையிலை ஒரு றவுண்ட். போய்விடு வார்கள். அவசரமென்றால் நேர்ஸ் தேடிப்பிடித்தால்தான்”

“இன்னுமிந்த நிலை நீடிக்கவிடப்படாது”

குமாரசாமி சீரியஸாகச் சொன்னான்.

"உன்னால் என்ன செய்யமுடியும்?"

"உவங்களை உதைக்கவேணும்"

"அவர்களைப் பாதுகாக்கும் பொலிசாரிடம் பிறகு நீ உதைவாங்கி விட்டு இங்கேதான் வரவேண்டும்"

ஆசுபத்திரிக்கே உரிய நெடி மூக்கைத் துளைத்துக் கொண்டிருந்தது. சாப்பாடு வழங்கும் ரெயிலர் ஓசை அவர்கள் பேச்சைத் தடைசெய்தது.

"சாப்பாடெல்லாம் எப்படி?"

"இங்கேயுள்ளதைச் சாப்பிட்டு ஏழைகள்தான் உயிர் வாழ்கிறார்கள். மற்றவர் யாவருக்கும் வெளியேயிருந்து சாப்பாடு வருகிறது".

சுந்தரம் குருசன் அன் சன்ஸ் இஞ்சினியரிங் தொழிற்சாலையில் வேலை செய்பவன். தொழிற்சாலையில் விபத்து ஏற்பட்டு கையிலும் காலிலும் பலத்த காயம். தொழிற்சங்கத்தைச் சார்ந்த குமாரசாமி பார்க்க வந்திருந்தான். சுந்தரத்தின் நிலைமையைப் பார்த்து கவலையும் ஆத்திரமுமடைந்தான். டாக்டர், மேற்றன், நேர்ஸ், அட்டென்டன் ஆகிய வர்க்கப் பிரிவுகளிடை உள்ள முரண்பாடுகளை சுந்தரம் வாயிலாக அறிந்துகொண்டான். 'மக்களுக்குச் சேவை செய் என்பது கூலிக்கு வேலை செய்' என்று வர்க்க சமுதாயத்தில் மாறியும் சிறிதும் பயன்படாது போவதை எண்ணிப் பார்த்தான்.

"டொக்டர் இனி எத்தினை மணிக்கு வருவான்"

குமாரசாமி கேட்டான்.

"அதோ நிற்கிறானே அவன்தான். ஏதோ அவசரமென்று நேர்ஸ் அழைத்திருப்பாள். அதுதான் இந்தநேரம் வந்திருக்கிறான். கறுவாக் காட்டில் வீடு இருக்காம். ஆறு சிறீ கார் இருக்கு. அவங்களுக்கு இந்தத்தொழில் ஒரு அந்தஸ்தே...."

சுந்தரம் சொல்லி முடிக்குமுன் குமாரசாமி டாக்டரை நோக்கி நடந்தான்.

"டொக்டர், அச்சிடன்பட்டு அங்கே படுத்திருக்கிறானே சுந்தரம். அவனை ஒரு தடவை பார்த்து நிலைமையைச் சொல்லுகிறீர்களா"

நேர்சோடு சிரித்துப் பேசிக்கொண்டிருந்த டாக்டர் மகேச நாதன் ஒரு விசித்திரமான மனிதனைப் பார்ப்பது போல குமார சாமியை ஏற இறங்கப் பார்த்தான்.

"நீ யார்?"

"சுந்தரம், எங்களோடு வேலை செய்கிறான்"

"அதற்காக...."

"நாங்கள் ஒரே யூனியனிலை செக்கிறிட்டரி"

"அதற்காக"

"நான் தான் யூனியன் செக்கிறிட்டரி"

"அதற்காக நான் பயந்து வந்து பார்க்கவேண்டுமா"

நளினமாக டாக்டர் மகேசன் கேட்டார்.

"நீ பொதுமக்கள் சேவகனில்லையா? நாங்கள் உழைக்கும் சுரண்டல் பணத்தில் தானே உனக்கு அளவுக்கு மீறிய சம்பளம் தரப்படுகிறது"

மகேசன் இப்படியான பதிலை எதிர்பார்க்கவில்லை. தன் கௌரவத்தை அவன் பேச்சு தாக்குவதாக உணர்ந்து ஆத்திர மடைந்தார்.

"நான் சும்மா சம்பளம் வாங்கவில்லை. என் தகுதிக்கேற்ற சம்பளமே இங்கே கிடையாது".

"நீ எத்தனை மணித்தியாலம் வேலைசெய்கிறாய் மூன்று நாலு மணிநேரம் வேலைசெய்துவிட்டு எட்டுமணி நேரத்திற்கு

மேலாக உழைக்கும் எங்களிலும்பார்க்க எட்டுப்பத்து மடங்காக சம்பளம் பெறுகிறாய். அது போதாது, அதற்கு மேலாக இப்போது வர்க்க அதிகாரம் காட்டுகிறாய்''.

"என் தகுதிக்காக நான் ஐந்து ஆறு ஆண்டுகள் இரவு பகலாகப் படித்திருக்கிறேன்."

"நான் பன்னிரண்டு ஆண்டுகள் வியர்வை சிந்தி உழைத்திருக்கிறேன். என் அனுபவத்திற்காக ஒரு மடங்கு தானும் கூலி உயரவில்லை"

"உடலுழைப்பையும் மூளை உழைப்பையும் நீ சமன் படுத்து கிறாய் அப்படித்தானே".

"சமன்படுத்துவதென்ன, உடலுழைப்பையே உயர்வாகக் கருதுகிறேன். உடலுழைப்புக்குத்தான் அதிக ஊதியம் வழங்கப்பட வேண்டும்"

"நல்ல வேடிக்கைதான், அப்ப அரசாங்கம் தவறு செய்கிறது என்று சொல்லுகிறாய் அப்படித்தானே"

"ஏன் அப்படிச் சொல்லப்படாது? எங்க சுரண்டல் பணத்தில் தான் உனக்குக் கல்வி அளிக்கப்பட்டது. இன்று நீ ஆளப் பார்க்கிறாய்"

மகேசன் என்றுமே இப்படியான கருத்துக்களைக் கேட்டதில்லை, தனது வாட்டில் வந்து ஒரு சாதாரண தொழிலாளி வாய் காட்டுவதைத் தடுப்பதற்கு பல வழிகள் இருந்தபோதும் வாதத்தில் வென்று விடுவதையும் அவன் விரும்பவில்லை. கல்லூரியிலேயே விவாதத்தில் தான் பெற்ற மதிப்பு பற்றியும் நினைவு வந்தது. வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டே பதில் கூறினார்.

"அரசியலிலே நான் ஈடுபட்டதில்லையே. நான் எங்கே ஆளுகிறேன்?"

“ஏன் மறைக்கப் பார்க்கிறாய். நீ இந்த நாட்டு ஆளும் வர்க்கத்தைச் சார்ந்தவன். உழைக்கும் மக்களது சுரண்டலில் ஆடம்பரமாக வாழ்கிறாய்”.

“வெளிநாட்டுக்குச் சென்றால் இதனிலும் பார்க்க அதிக ஊதியம்பெற முடியும். அரசாங்கம் தான் தடுக்கிறதே”

“உங்க வர்க்க அரசுதானே, அதனால்தான் ஏதோ வழிகள் தேடி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். எமது சுரண்டலில் படித்து விட்டு பிற நாட்டவர்களுக்கு சேவைசெய்ய ஓடுகிறார்கள்”.

“நான் அப்படி ஓடவில்லை”

“சந்தர்ப்பம் கிடைத்தால் ஓடிவிடுவாய் என்பது உன் பேச்சிலேயே தெரிகிறதே. ஒருவேளை இங்கே வேலை செய்யாமலே சம்பளமும் சமுதாய அந்தஸ்தும் கிடைக்கிறது என்று நிற்கிறாயாக்கும்”

“ஏன் நான் என் கடமையைச் சரியாகச் செய்கிறேன்”

“மக்களுக்குச் சேவைசெய்யவேண்டிய நீ நோயாளரை மதிக்கிறாயா? நீ வெறும் சம்பளத்திற்காகவும் சமுதாய அந்தஸ்திற்காகவும் இப்பதவியில் இருக்கிறாய். சேவை செய்ய வேண்டிய நீ கடமை செய்கிறாய் என்பதைக்கூட எவரால் ஏற்கமுடியும்?”

“நீ ஏற்கவேண்டாம். என் வேலையைக் கவனிக்க வேறு அதிகாரிகள் இருக்கிறார்கள்”.

“உன் வர்க்கத்தவர் இருக்கிறார்கள் என்று சொல்லு”

அளவுமீறி அவமானப்படுவதாக டாக்டர் உணர்ந்தார். நடைபெறும் பேச்சுவார்த்தையை தூரநின்று பலரும் கேட்பதும் அவர் தன்மானத்தைச் சுட்டது.

“இப்போது உனக்கு என்னவேண்டும்? உன் தோழன்பற்றி அறிய வேண்டும். அவ்வளவு தானே”

டாக்டர் அவனை அடக்க வழிதேடும்போது மணி அடித்தது வாய்ப்பாகிவிட்டது.

“அதைத்தானே கேட்டேனே” குமாரசாமி அழுத்திக் கூறினான்.

“காலையில் பார்த்துவிட்டேன், அவன் சுகமாக இருக் கிறான். ஏதாவது சீறியஸ் என்றால் நேர்ஸ் எனக்கு அறிவிப் பாள். என் கடமை எனக்குத் தெரியும்”.

“நீ மக்கள் சேவகன், உன் கடமையை சுட்டிக்காட்ட எனக்கும் அதிகாரமிருக்கு”

மணியடித்துவிட்டது. இங்கே நிற்கவே உனக்கு உரிமை கிடையாது. நீ எனக்கு அதிகாரியாக மாறப்பார்க்கிறாய்’ அதிகாரத்தொனியில் டாக்டர் கூறினார்.

“பொறுத்திருந்து பார், ஒருநாளைக்கு அதிகாரியாக மாறு கிறோமா இல்லையா என்று. அப்போது உங்களை என்ன செய்வது என்பதுபற்றி மக்கள் தீர்மானிப்பர்”.

உணர்வோடு சுட்டு விரலை உயர்த்திக் காட்டிவிட்டு சுந்தரத்தின் கட்டிலை நோக்கி நடந்தான்.

*(செப்.1974)*

# தாலியும் போய்விடும்

"என்ன தங்கம் காலங்காத்தாலை இந்தப் பக்கம்"

தலைவாசல் குந்தில் சோர்ந்த முகத்தோடு வந்திருந்த தங்கரத்தினத்தைப் பார்த்து முத்தம்மா கேட்டாள். முத்தம் மாவிற்கு தங்கம் ஏன் வந்திருக்கிறாள் என்று உள்ளூரத் தெரியா மலில்லை. அவள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அந்த நாள் வந்தது. ஆயினும் வரவேற்கும் முறைப்பேச்சாக சொல்லிக்கொண்டே தங்கத்தை பார்க்காதவளாக தலைவாசல் புறமாக சாத்தியிருந்த கோடரியை எடுத்துக் கொண்டுபோய் வெளியே நின்ற மாணிக்கனிடம் விறகு கொத்துவதற்காகக் கொடுத்தாள். கமக் காறிச்சி ஒரு பொயிலைத்துண்டு தா என்று மாணிக்கம் கேட்க அதை எடுப்பதற்காக அறைக்குள் சென்று வந்தாள்.

"வெங்காயந்தானே இந்தமுறை ஏமாத்திப் போட்டுது. 140 ரூபாய்க்கு விதை வெங்காயம் வாங்கித் தாட்டம். கிண்டேக்கை புழுத்த மலிவாய் போய்ச்சு. நாப்பத்தைஞ்சு ரூபாய்க்கு கொட்டி அளந்தம்..."

தங்கம் அழாக்குறையாகச் சொன்னாள்.

"ஊரிலே பாண் வாங்க சனத்திட்டை காசில்லை. வெங் காயத்தை திண்டு வயித்தை நிரப்பமுடியுமா? இந்தமுறை வெங்காயம் தாட்டவையெல்லாம் தலையிலே கைவைக்க வேண்டி வந்திட்டுது".

மாணிக்கன் இடைமறித்துச் சொன்னான்.

"மிளகாய்க் கண்டாதல் நட்டு இந்த நட்டத்தை மீட்கவேணு மென்று தகப்பனும் மகனும் நிற்கினம்........."

"கமக்காறிச்சி நான் சொல்லுறன் என்று குறை நினைக்க வேண்டாம். ஏதேன் தினையை, குரக்கனை நடுங்கோ. விலை குறைஞ்சாலும் பஞ்சம் பசிக்காதல் ஈடு குடுக்கும்....."

மீண்டும் மாணிக்கன் இடைமறித்துச் சொல்ல முத்தம்மா புகையிலைத்துண்டை அவனிடம் நீட்டினாள். அதை வாயில் போட்டுக்கொண்டே கோடரிப்பிடியை சிராய்வைத்து இறுக் கத் தொடங்கினான். மாணிக்கனது பேச்சில் அதிகம் கவனம் செலுத்தாதவளாக தங்கம் தொடர்ந்தாள்.

"எருப்பறிக்கவேணும், மெசின் திருத்தவேணும் என்று வீட்டிலை நெருங்கினம். அதுதான் இந்தத் தாலிக்கொடியை வைச்சுக்காசு வாங்கலாமென்று காலையிலை புறப்பட்டன்".

தங்கம் கூறியபடியே தன் ஒரே சொத்தான தாலிக்கொடி யைக் கழட்டினாள். முத்தம்மாவிடம் பணம் இருக்கும். மறுக்க மாட்டாள் என்பதையும் தங்கம் அறிவாள். பழங்கதையை மறந்து விட்டதாக நடித்தாள்.

"ஏதோ கஷ்டம், அதுதான் வந்திருக்கிறாய் என்றுதான் நினைச்சன். எவ்வளவு வேணும்?"

முத்தம்மாவும் மறந்ததாகவே காட்டிக் கொண்டாள்.

முத்தம்மா இரங்குவது போல நயமாகப் பேசியபோதும் தங்கம் மீண்டும் அங்கு தாலிக்கொடியைக் கொண்டு வந்தது அவள் உள்மனதைப் பூரிக்கவே செய்தது. உருளைக்கிழங்கு விற்றதும் கடனையும் வட்டியையும் வீசிவிட்டு தாலிக் கொடியை வாங்கிப் போட்டுக்கொண்டு சென்ற நடையைப் பார்த்து அவள் மனம் புழுங்கினாள்.

“என்ரை பணத்தை முதல் போட்டதாலை தான் இப்ப உங்களிட்டை கொஞ்சம் பணம் புழங்குது. அதுக்காக எறிஞ்சு பேசாதை”

“சும்மாவா பணம் தந்தனி, என்ரை தாலியைக்கூடதந்தன். நீ வட்டி வாங்கேல்லையா? நாங்கள் பாடுபட்டுழைச்சு வட்டி யாய் தந்ததைத் தான் பிறகும் எங்களுக்குத்தந்து வட்டி வாங்கிறாய்”

அவ்வேளை இருவரிடையேயும் நடைபெற்ற உரையாட லில் சில வார்த்தைகள் பசுமையாக இருவர் நெஞ்சிலும் முள்போல உறுத்திக் கொண்டிருக்கவே செய்தது.

“தோட்டக்காரர் கையில் இப்ப பணம் புரளுவதால் புதிய மவுசுவந்துவிட்டது” என்று தன்னோடொத்த பழைய பணக் காரரோடு சேர்ந்து முத்தம்மா புறங்கூறிவந்தாள். தங்கம் தாலியைக் கொண்டு தன்னிடம் இன்னொருதடவை வரவேண் டும் என்று பிள்ளையாரை வேண்டினாள்.

முத்தம்மாவிடம் மீண்டும் தாலியைக் கொடுக்க வர வேண்டிய நிலை ஏற்படாது என தங்கம் அன்று துணிவோடு சென்றாள்.

முத்தம்மா புருஷன் மலாயன் பென்சன்காரர். அவர் இருக்கும் போதே தொடங்கிய அடைவு பிடிக்கும் தொழிலை தன் தாலி இழந்த பின்னரும் தொடர்ந்து செய்து வந்தாள். ஒரு மகள் மட்டும் ஊரோடு, இருபிள்ளைகள் கொழும்பில் உத்தி யோகத்தில், மற்றொரு மகள் திருமணம்செய்து லண்டனில். எல்லோரும் தாய்க்கு செலவிற்கென மேலும் பணம் அனுப்பி வந்தனர். அவள் அவற்றையும் வட்டிக்குக் கொடுத்துப் பெருக்கி வந்தாள்.

“எண்ணூறு தந்தால் போதும்”

தாலிக் கொடியை முத்தம்மாவின் கையில் கொடுத்த போது தங்கத்தின் இதயத்தில் ஏற்பட்ட தாக்கம் கைகளையே சோரச் செய்தது. முகம் களை இழந்தது. மூக்கில் துளிர்த்த வேர்வைத் துளிகளை சேலைத் தலைப்பால் துடைத்தாள். காலம் போற போக்கில் விலைகள் நாள் தோறும் ஏறிவருவதையும் வெங் காயம், மிளகாய் விலை வீழ்வதையும் பார்த்தால் மீட்க முடியாது போய் விடுமோ என்ற பயம் தோன்றியது முகத்தில் தெரிந்தது.

பிள்ளையார் கோவில் தேரின் போது தங்கம் கழுத்தில் தாலிக்கொடியோடு, சிவத்த நிறத்தில் அகலமான கறுத்த கரைபோட்ட காஷ்மீர் பட்டுச்சேலை ஒன்றை உடுத்து எடுப் பாக நடந்து திரிந்த போது முத்தம்மாவின் மனம் எரிந்தது. கிராம வங்கி வேறு சதவட்டிக்குக் குறைவாக கடன் கொடுத்து வந்ததையும் கண்டு புழுங்கினாள்.

அவளென்ன வேறும் சிலர் அந்தப் பக்கமே வராததும், புதிய சேலைகள் வாங்கிக் கட்டுவதும், வீட்டுக்கு தளபாடங்கள் வாங்குவதையும் கண்டு, கேட்டு வெந்தாள். புதுப்பணம் தங்களையெல்லாம் மிஞ்சி விடுமோ என்று பயந்தாள். அந்தப் பகுதியில் ஒரு சில புது வீடுகள் எழும்புவதைக் கண்டும் வெதும்பினாள்.

“உன்னை என்ன நான் நம்பாமலா. இப்ப ரண்டு சத வட்டிதான் வாங்கிறன். மாதம் மாதம் வட்டிப் பணத்தை கொடுத்திடு”

முதல் அல்ல வட்டியே அவளுக்கு வேண்டும். முத்தம்மா பயந்ததற்கு மாறாக நிலமை மாறிவருவதைக்கண்டு மனம் மகிழ்ந்தாள். வெங்காய வீழ்ச்சி மீண்டும் பலரை அவளிடம் வரச்செய்தது. கிராம வங்கித் தவணைப் பணத்தையே அவர் களால் மாதா மாதம் ஒழுங்காகக் கட்ட முடியவில்லை. அதைக்

கட்டவும் புதிய முதலீடுசெய்யவும் அவளிடம் தாலிகளும் நகைகளும் வரத்தொடங்கின. தங்கத்தின் வரவை அவள் எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தாள். வட்டியையும் உயர்த்திக் கொண்டாள். தங்கம் எதுவும் பேசாது சோர்ந்த முகத்தோடு இருந்தாள்.

தங்கத்தின் முகத்தையும் தாலியிழந்த கழுத்தையும் பார்த்தபடி வெற்றிப் பெருமிதத்தோடு முத்தம்மா கையில் தாலியோடு உள்ளேசென்றாள். விதவையானபின் பிறர் கழுத்தில் தாலியைக் காண அவள் நெஞ்சு எரிவதுண்டு. தாலியை ஒரு கடுதாசி உறையில் போட்டுக் கட்டி, பெயர் எழுதி வைத்துவிட்டு, ரூபாவை எண்ணி எடுத்து, கணக்கு எழுதிவைத்து அயன்சேவை பூட்டி சரிபார்க்கும் வழமையான வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

“உந்தக் கிழவி ஆருக்கிதையெல்லாம் சேர்த்துவைக்குது”

மாணிக்கம் தங்கத்திற்குச் சொல்லிக்கொண்டிருந்தான்.

“வட்டிக்குக்கொடுத்து பணம் சேர்ப்பது மனுஷிக்குத் தொழில். சாகுமட்டும் அதை செய்துகொண்டேயிருக்கும். பிள்ளைகளின் சொத்தோடு இதுவும் சேரும்”.

“அதுமட்டும் ஊர்ப்பெடியங்கள் உதையெல்லாம் விட்டு வைக்கப் போறாங்களா, இப்பவே கொதிச்சுக் கொண்டிருக் கிறார்கள்”.

முத்தம்மா காசோடு தலைவாசலுக்கு வந்தாள். அவளுக்கு தங்கத்தில் நல்ல நம்பிக்கை. தாலிக்கொடிக்காக எவ்வளவு கேட்டிருந்தாலும் கொடுத்திருப்பாள்.

தங்கம் எப்படியும் தன் தாலிக்கொடியை மீட்கவேண்டும் என்ற நினைவோடு, மூத்தவன் ஆயிரம் வேண்டிவரும்படி கூறியபோதும், அளவாக எண்ணூறு ரூபாவே கேட்டிருந்தாள்.

முத்தம்மா கொடுத்த எட்டு நோட்டுகளையும் தங்கம் எண்ணிப் பார்த்து மார்புக்குள் வைத்து முந்தானைச்சேலை யால் மூடிக்கொண்டு எழுந்தாள்.

“பிறகும் சொல்லுறன்பிள்ளை கோவிக்காதை. நான் சொன்னதெண்டு தம்பியிட்டையும் சொல்லுங்கோ. மிள காயை விட்டிட்டு ஏதேன் தினை, குரக்கன் நடுங்கோ, பெரிய பஞ்சம் வந்தாலும் தாக்குப்பிடிக்கும். இல்லாட்டால் தாலியும் போய் விடும்”.

மாணிக்கம் சொல்லிக்கொண்டே கோடரியையும் எடுத்துக் கொண்டு எழுந்தான்.

*(செப்.1974)*

## கூப்பன் வேண்டாம்!

சின்னராசா வாங்கிவந்த இரண்டு றாத்தல் பாணையும் சிறுதுண்டுகளாக சீதேவி வெட்டினாள். வெட்டி முடியு முன்னரே சின்னராசா உட்பட நான்கு பிள்ளைகளும் எனக்கு, உனக்கு என்று போட்டியிட்டு, பறித்துச் சாப்பிட்டனர். அவளது ஆறு மாதக் கைக்குழந்தை மட்டும் அந்தப் போட்டியில் ஈடுபடவில்லை. அது மூத்திரம் நனைந்த பாயில் கிடந்து கத்திக்கொண்டிருந்தது.

“எனக்கு பசிக்குது. இன்னும் ஏதேன் தின்னத்தா அம்மா”

மூன்றாவது பிள்ளை சத்தியன் கெஞ்சலாகக் கேட்டான்.

“அவ்வளவுதான். போய் தண்ணியைக் குடி”

சீதேவி அதட்டிக் கூறினாள். ஆயினும், ‘பிள்ளைகளின் வயிற்றை நிரப்ப முடியவில்லையே’ என்று அவள் நெஞ்சு குமுறியது. அவள் வயிறே எரிவது பற்றி கேட்பதற்கு எவரு மில்லை. எந்தப் பிள்ளைக்கும் ஒரு வருடத்திற்கு அவள் பால் மாவே வாங்கியது கிடையாது. இந்தப்பிள்ளைக்குமட்டும் இத் தனை விரைவில் பால் வற்றிவிட்ட காரணத்தை அவள் அறியா மலில்லை. இப்போது பால்மாவே எட்டாததாகி விட்டது.

அயல் வீட்டு அன்னத்திடம் அரைப்போத்தல் பால் வாங்கிக் காய்ச்சியிருந்தாள். அதில் ஒரு பங்கை குவளையில் ஊற்றி ஆற்றி விட்டு சீனிப்பேணியைத் தடவினாள். வெற்றுப்பேணி.

ஆத்திரமே மேலிட்டது. சிறிது முன்னரேயே கைக்குழந்தைக் காக வைத்திருந்த கடைசி அரை றாத்தலையும் அண்மையி லிருந்த பெட்டிக்கடைக்கு அனுப்பி இரண்டு ரூபாவிற்கு விற்று பாண் வாங்கிவரச் செய்தாள். அப்போது பேணியின் அடியைத் துடைத்து ஓரிரு நாளைக்கு கைக்குழந்தைக்கு சமாளிக்கலாம் என்று நம்பியிருந்தாள். பேணியை மறந்துபோய் கீழே வைத்துவிட்டு சின்னராசாவிடம் அரை றாத்தலளவு எடை வரக்கூடியது எனக் கணக்கிட்ட சீனியை விற்க அனுப்பி யிருந்தான். அதற்கிடையில் சத்தியன் வழித்துத் துடைத்துப் பதம்பார்த்து விட்டாள்.

"இவன் அசுரப்பசியோடு பிறந்தவன். இவனை இந்தப் பஞ்ச காலத்தில் எப்படி வளர்த்தெடுக்கப்போறன்"

சீதேவி தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு ஆத்திரம் தாங்க முடியாது புகைந்தபடி சத்தியம் முதுகில் அடித்தாள்.

"குழந்தையின் சீனியையும் திருடித் திண்டுபோட்டு பிறகு என்னடா பசி என்று கத்துகிறாய்"

கைக்குழந்தையைத் தூக்கி அணைத்து, ஆற்றியபடி தமக் காக வைத்திருந்த கருப்பட்டித்துண்டை நொருக்கி பாலில் இட்டு கரைத்தாள். பாலைக் கொடுக்கும்போதே இது குழந்தைக்கு ஒத்துவருமோ என அஞ்சினாள். சென்ற மாதம் கொடுத்து வயிற்றுப்போக்கு வந்தது நினைவில் வந்தது.

அப்போது அன்னம் அங்கு வந்தாள்.

"அக்கா இரண்டு சுண்டு அரிசிதருவியா, நாளைக்கு வாங்கித்தாறன்"

"உனக்குத் தெரியாதா என்ன, இவர் ஏதேன் கொண்டுவந்து வாங்கினால்தான். இல்லாவிட்டால் நானே உன்னட்டை வரஇருந்தன்"

“வீட்டுக்கு வீடு வாசல்படிதான். நானும் தயக்கத்தோடை தான் வந்தன், மனங்கேக்கல்லை”

அன்னம் ஏமாற்றத்தை மறைத்துப் பேசினாள்.

“இப்படிக்கஷ்டம் யுத்தகாலத்திலையும் இருக்கேல்லை”

“உனக்கு இப்ப ஐஞ்சு பிள்ளைகள்”

“நாங்கள் ஆறுபேர் சகோதரங்கள். அப்பு நிலங்கிண்டியே பசி தெரியாது வளர்த்தார். இந்தப் பிள்ளைகளுக்கு பால், பழந்தான் கொடுக்க முடியாவிட்டாலும் பசி தெரியாதாவது வளர்க்க முடியவில்லையே என்றுதான் கவலை....”

சீதேவியின் கண்கள் கலங்கி நெஞ்சு அடைத்துக் கொண்டது.

“எல்லோருக்கும் கஷ்டந்தான்”

“பிள்ளைகள் பசியாலை துடிச்சு அழுகிறதைப் பார்த்துக் கொண்டு வாழுறதுதான் எல்லாத்திலும் கஷ்டம்...”

குழந்தையின் கதறல் கேட்டு சீதேவி ஓடிச்சென்று தூக்கி மார்பில் அணைத்தாள். குழந்தை - அவளது மார்பைத் தேடியழுதது.

“இந்தப் பச்சைக்குழந்தையின் பசியைக்கூட என்னால் தீர்க்க முடியவில்லை. அதுதான் என்னாலை இன்னும் ஆற முடியாமலிருக்கு”

சீதேவியின் கண்கள் கலங்கி மீண்டும் நெஞ்சடைத்தது.

“நீ அக்கா ஏதேன் திண்டாலெல்லோ குழந்தைக்குப் பால் வரும். பால்வேணுமெண்டால் பகலுக்கும் தீனிபோட வேண்டும்”

அன்னம் கூறினாள்.

தெருவிலே ஊர்வலம் போவதாக வேடிக்கை பார்க்க தோட்டத்திலிருந்த சிறிசுகள் ஓடின. சின்னராசாவும் தம்பி மாருடன் பசியை மறந்து ஓடினான்.

"அக்கா நீயும் வாவன் பார்ப்பம்"

அன்னம் சீதேவியை அழைத்தாள்.

குழந்தையையும் மார்போடு அணைத்தபடி சீதேவி சென்றாள். நீண்ட ஊர்வலம் நீலக்கொடிகளும் சட்டைகளும். எல்லாம் நடுத்தரவகுப்பினர்.

"சும்மா அரிசி வேண்டாம்"

"சீனி எமக்கு வேண்டாம்"

"கூப்பன்கள் எமக்கு வேண்டாம்"

சுலோகங்கள் அட்டைகளில் எழுதப்பட்டிருந்தன. குரலாகவும் சுலோகங்கள் ஒலித்தன.

சீதேவியும் இவற்றைக்கேட்டு வியப்படைந்தாள்.

"ஏன் இப்படியெல்லாம் கூச்சல் போடுகிறார்கள்?"

சீதேவி வியப்போடு கேட்டாள். அவளால் அச்சுலோகங்களை நினைத்துப்பார்க்கவே முடியவில்லை.

"இவர்கள் அரசாங்கக் கட்சியினர் அப்படித்தான் சொல்லுவர். அவர்களுக்குமட்டுந்தான் இப்போதெல்லாம் எப்படிக் கத்துவதற்கும் ஊர்வலம் போவதற்கும் உரிமையிருக்கு"

அன்னம் கூறினாள்.

"இன்றைய நிலைமையைப் பார்க்கும்போது பிள்ளைகளையும் எதிர் காலத்தையும் நினைக்கப் பயமாயிருக்கிறது".

"அப்பிடியெல்லாம் பயப்படாதை, கொடுமைகள் நீண்ட காலம் நிலைப்பதில்லை'

மேலும் ஊர்வலத்தைப்பார்க்க விரும்பாதவர்களாக இருவரும் தோட்டத்திற்குள் திரும்பினர்.

“இவருக்கு ஏதேன் நிரந்தர வேலை கிடைத்தாலும் வயிற்றையாவது நிரப்பி வாழ்ந்துவிடலாம்”

சீதேவி தன் கணவனின் நிலையை வருத்தத்தோடு கூறினாள்.

அவ்வேளை முத்தையா அங்க சோர்வோடு வந்துசேர்ந் தான்.

“ஏதேன் கொண்டுவந்தீர்களா?”

கணவன் வரவுக்காக காத்திருந்த சீதேவி கேட்டாள்.

“வேலை எதுவுமே கிடைக்கவில்லை. ஒருவனிடம் அஞ்சு ரூபா கடன் வாங்கிவந்தன், இந்தா”

“ஊர்வலம் பார்த்தீர்களா?”

சீதேவி கேட்டாள். கஷ்டத்திலும்பார்க்க ஊர்வலக்கோஷம் அவன் மனதைப் பயமுறுத்திக்கொண்டிருந்தது.

“அவர்கள் அரசுடன் இணைந்த சிறு முதலாளி வர்க்கத்தவர் கூலிக்காக கூக்குரலிடுகின்றனர்”

முத்தையா ஆத்திரம் தொனிக்க பதிலளித்தான்.

அவ்வேளை சத்தமிட்டுக்கொண்டு தோட்டத்துப் பிள்ளை கள் ஓடிய ஓசை கேட்டது. சீதேவியின் பிள்ளைகளும் மூச்சிழுக்க ஓடிவந்தனர்.

“ஏன்? என்னடா நடந்தது?”

சீதேவி ஆவலோடு கேட்டாள். மூச்சிழுக்க மூத்தவன் சின்னராசா கூறினான்:

“ஊர்வலத்திற்கு தோட்டத்துப் பெடியங்கள் கல்லெறிந்து போட்டாங்கள். பொலிசுக்காரர் துரத்திக் கொண்டுவாறாங்கள்”.

(அக.1974)

**புதிய சந்திப்பு:**

காலிமுகத்திடலில் மே தினத்தன்று நடைபெற்ற தொழிலாளர் விழாவிற்கும், மே 22இல் நடந்த குடியரசு தினத்திற்குமுள்ள முரண்பாடுகளை விளக்குகிறது. மே தினம் தொழிலாளர் விழா, குடியரசுதினம் ஆளும் வர்க்க விழா, அங்கு தொழிலாளர்களைக் காணமுடியவில்லை. முப்படை, பொலிஸ், அதிகாரிகளே விழா எடுக்கின்றனர்.

**குற்றவாளிகள்:**

அதிகாரத்துவ முதலாளித்துவத்தில் நிலப்பிரபுவிற்குப் பதிலாக டி.ஆர்.ஓ., அரசாங்க அதிபர் ஆகியோர் நிலத்தை ஆள்கின்றனர். இம்முறைகளை உடைத்தெறிய விவசாயிகளின் புரட்சிகர இயக்கங்கள் தோன்றுவதும் வரலாற்று நியதி.

**இரு முனைகள்:**

கூலி உழைப்பிற்காகவே பயிற்றப்படும் தமிழ் இளைஞர்கள் உற்பத்தி உறவில் ஈடுபட முடியாது முரண்படுகின்றனர், அரசியல் உணர்வு பெற்று புரட்சிகரமாக மாறுவதும் தவிர்க்க முடியாதது.

**வெற்றிபெற முடியாது:**

தோட்டத் தொழிலாளரின் வர்க்க நிலையை உற்பத்தி உறவோடு ஆராயும்வேளை, இந்நாட்டில் அத்துமீறிச் சுரண்டப் படும் தோட்டப்புறப் பாட்டாளிகளின் எழுச்சியும் பங்கும் இன்றி எத்தகைய புரட்சியும் வெற்றிபெறமுடியாது என்று நகர்ப்புறத் தொழிலாளி உணர்ந்து கொள்கிறான்.

Library stamp

**கடமையும் சேவையும்:**

மருத்துவ டாக்டருக்கும் தொழிலாளிக்குமிடையில் உள்ள வர்க்க வேறுபாடு ஆராயப்படுவதோடு மூளை உழைப்பு, உடல் உழைப்பிற்குமுள்ள வேற்றுமைகள் நீதியானவையா என்ற வினாவும் எழுப்பப்படுகிறது. கடமை முதலாளித்து வத்தின் அதிகாரக் குரல், சேவை சோஷலிசத்தின் தோழமை ஒலி.

**தாலியும் போய்விடும்:**

விவசாய உற்பத்தியில் பயன்பாட்டுப்பெறுமதிக்கும் (Use Value) பரிமாற்றுப்பெறுமதிக்கு (Exchange Value) முள்ள முரண்பாட்டைக் கூறுகிறது. வெங்காயம், மிளகாயிலும் பார்க்க தினை, குரக்கன் பயன்படும் என்று பாட்டாளி ஒருவன் குரல் எழுப்புகிறான்.

யாழ்ப்பாணம்
12049
Jaffna Central College Library



செ. கணேசலிங்கன் (1928):
ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான இவர் 1949ஆம் ஆண்டு எழுத்துலகில் பிரவேசித்தவர். நாவல், சிறுகதை, கட்டுரை, சிறுவர் இலக்கியம் போன்ற துறைகளில் இவரது எண்பதுக்கு மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன. ரஷ்யன், மலையாளம், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இவரது படைப்புக்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

ISBN 978-955-659-123-1
9 789556 591231
விலை ரூபா 300.00

குமரன் புத்தக இல்லம்
#313